Koviloor Digital Library

சிறுவாபுரி அமர்ந்த சிவமைந்தன் தாள்பணிந்தால்
பெருவாழ்வும் வளமும் பெருகி நிற்கும் உண்மையே



ஸ்ரீ செல்வ முத்துக்குமார ஸ்வாமி, வைத்தீஸ்வரன் கோவில்

ACC No 31523
Δ2'''3-5

சிறுவாபுரி

முருகன் அருள் மலர்

ஆடி கிருத்திகை வெளியீடு

Koviloor Digital Library

முல்லை முத்தையா நூற்றாண்டு 1920 - 2020

(நிறுவனர்: முல்லைப் பதிப்பகம்)

மகன்களும், மருமகள்களும்

முல்லை மு. பழநியப்பன்
விசாலாட்சி பழநியப்பன்
முல்லை மு. இராமநாதன்
இலட்சுமி இராமநாதன்
முல்லை மு. கருப்பையா
அபிராமி கருப்பையா

மகள்களும் - மாப்பிள்ளைகளும்

எம். மனோன்மணி
எஸ். சொக்கலிங்கம்
கலா சொக்கலிங்கம்
முருகா மா. வெங்கடாசலம்
உமா வெங்கடாசலம்

பேரன்களும், பேத்திகளும்

சி. இராமநாதன்
செல்வி இராமநாதன்
பி எல். முத்துக்குமரன்
வெ. ஐய்யப்பன்
இராம. சரஸ்வதி
கரு. முத்துக்குமார்
இராம. சௌந்தர்யா
கரு. அருண்குமார்
சி. சோலையப்பன்
பி எல். நாச்சம்மை
வெ. மணிகண்டன்

கொள்ளுப் பேத்தி

ஆர். ஸ்ரீ. சோலை

"முல்லை இல்லம்" 18A, மாயாண்டிச் செட்டியார் தெரு,
தேவகோட்டை - 630 302.

323/10, கதிரவன் காலனி
அண்ணாநகர் மேற்கு, சென்னை-40.
e-mail: mullaipathipagam@yahoo.com
Mobile : 9840358301

Koviloor Digital Library

3-5

சிறுவாபுரி முருகன் அருள் மலர்

ஆடிக் கிருத்திகை வெளியீடு

பதினான்காம் ஆண்டு

மலர் - 2020

சேகரித்து தொகுத்தவர்

முல்லை மு. பழநியப்பன்

வெளியிட்டு வழங்குபவர்கள்:

முல்லை மு.இராமநாதன்

முல்லை மு.கருப்பையா

323/10, கதிரவன்காலனி,

அண்ணாநகர்மேற்கு,சென்னை–40.

செல்: 9840358301.

e-mail: mullaipathipagam@yahoo.com

"முல்லை இல்லம்" 18A, மாயாண்டிச் செட்டியார் தெரு,

தேவகோட்டை – 630 302.

Koviloor Digital Library

உ

சிவமயம்

விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியுள் வைத்தபடி போற்றுகின்றேனே.

அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே!

Koviloor Digital Library

3/5
KOVILOOR ANDAVAN LIBRARY, KOVILOOR
A. No. 31573

உ

முருகா சரணம்

சிறுவாபுரி
திருமுருகன் திருப்புகழ் போற்றி 108

1. அகத்திய முனிக்கொரு தமிழ்த்ரயம் உரைத்தவா போற்றி
2. அடியார் சித்தத்து இருக்கும் முருகா போற்றி
3. அடி அந்தமிலா அயில் வேல் அரசே போற்றி
4. அடியார் இடைஞ்சல் களைவோனே போற்றி
5. அடியார் இருவினைத் தொகை யறுப்பாய் போற்றி
6. அடியார்கள் பங்கில் வருதேவே போற்றி
7. அத்தா நிருத்தா அரத்த ஆடையா போற்றி
8. அந்தண் மறை வேள்வி காவற்கார போற்றி
9. அமராவதி புரக்கும் ஆனைக்கு இறைவா போற்றி
10. அமருல கிறைவ உமைதரு புதல்வ போற்றி
11. அரிய மோன விழிதிறந்த நளின பாதம் போற்றி
12. அலகில் தமிழால் உயர் சமர்த்தனே போற்றி
13. அறு சமய சாத்திரப் பொருளோனே போற்றி
14. அறிவுடன் ஓது மாதவர் பெருவாழ்வே போற்றி
15. அறிவும் உரமும் அறமும் நிறமும் உடையாய்போற்றி
16. அறிவிற் பெரிய மேன்மைக்கார போற்றி
17. அன்பர் மகிழ வரங்களும் அருள்வாய் போற்றி
18. ஆதி அந்தமுமான சங்கரி குமரேசா போற்றி
19. ஆதி முடிவு அற்ற திரு நாமக்கார போற்றி
20. ஆயிர முகத்து நதி பாலா போற்றி
21. ஆறுதிருப்பதியில் வளர் பெருமாள் போற்றி
22. இன்சொல் விசாகா க்ருபாகர போற்றி
23. இணையில் அருணை பழநி கிழவ போற்றி
24. இமயவரை ஈன்ற மங்கைக்கு ஒருபாலா போற்றி

Koviloor Digital Library

25. உக்ர இறையவர் புதல்வா முதல்வா போற்றி
26. உமையாள் பயந்த இலஞ்சியமே போற்றி
27. உலகு அளவு மால் மகிழ்ந்த மருகா போற்றி
28. எந்தனுடைச் சாமிநாதா வயலூரா போற்றி
29. எழுதா மறைமா முடிவே வடிவே போற்றி
30. என்றும் அகலாத இளமைக்கார போற்றி
31. ஒருகால் முருகவேள் எனவும் அருள்தாராய் போற்றி
32. கசிவார் இதயத் தமிர்தே போற்றி
33. கடம்ப மலர் முடிக்கும் இளையோனே போற்றி
34. கரிமுகவன் இளைய கந்தப் பெருமான் போற்றி
35. கருதுவார் மனம் புகுந்த பெருமாளே போற்றி
36. கர்பர் கயிலாயர் மைந்த வடிவேலா போற்றி
37. கவுரி நாயகனார் குரு நாயக போற்றி
38. குருபுங்கவ எண்குண பஞ்சரனே போற்றி
39. குன்றுருவ ஏவும் வேலைக்கார போற்றி
40. குமர குரு கார்த்திகைப் பெருமாளே போற்றி
41. குவடு தவிடு படக் குத்திய காங்கேயா போற்றி
42. குறமகள் தார்வேய்ந்த புயனே போற்றி
43. குறமகளை வந்தித்து அணைவோனே போற்றி
44. சகல வேதமுமே தொழு சமரபுரிப் பெருமாள்போற்றி
45. சரவணத்திற் பிறந்த ஒரு கந்தசுவாமியே போற்றி
46. சம்பந்தன் எனத் தமிழ் தேக்கிய பெருமான் போற்றி
47. சிந்தா குலத்தை அடர் கந்தா போற்றி
48. சிலைகள் உருவிட அயிலைவிடு குமர போற்றி
49. சிவகாம சுந்தரியே தரு பாலக போற்றி
50. சூர்மா மடியத் தொடுவேலவனே போற்றி
51. செஞ்சொல் அடியார்கள் வாரக்கார போற்றி
52. செஞ் சேவற், செங்கையுடைய சண்முகா போற்றி
53. செந்தமிழ் சொல் நாலு கவிதைக்கார போற்றி
54. செந்தமிழ் நூல் விரித்த செவ்வேள் போற்றி
55. செவ்வான் உருவில் திகழ் வேலவா போற்றி
56. சேலார் வயல் பொழில் செங்கோடைக்குமர போற்றி

Koviloor Digital Library

57. சேயே வேளே பூவே கோவே போற்றி
58. சோதி கார்த்திகை பெற்ற விளக்கொளி போற்றி
59. ஞானகர சுர பாஸ்கரனே போற்றி
60. தமிழ் சோதித்து அலங்கல் அணி அத்தா போற்றி
61. தமிழ்தனை கரை காட்டிய திறலோனே போற்றி
62. த்ரியம்பகி அளித்த செல்வச் சிறுவா போற்றி
63. திங்கள் சூடிய நாயகர் பெருவாழ்வே போற்றி
64. திருக்குராவடி நிழல் தனில் உறைவோய் போற்றி
65. திருந்த வேதம் தண்தமிழ் தெரிதருபுலவ போற்றி
66. திருமுக சந்தர முருக கடம்ப சிவசுத போற்றி
67. திருநடனம் இடு மயிலில் வரு குமர போற்றி
68. திமிர தினகர முருக சரவணபவ போற்றி
69. திறல் பூண்ட சுப்ரமண்ய ஷண்முகவேலா போற்றி
70. தீர தீர தீராதி தீரப் பெரியோனே போற்றி
71. தேவ தேவ தேவாதி தேவப் பெருமாள் போற்றி
72. தூவிக்குல மயில் வாகனனே போற்றி
73. தெரிவை பாரதியர் சாதியிலாதவர் தருசேய் போற்றி
74. தெய்வ வாரண வநிதை புநிதா போற்றி
75. தொழுது வழிபடும் அடியர் காவற்கார போற்றி
76. நக்கீரர் சரண் என வந்தருள் முருக போற்றி
77. நீலக்ரிப கலாபத் தேர்விடு சேவகா போற்றி
78. நீர் பெருஞ் சடையாரருள் தேசிகா போற்றி
79. நிதியே நித்தியமே என் நினைவே போற்றி
80. நினைத்ததை முடித்தருள் க்ருபைக் கடல் போற்றி
81. பச்சை மாமயில் மெச்ச ஏறிய பாகா போற்றி
82. பரமற்கு அருமறை உபதேசித்த தேசிகா போற்றி
83. பரமகல்யாணி தந்த பெருவாழ்வே போற்றி
84. பல குன்றிலும் அமர்ந்த பெருமாள் போற்றி
85. பொன்பரவு கதிர்வீசு வடிவேலா போற்றி
86. மகமாயை களைந்திட வல்லபிரான் போற்றி
87. மஞ்சரி குஞ்சரி தோய் காங்கேயா போற்றி
88. மணம் அறாத கடம்பு பனைவோய் போற்றி

Koviloor Digital Library

89. மதுமலர்க் கண் துயில் முகுந்தன் மருகா போற்றி
90. மந்தாகினி தந்த வரோதயனே போற்றி
91. மயில் கொண்டு உலகு நொடியில் வருவாய் போற்றி
92. மன்னா குறத்தியின் மன்னா வயற்பதி மன்னாபோற்றி
93. மறவாதவர் நினைப்பவை முடிப்பவா போற்றி
94. மாநிலம் ஏழினும் மேலான நாயக போற்றி
95. முத்தமிழை ஆயும் வரிசைக்கார போற்றி
96. மைவருங் கண்டத்தர் மைந்தா போற்றி
97. வடிவும் இளமையும் வளமையுமுடையாய் போற்றி
98. வாசக அதீத மனோலய பஞ்சுரா போற்றி
99. வாசுகி எடுத்துதவும் வாசிக்காரா போற்றி
100. வாவியில் உதித்த முகமாயக்காரா போற்றி
101. வாகை புனை குக்குட பதாகைக் கார போற்றி
102. வேடர் குலப் பிடிதோய் மலையே போற்றி
103. வேதாள கணம் புகழ் வேலவனே போற்றி
104. வை வைத்த வேற்படை வானவனே போற்றி
105. வேத ஆகம சித்ர வேலாயுதனே போற்றி
106. வேலும் மயிலும் நினைந்தவர் துயர்தீர அருள்வாய் போற்றி
107. சந்ததமும் அடியார்கள் சிந்தையது குடியான
தண் சிறுவை தனில் மேவும் பெருமான் போற்றி போற்றி
108. வளம் மிகுந்த சிறுவை மேவி
வரம் மிகுந்த பெருமான் போற்றி போற்றி

திருப்புகழ், கந்தரநுபூதி, கந்தரலங்காரம்,
திருவகுப்பு வேல், மயில், சேவல்
விருத்தம் ஆகிய நூல்களிலிருந்து

தொகுப்பு

தி. ராஜமாணிக்கம், பொள்ளாச்சி
வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன்

Koviloor Digital Library

சிறுவாபுரி முருகன் வேல் போற்றி-108

1.	ஓம்	சீர்மிகு செந்தில் வேல்	போற்றி
2.	ஓம்	திருத் தணிகை வேல்	போற்றி
3.	ஓம்	பழனி வேல்	போற்றி
4.	ஓம்	பரங்குன்றக் குமரன் வேல்	போற்றி
5.	ஓம்	ஏரகத்து எம்மான் வேல்	போற்றி
6.	ஓம்	அழகர்மலை அழகன் வேல்	போற்றி
7.	ஓம்	குன்றுதோறாடும் குழகன் வேல்	போற்றி
8.	ஓம்	தனி வேல்	போற்றி
9.	ஓம்	சுடர் வேல்	போற்றி
10.	ஓம்	செவ் வேல்	போற்றி
11.	ஓம்	வெற்றி வேல்	போற்றி
12.	ஓம்	நல் வேல்	போற்றி
13.	ஓம்	அயில் வேல்	போற்றி
14.	ஓம்	பெரு வேல்	போற்றி
15.	ஓம்	பரு வேல்	போற்றி
16.	ஓம்	கருணை வேல்	போற்றி
17.	ஓம்	முரண் வேல்	போற்றி
18.	ஓம்	அழகு வேல்	போற்றி
19.	ஓம்	கனக வேல்	போற்றி
20.	ஓம்	வச்சிர வேல்	போற்றி
21.	ஓம்	வைர வேல்	போற்றி
22.	ஓம்	மாணிக்க வேல்	போற்றி
23.	ஓம்	தங்க வேல்	போற்றி
24.	ஓம்	சதுர் வேல்	போற்றி
25.	ஓம்	சான்விமுளை வேல்	போற்றி

Koviloor Digital Library

26. ஓம் கூர் வேல் போற்றி
27. ஓம் ஜய வேல் போற்றி
28. ஓம் வடிவேல் போற்றி
29. ஓம் திணி வேல் போற்றி
30. ஓம் அருள் வேல் போற்றி
31. ஓம் ஓம் ஐம் ரீம் வேல் போற்றி
32. ஓம் கதிர் வேல் போற்றி
33. ஓம் வீர வேல் போற்றி
34. ஓம் தீர வேல் போற்றி
35. ஓம் ஐ வேல் போற்றி
36. ஓம் தாரை வேல் போற்றி
37. ஓம் செவ்வேள் திருக்கை வேல் போற்றி
38. ஓம் வாரி குளித்த வேல் போற்றி
39. ஓம் முத்தையனார்கை வேல் போற்றி
40. ஓம் கொற்ற வேல் போற்றி
41. ஓம் சூர்மார்பு தொளைத்த வேல் போற்றி
42. ஓம் குன்று எறிந்த வேல் போற்றி
43. ஓம் வினைதீர்க்கும் வேல் போற்றி
44. ஓம் இடர்களையும் வேல் போற்றி
45. ஓம் ஞான வேல் போற்றி
46. ஓம் குமர வேல் போற்றி
47. ஓம் சக்தி வேல் போற்றி
48. ஓம் குழந்தை வேல் போற்றி
49. ஓம் நீதி வேல் போற்றி
50. ஓம் புனித வேல் போற்றி
51. ஓம் துணை வேல் போற்றி
52. ஓம் என் இதயவேல் போற்றி
53. ஓம் எனை காக்கும் வேல் போற்றி
54. ஓம் துன்பம் போக்கும் வேல் போற்றி
55. ஓம் துயர் துடைக்கும் வேல் போற்றி

56. ஓம் இன்பம் அளிக்கும் வேல் போற்றி
57. ஓம் அடல் வேல் போற்றி
58. ஓம் வை வேல் போற்றி
59. ஓம் ஒளி திகழ் வேல் போற்றி
60. ஓம் பகை கெடுக்கும் வேல் போற்றி
61. ஓம் பலமளிக்கும் வேல் போற்றி
62. ஓம் பயம் போக்கும் வேல் போற்றி
63. ஓம் புலமை நல்கும் வேல் போற்றி
64. ஓம் சித்தி தரும் வேல் போற்றி
65. ஓம் முத்தி தரும் வேல் போற்றி
66. ஓம் அடியாரோடிணைக்கும் வேல் போற்றி
67. ஓம் அன்பை வழங்கும் வேல் போற்றி
68. ஓம் பிணியைப் போக்கும் வேல் போற்றி
69. ஓம் பிறவாமை அருளும் வேல் போற்றி
70. ஓம் நல்லன எல்லாம் தரும் வேல் போற்றி
71. ஓம் தனம் தரும் வேல் போற்றி
72. ஓம் தளர்வறியா மனம் தரும் வேல் போற்றி
73. ஓம் தெய்வ வடிவும் தரும் வேல் போற்றி
74. ஓம் சினம் கெடுக்கும் வேல் போற்றி
75. ஓம் காலனைக் கடியும் வேல் போற்றி
76. ஓம் காவலாய் வரும் வேல் போற்றி
77. ஓம் கவலையெல்லாம் போக்கும் வேல் போற்றி
78. ஓம் நெய் வைத்த வேல் போற்றி
79. ஓம் கேடில் வேல் போற்றி
80. ஓம் சிங்கார வேல் போற்றி
81. ஓம் அடியார் உள்ளத்தில் இருக்கும் வேல்போற்றி
82. ஓம் அன்பர்க்கருகில் இருக்கும் வேல் போற்றி
83. ஓம் வம்பர்களை வாட்டும் வேல் போற்றி
84. ஓம் துஷ்டர்கள் கைதுணிக்கும் வேல் போற்றி
85. ஓம் குறை தீர்க்கும் வேல் போற்றி

Koviloor Digital Library

86. ஓம் குற்றம் களையும் வேல் போற்றி
87. ஓம் எழில் வேல் போற்றி
88. ஓம் அண்டினரைக் காக்கும் வேல் போற்றி
89. ஓம் அசுரர்களை அழித்த வேல் போற்றி
90. ஓம் அமரர்க் கபயம் அளித்த வேல் போற்றி
91. ஓம் அடியவர் துயரை அழித்திடும் வேல் போற்றி
92. ஓம் அழல் வேல் போற்றி
93. ஓம் சிந்து வேல் போற்றி
94. ஓம் சித்திர முனை வேல் போற்றி
95. ஓம் துங்கத் தனி வேல் போற்றி
96. ஓம் பேர் பெரிய வேல் போற்றி
97. ஓம் மந்த்ர வேல் போற்றி
98. ஓம் வெற்றி முனை வேல் போற்றி
99. ஓம் குன்றம் பிளந்த வேல் போற்றி
100. ஓம் அகிலமெல்லாம் போற்றும் வேல் போற்றி
101. ஓம் எண்ணியதை எளிதில் தரும் வேல் போற்றி
102. ஓம் ஏக்கத்தைப் போக்கும் வேல் போற்றி
103. ஓம் என்றும் எங்கும் இருக்கும் வேல் போற்றி
104. ஓம் இன்பமே தரும் இனிய வேல் போற்றி
105. ஓம் சஷ்டிநாதன் கைவேல் போற்றி
106. ஓம் குரவடிக் கோமான் கை வேல் போற்றி
107. ஓம் நவரத்தின வேல், வேல் போற்றி
108. ஓம் சீர்மிகு சிறுவாபுரி செல்வன் கைவேல் போற்றி

இந்த 108-ம், சஷ்டிக் கவசம், சண்முக கவசம், திருமுருகாற்றுப்படை வெண்பா, வேல், அலங்காரம், திருப்போரூர்ச் சந்நிதி முறை ஆகியவைகளிலிருந்து தொகுக்கப் பெற்றுள்ளது.

தொகுப்பு:
'செந்திலடிமை' திரு. சி. குமாரஸ்வாமி

Koviloor Digital Library

சிறுவாபுரி வள்ளி மணவாளப் பெருமான் திருப்புகழ் போற்றி - 108

1. அன்புதரு குறமங்கை வாழ்வாம்புயனே போற்றி
2. அன்னை விரும்பிய குறமானை அண்மிவிரும்பிய பெருமாளே போற்றி
3. அணிதழை உடுத்துலவு குறமகள் மணக்கும் ஆறுமுகவா போற்றி
4. அந்தண் வரையில் மங்கைமருவு மணவாளா போற்றி
5. அளிசேர் குழல்மேவு குறத்தியை அணைவோனே போற்றி
6. அமுதச் சொருபத்த குறத்தி மணங் கொள்வோனே போற்றி
7. அரிய கானக மேவு குறத்தி பத்தினி மணவாளா போற்றி
8. அபிராம நாயகி பரிபுர பாதச் சேகர போற்றி
9. அழகிளங் குறமானார் தேனார் மணவாளா போற்றி
10. அழகிய குறமகள் தார்வேய்ந்த புயனே போற்றி
11. ஆராத க்ாதல் வேடர் மடமகள் கணவ போற்றி
12. ஆறிரு புயத்தில் வாழ்வு பெறு குறத்தி மணவாளா போற்றி
13. ஆறுமுகனே குறத்தி மணவாளா போற்றி
14. இளங்குறத்தி மிகுமாலொடு அன்பு வைத்த பெருமாளே போற்றி
15. எங்கள் மானின் மகிழும் நாயகா போற்றி
16. எந்த நேரத்திலும் கோலக் குறத்தியுடன் வருவான் போற்றி
17. ஏனல் காத்த சிறுமியை வேடம் மாற்றி வழிபடும் இளையோன் போற்றி
18. ஒரு ஞானபத்தினியைத் திருமார் புறத்தழுவும் அயில்வேலா போற்றி
19. ஓவியம் எனத்திகழும் மேதகு குறத்தி திருவேளைக்காரனே போற்றி
20. ககன மேவுவாள் ஒருத்தி மணவாளா போற்றி
21. கலைவிற் கட்குற மகள் கேள்வா போற்றி
22. கானகக் குறமாதை மேவிய ஞான சொற்குமரா போற்றி
23. கானச் சிறுமானை நினைந்து ஏனற்புன மீது நடந்தவா போற்றி
24. காவல் மாதினொடு ஆவல் செய்து அணைவோனே போற்றி
25. கான மடந்தை மணவாளா போற்றி
26. கான வேல் வேடர் கொடுகோவே போற்றி
27. கானவர் சிறுமியோடு உருகிய பெருமான் போற்றி
28. குணத்திற்கு சிறந்த மகராசி குறத்திக் கிசைந்த பெருமாளே போற்றி

Koviloor Digital Library

29. குளிர்சாரல் வள்ளிமலை வாழும் கொடிகோவே போற்றி
30. குன்ற மறமான் ஆசை கூரும் நண்ப போற்றி
31. குன்றுறை குறமகள் மணவாளா போற்றி
32. குறத்தி தனக்கு மனப்ரிய முற்றிடு குமரேசா போற்றி
33. குறத்தியைக் கைப்பிடித்த பெருமாளே போற்றி
34. குறத்தி சொல் தித்திப்பை இச்சிக்கும் மணவாளா போற்றி
35. குறத்திருவை புணர் பொற்புய வீரா போற்றி
36. குறத்திருவுக்கு அமைவுற்ற மணிப்புயத்தனே போற்றி
37. குறத்தேன் மாது பங்கா போற்றி
38. குறமகள் அழகொடு தழுவிய பெருமாளே போற்றி
39. குறமகட்கு சித்தமும் வைத்துத் திரிவோனே போற்றி
40. குறமங்கை விரும்பிய தம்பிரானே போற்றி
41. குறநற்பாவை தாட்பணி கருணைய போற்றி
42. குறவர் இளவஞ்சி மருவும் அழகா போற்றி
43. குறவர் மாமகள் ஆசை தணிக்கும் திருமார்பா போற்றி
44. குறவர் தம்மகளை கருணையோடணையும் மணிமார்பா போற்றி
45. குறப் பெண் மகிழ்ச்சி கொள் மணவாளா போற்றி
46. குறமின் கொடிதோள் புணரும் குணபூதரனே போற்றி
47. குறமகள் தனை மணமருள்வோனே போற்றி
48. குறமகள் பாதம் போற்று பெருமாள் போற்றி
49. குறமகள் இங்கித மணவாளா போற்றி
50. குறமங்கை பங்கயம் வரநின்று கும்பிடும் பெருமாள் போற்றி
51. குறமான் மகிழ் முத்தமிழாகரனே போற்றி
52. குறிஞ்சியில் வாழும் இளம் கொடியாள் கணவா போற்றி
53. குறிஞ்சி அணங்கை மணந்தவா போற்றி
54. கொச்சைக் குறமகள் மெச்சித்தழுவிய திருமார்பா போற்றி
55. கொடியிடை பிடிநடைக் குறமகள் கணவா போற்றி
56. கோவைப் பாவை கூடப்பாடித் திரிவோனே போற்றி
57. சரசக் குறத்தி மணவாளா போற்றி
58. சித்திரமான குறத்திக் கணவா போற்றி
59. சீதப்பாத குறப் பெண் மகிழ்ச்சி கொள் மணவாளா போற்றி
60. சுகமோகினி வளிநாயகி மணவாளா போற்றி
61. சுந்தர ஞான மென் குறமாது கணவ போற்றி
62. சொருபக் குறத்தி மணவாளா போற்றி
63. சோதி வனசரி மணவாளா போற்றி

Koviloor Digital Library

64. ஞானக் குறமானை மணந்தவா போற்றி
65. தண்குறமகள் பதமலர்ப் பணி மணவாளா போற்றி
66. தனி வனத்தினில் புனமறத்தியைத் தழுவு பொற்புய திருமார்பா போற்றி
67. தினை காக்கும் ஒண் கிளிதன் மணவாளா போற்றி
68. தினைகாவல் பத்தினி தோள் மேவும் உத்தம போற்றி
69. தினைப்புன மோகன மானை அணைவோனே போற்றி
70. தினைப்புன முனே நடந்து குறக்கொடியையே மணந்தவா போற்றி
71. தினை வனங் கிளிகாத்த சவுந்தரி கணவ போற்றி
72. தினை தரு வனமே மருவி குறமாதை அணைவோடா போற்றி
73. தீதிலா வஞ்சி சீதபாதம் படும் சேகரா போற்றி
74. தீரா குஹா குறத்தி மணவாளா போற்றி
75. தூசா மணியும் துகிலும் புனைவாள் நேசா போற்றி
76. தெய்வ வள்ளி மையல் கொள்ளும் செல்வ பிள்ளை போற்றி
77. தேனார் மொழி வள்ளி நாயகா போற்றி
78. நற்புனந்தனில் வாழ்வளி நாயகி மணவாளா போற்றி
79. நிறை தினைகாவல் காத்த வள்ளி நாயகனே போற்றி
80. நினைவோர் சித்த மொடகலா மற்புகு நிழலாள் பத்தினி மணவாளா போற்றி
81. பாளைக் குழல் வள்ளி பதம் பணியும் வேளே போற்றி
82. பாகுகனி மொழி மாதுகுறமகளட் பாதம் வருடிய மணவாளா போற்றி
83. புனத்துக் காவல் கொள் குறமாதின் மணவாளா போற்றி
84. பைங்குறமாது மணக்குந் திருமார்பா போற்றி
85. பைம்புனக் கரும்பின் மணவாளா போற்றி
86. பொற்புன வெற்புமான் அணை மணிமார்பா போற்றி
87. மதுரித செஞ்சொல் குறமட மங்கை கணவ போற்றி
88. மரகத வள்ளிக்கு வாய்த்த பெருமாளே போற்றி
89. மறமானுக்கு இச்சை மொழி கூறு நற்குமரேசா போற்றி
90. மறவர் வாணுதல் வேடை கொளும் பொற்புய வீரா போற்றி
91. மலையில் விளைந்த தினைகாவல் மயிலை மணந்த அமிலவ போற்றி
92. மான் உதவும் தனி மானை மணம் செய்த பெருமான் போற்றி
93. மா தினை விளைந்த கானக குறத்தி மணவாளா போற்றி
94. மான்விழி குறத்தி மணவாளா போற்றி
95. முக கமலப் புயத்து வளி மணவாளா போற்றி
96. முத்து வண்ண சித்ர வண்ண வல்லிமணவாளா போற்றி

Koviloor Digital Library

97. மென் தோளி சித்ரவளி நாயகி கணவா போற்றி
98. மொய்தாரணி குழல் வள்ளியை வேட்டவ போற்றி
99. வடிப்ப மாதொரு குறப்பாவையாள் மகிழ்தருவேளே போற்றி
100. வளி நாயகி காமுறும் எழில்வேலா போற்றி
101. வள்ளி பதம் பணியும் தணியா அதிமோக தயாபரனே போற்றி
102. விறன் மறவர் சிறுமிதிரு வேளைக்கார பெருமாளே போற்றி
103. வேடர் மகளுக்கு வேளை என நிற்கும் விறல் வீரா போற்றி
104. வேடர் மங்கைதனை நாடி வனமீது சென்றவா போற்றி
105. வேடுவர் அமுதாம் மயில் மணவாளா போற்றி
106. வேடுவர் பேதையின் வேடை கொண்ட பிரானே போற்றி
107. வேடர் குலமாதை மங்களமதாக அணைவோனே போற்றி
108. வரம் மிகுந்த சிறுவாபுரி வள்ளிமணவாளப் பிரான் போற்றி போற்றி

தொகுப்பு

மதுரகவி க.கி. ராமசாமி ஐயர், கோவை.

வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன், சென்னை

என். ராமநாதன், நெய்வேலி

சிறுவாபுரி வேல் வணக்கம்

வறுமைதீர் வளங்கள் நல்கி வானவர் மண்ணு ளோரும்
தறுகனான் தீமை நீங்கித் தகவுடன் வாழச் செய்த
சிறுவை தன் வாழ்வாம் எங்கள் சீராமன் மருகனாகும்
அறுமுகன் கரத்து வேலைப் பணிவதே எமக்கு வேலை. 1

ஒப்பிலா முக்கண் எந்தை ஒருசுடர் வடிவாய் வந்து
செப்பரும் கருணை நல்கி செகமெலாம் புகழும் அந்த
ஒப்பிலாச் சிறுவை வாழும் உயர்மகிழ் முருகன் வானோர்
செப்பறு முகத்தான் வேலைச் செபிப்பதே எமக்கு வேலை. 2

- சேக்கிழார் தாசன்

Koviloor Digital Library

உ

ஓம் குமார குருப்யோ நமஹ

பகைகடிதல்

அருளியவர்: ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்
கருத்துரை: பிஎல். முத்துக்குமரன்

திருவளர் சுடர் உருவே, சிவைகரம் அமர்உருவே,
அருமறை புகழ்உருவே, அறவர்கள் தொழும்உருவே
இருள்தபும்ஒளிஉருவே, எனநினை எனதுஎதிரே,
குருகுகன்முதல்மயிலே,கொணர்திஉன் இறைவனையே.
1

மறைபுகழ் இறைமுனரே, மறைமுதல்பகர்உருவே,
பொறைமலி உலகுஉருவே, புனநடை தரும்உருவே
இறைஇளமுக உருவே, எனநினைஎனதுஎதிரே
குறைவுஅறு திருமயிலே, கொணர்திஉன் இறைவனையே.
2

இதரர்கள் பலர்பொரவே, இவன்உறை எனதுஎதிரே
மதிரவி பலஎனதேர், வளர்சரண் இடைஎனமா,
சதுரொடு வருமயிலே, தடவரைஅசைவுஉறவே,
குதிதரும்ஒருமயிலே, கொணர்திஉன் இறைவனையே. 3

Koviloor Digital Library

பவநடை மனுடர்முனே, படர்உறும் எனதுஎதிரே
நவமணி நுதலணிஏர், நகைபல மிடறு அணிமால்,
சிவணிய திருமயிலே, திடனொடு நொடிவலமே
குவலயம் வருமயிலே, கொணர்திஉன் இறைவனையே.
4

அழகுஉறு மலர்முகனே, அமரர்கள்பணிகுகனே,
மழஉரு உடையவனே, மதிநனி பெரியவனே
இழவுஇலர் இறையவனே, எனைநினை எனதுஎதிரே
குழகுஅது மிளிர்மயிலே, கொணர்தி உன் இறைவனையே.
5

இணைஅறும் அறுமுகனே, இதசசிமருமகனே,
இணர்அணி புரள்புயனே, எனநினை எனதுஎதிரே,
கணபண அரவுஉரமே, கலை(வு)உறஎழுதரும்ஓர்
குணம்உறு மணிமயிலே, கொணர்திஉன் இறைவனையே.
6

எளியவே, என் இறைவ, குகாஎனநினைஎனதுஎதிரே
வெளிநிகழ் திரள்களைமீன், மிளிர்சினை எனமிடைவான்,
பளபள எனமினுமா பலசிறைவிரிதருநீள்,
குளிர்மணி விழிமயிலே, கொணர்தி உன் இறைவனையே.
7

இலகுஅயில் மயில்முருகா, எனநினை எனதுஎதிரே,
பலபல களமணியே, பலபல பதமணியே
கலகல கலஎனமா, கவினொடுவரும் மயிலே,
குலவிடு சிகைமயிலே, கொணர்தி உன் இறைவனையே.
8

இகல் அறுசிவகுமரா, எனநினை எனது எதிரே
சுகமுனிவரர் எழில்ஆர், சுரர் பலர்புகழ் செயவே,
தொகுதொகு தொகுஎனவே, சுரநடம் இடுமயிலே,
குகபதி அமர்மயிலே, கொணர்தி உன் இறைவனையே.
9

Koviloor Digital Library

கருணைபெய் கனமுகிலே, கடமுனிபணிமுதலே,
அருணையன் அரன்எனவே, அகம்நினை எனதுஎதிரே
மருமலர் அணிபலவே, மருவிடும் களமயிலே,
குருபல அவிர்மயிலே, கொணர்தி உன் இறைவனையே.
10

கருத்துரை

தெய்வீகத் தன்மையும் அழகும் மிக்க ஒளி வடிவானவனே! உமா தேவியாரின் திருக்கரங்களில் வீற்றிருக்கும் அழகனே! அரிய வேதங்கள் புகழும் திருவுருவானவனே! அறவோர்கள் தொழும் வடிவழகனே! அஞ்ஞானம் எனும் இருளை அகற்றும் ஞானம் எனும் சோதிமயமானவனே என தியானம் செய்யும் என் முன்னே, பறவைகளுக்கெல்லாம் முதன்மையான மயிலே, உன் இறைவனைக் கொண்டு வருவாயாக! (1)

வேதங்களால் போற்றப்படும் இறைவன் திருமுன்னே மூலமந்திரப் பொருளை உபதேசித்த குருவடிவானவனே! பொறுமை மிக்க உலக உருவானவனே! தினைப்புனத்தில் உலாவிய அழகானவனே! பெருமைமிகு இளமை கொழிக்கும் திருமுகம் உடையவனே என தியானம் செய்யும் என் முன்னே எந்தக் குறையையும் அகற்றும் அழகான மயிலே! உனது இறைவனைக் கொண்டு வருவாயாக! (2)

கீழானவர்கள் பலரும் போரிடும்படி இவ்வுலகத்தில் வாழும் என் முன்னே, போற்றுதற்கு உரிய மிகப்பல சூரியன்கள் உதயமோ என நினைக்கும் படி, ஒளிதிகழும் திருப்பாதங்களைத் தாங்கும் வாகனம் போல் மிக்க திறமையோடும் வரும் மயிலே, பெரிய மலைகள் எல்லாம் அசையும்படி குதித்து ஓடி வருகின்ற மயிலே, உன்னுடைய இறைவனைக் கொண்டு வருவாயாக! (3)

Koviloor Digital Library

பாவமான முறைகளில் உழலும் மனிதர்கள் முன்னே களிப்புறும் என் எதிரில் நவரத்தினங்கள் பதித்த ஆபரணத்தை நெற்றியிலும், அழகுமிக்க வேறு அணிகளைக் அணிந்த பெருமையுடைய திருமயிலே! உலகையே ஒரு நொடியில் ஆற்றலோடு சுற்றி வருகின்ற மயிலே உன் இறைவனைக் கொண்டு வருவாயாக! (4)

பொலிவான அழகுடைய முகத்தை உடையவனே; அமரர்கள் பணியும் முருகப்பெருமானே! இளமை அகலாத உருவுடையோனே! அனைவராலும் மதிக்கப் பெறுகின்ற பேரறிஞனே! இறப்பில்லாத ஞானியர்களின் இறைவனே! என தியானம் புரியும் என் முன்னே இளமை கொழிக்க நிற்கும் மயிலே, உன் இறைவனைக் கொண்டு வருவாயாக! (5)

இணையற்ற ஆறுமுகப் பெருமானே! இந்திராணியால் விரும்பப்படும் மருமகனே! கொத்தான மலர்மாலை புரளும் தோள் உடையவனே என தியானிக்கும் என் முன்னே, படம் எடுத்தாடும் கூட்டமான பாம்புகளின் வலிமை குன்றும்படி எழும் இணையில்லாத அருள் சக்தியுடைய மரகத மயிலே, உன் இறைவனை கொண்டு வருவாயாக! (6)

எளியேனின் இறைவனே! முருகா என தியானிக்கும் என் முன்னே, வானவீதியில் உலவும் விண்மீன்களை, அழகான முட்டைகளைப் போல ஒடுங்கிப் பளபள என மின்னும்படி தோகையை விரிக்கும் நீண்ட குளிர்ந்த மணி போன்ற விழியுடைய மயிலே! உன் இறைவனைக் கொண்டு வருவாயாக! (7)

விண்ணிலே திகழும் மயூர வாகன முருகப்பெருமானே என தியானம் செய்யும் என் முன்னே; கழுத்து அணிகள்

Koviloor Digital Library

பல கலகலவென ஒலிக்கும்படி அழகாக வரும் மயிலே! விளங்கும் கொண்டையுடைய மயிலே! உன் இறைவனைக் கொண்டு வருவாயாக! (8)

என் பகையை ஒழித்து அருள் சிவகுமாரனே! என தியானம் புரியும் என் முன்னே, பேரின்ப நிலை அடைந்த முனிவர்களும், தேவர்கள் பலரும் போற்றவும் தொகுதொகு என்னும் தாளத்தோடு தேவநடனம் புரியும் மயிலே! முருகப்பெருமான் அமர்ந்திருக்கும் மயிலே! உன் இறைவனைக் கொண்டு வருவாயாக! (9)

அருள் கொழிக்கும் கனமுகிலே! அகத்தியர் வணங்கும் முதல்வனே! அருணகிரிநாதரை ஆட்கொண்ட ஆறுமுகச் சிவனே என்றெல்லாம் உள்ளத்தில் தியானம் செய்யும் என் முன்னே நறுமணமிக்க மாலையணிந்த கழுத்தையுடைய மயிலே, மேன்மைகள் பல திகழும் மயிலே, உன் இறைவனைக் கொண்டு வந்தருள்வாயாக! (10)

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் குறிப்பு

பாம்பன் சுவாமிகள் சமீபத்தில் வாழ்ந்த பரமஞானி; உண்மைத் துறவி; பாம்பன் என்ற ஊரில் தோன்றியவர். பாம்பன் என்பது நமது நாட்டின் தென்கோடியிலே உள்ளது. பிரப்பன் வலசை என்ற ஊரிலே மயானத்தில் குழிவெட்டி அதிலே முப்பத்தைந்து நாள் உடல் நினைவு இன்றி இருந்து முருகன் அருள் பெற்றவர். சென்னையில் உள்ள திருவான்மியூரிலே பரிபூரணம் அடைந்தார்கள்.

Koviloor Digital Library

குமாரஸ்தவம்

அருளியவர்: ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்
கருத்துரை: பிஎல். முத்துக்குமரன்

ஓம் ஷண்முக பதயே நமோ நமஹ:
ஓம் ஷண்மத பதயே நமோ நமஹ:
ஓம் ஷட்க்ரீவ பதயே நமோ நமஹ:
ஓம் ஷட்க்ரீட பதயே நமோ நமஹ:
ஓம் ஷட்கோண பதயே நமோ நமஹ:
ஓம் ஷட்கோச பதயே நமோ நமஹ:
ஓம் நவநிதி பதயே நமோ நமஹ:
ஓம் சுபநிதி பதயே நமோ நமஹ:
ஓம் நரபதி பதயே நமோ நமஹ:
ஓம் சுரபதி பதயே நமோ நமஹ:

ஓம் நடச்சிவ பதயே நமோ நமஹ:
ஓம் ஷடக்ஷர பதயே நமோ நமஹ:
ஓம் கவிராஜ பதயே நமோ நமஹ:
ஓம் தபராஜ பதயே நமோ நமஹ:
ஓம் இகபர பதயே நமோ நமஹ:
ஓம் புகழ்முனி பதயே நமோ நமஹ:
ஓம் ஜயஜய பதயே நமோ நமஹ:
ஓம் நயநய பதயே நமோ நமஹ:
ஓம் மஞ்சுள பதயே நமோ நமஹ:
ஓம் குஞ்சரீ பதயே நமோ நமஹ:
ஓம் வல்லீ பதயே நமோ நமஹ:
ஓம் மல்ல பதயே நமோ நமஹ:
ஓம் அஸ்த்ர பதயே நமோ நமஹ:
ஓம் சஸ்த்ர பதயே நமோ நமஹ:
ஓம் ஷஷ்டி பதயே நமோ நமஹ:

Koviloor Digital Library

ஓம் இஷ்டி பதயே நமோ நமஹ:
ஓம் அபேத பதயே நமோ நமஹ:
ஓம் ஸுபோத பதயே நமோ நமஹ:
ஓம் வியூஹ பதயே நமோ நமஹ:
ஓம் மயூர பதயே நமோ நமஹ:

ஓம் பூத பதயே நமோ நமஹ:
ஓம் வேத பதயே நமோ நமஹ:
ஓம் புராண பதயே நமோ நமஹ:
ஓம் ப்ராண பதயே நமோ நமஹ:
ஓம் பக்த பதயே நமோ நமஹ:
ஓம் முக்த பதயே நமோ நமஹ:
ஓம் அகார பதயே நமோ நமஹ:
ஓம் உகார பதயே நமோ நமஹ:
ஓம் மகார பதயே நமோ நமஹ:
ஓம் விகாச பதயே நமோ நமஹ:
ஓம் ஆதி பதயே நமோ நமஹ:
ஓம் பூதி பதயே நமோ நமஹ:
ஓம் அமார பதயே நமோ நமஹ:
ஓம் குமார பதயே நமோ நமஹ:.

கருத்துரை

ஓம் ஆறுமுக தலைவனே நமோ நம
ஓம் ஆறுவகைச் சமயங்களின் தலைவனே நமோ நம
ஓம் ஆறு கழுத்துக்களையுடைய தலைவனே நமோ நம
ஓம் ஆறு கிரீடங்களை அணிந்துள்ள தலைவனே நமோ நம
ஓம் ஆறுகோண சக்கரத்தில் எழுந்தருளிய தலைவனே நமோ நம
ஓம் ஆறு தோத்திர நூல்களின் தலைவனே நமோ நம
ஓம் ஒன்பது வகை நிதிகளின் தலைவனே நமோ நம
ஓம் பேரின்ப முக்தி நிலையத் தலைவனே நமோ நம
ஓம் மன்னர் தலைவனே நமோ நம
ஓம் தேவர்களுடைய தலைவனே நமோ நம

Koviloor Digital Library

ஓம் கூத்தபிரானான ஆறுமுகச் சிவனே நமோ நம
ஓம் ஆறு எழுத்துடைய தலைவனே நமோ நம
ஓம் கவிராஜ தலைவனே நமோ நம
ஓம் தவம்புரிவோருக்கு அரசான தலைவனே நமோ நம
ஓம் இம்மைக்கும் மறுமைக்கும் தலைவனே நமோ நம
ஓம் திருப்புகழ் அருளிய அருணகிரியாரின் தலைவனே நமோ நம
ஓம் வெற்றி மிகுந்த தலைவனே நமோ நம
ஓம் நயமாகச் செய்யும் தலைவனே நமோ நம
ஓம் அழகு வடிவான தலைவனே நமோ நம
ஓம் தெய்வானை அம்மையின் தலைவனே நமோ நம
ஓம் வள்ளி அம்மையின் தலைவனே நமோ நம
ஓம் மல்யுத்தத்தில் வலிமையுடைய தலைவனே நமோ நம
ஓம் வேல் முதலான தெய்வப் படைகளின் தலைவனே நமோ நம
ஓம் கைவிடாப் படைகளின் தலைவனே நமோ நம
ஓம் சஷ்டிதிதியின் கந்த விரதத் தலைவனே நமோ நம
ஓம் யாகத் தலைவனே நமோ நம
ஓம் பேதமுற்ற தலைவனே நமோ நம
ஓம் மெய்யுணர்வு அருளும் தலைவனே நமோ நம
ஓம் படைகளின் அணிவகுப்புத் தலைவனே நமோ நம
ஓம் மயூர நாதனே நமோ நம
ஓம் பூதங்களின் தலைவனே நமோ நம
ஓம் வேதங்களின் தலைவனே நமோ நம
ஓம் புராணங்களின் தலைவனே நமோ நம
ஓம் உயிர்களுக்கெல்லாம் தலைவனே நமோ நம
ஓம் அடியார்களுக்கு தலைவனே நமோ நம
ஓம் முக்தி அளிக்கும் தலைவனே நமோ நம
ஓம் அகரத்துக்கு தலைவனே நமோ நம
ஓம் உகரத்துக்கு தலைவனே நமோ நம
ஓம் மகரத்துக்கு தலைவனே நமோ நம

(ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் புரியும் அயன், அரன், அரி ஆகிய மும்மூர்த்திகளையும் உணர்த்துவோன் முருகனே என்று பொருள்)

Koviloor Digital Library

ஓம் எங்கும் நிறைந்த தலைவனே நமோ நம
ஓம் அனைத்துக்கும் முதல் காரணமான தலைவனே நமோ நம
ஓம் சகல செல்வங்களுக்கும் தலைவனே நமோ நம
ஓம் மன்மதனை எரித்த தலைவனே நமோ நம
ஓம் குமாரனாகிய தலைவனை நமோ நம.

தினமலரில் வெளிவந்தது...

இதே நாளில் அன்று

ஜூன் 7, 1920.

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையில், 1920 ஜூன், 7ம் தேதி பிறந்தவர், முத்தையா. மியான்மர் என்ற, அன்றைய பர்மாவிற்கு, அவரது தந்தை நடத்திய கடையில் பணிபுரிவதற்காக, 15 வயதில் சென்றார். அங்கு, தமிழ் இலக்கியங்களைக் கற்றார். போர் காரணமாக, நடைபயணமாகவே, இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்.

கடந்த, 1942ல், 'சக்தி, நகரசபை' போன்ற இதழ்களில் பணியாற்றினார். பாரதிதாசனின் விருப்பப்படி, 'முல்லை' இதழைத் துவக்கினார். அதனால், 'முல்லை முத்தையா' என்றழைக்கப் பட்டார். 'கமலா, முல்லை' பிரசுரங்களை துவக்கி, மலிவு விலையில், ஏராளமான புத்தகங்களை வெளியிட்டார்.திருவள்ளுவர் கழகத்தை, 1946ல் துவக்கினார்.

திருக்குறளுக்கு எளிய நடையில் உரை எழுதினார். 'இன்பம், முல்லைக் கதைகள், புறநானூற்று சிறுகதைகள்' உட்பட, ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். இவருடைய பல நூல்கள், நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன. 2000 பிப்., 9ம் தேதி காலமானார்.

'முல்லை' முத்தையா பிறந்த தினம் இன்று!***

- தினமலர், 7.6.2020

Koviloor Digital Library

சண்முக கவசம்

அருளியவர்: ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்
கருத்துரை: பிஎல். முத்துக்குமரன்

அண்டமாய் அவனியாகி அறிய ஒணாப் பொருளது ஆகித்
தொண்டர்கள் குருவுமாகித் துகள் அறு தெய்வமாகி
எண்திசை போற்ற நின்ற என்அருள் ஈசன் ஆன
திண்திறல் சரவணத்தான் தினமும் என் சிரசைக் காக்க.
... ... (1)

ஆதியாம் கயிலைச்செல்வன் அணிநெற்றி தன்னைக் காக்க
தாதுவிழ் கடப்பந் தாரான் தானிரு நுதலைக் காக்க
சோதியாம் தணிகை ஈசன் துரிசுஇலா விழியைக் காக்க
நாதனாம் கார்த்தி கேயன் நாசியை நயந்து காக்க.
... ... (2)

இருசெவிகளையும் செவ்வேள் இயல்புடன் காக்க, வாயை
முருகவேள் காக்க, நாப்பல் முழுதும்நல் குமரன் காக்க
துரிசுஅறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்ர மணியன் காக்க.
... ... (3)

ஈசனாகும் பாகுலேயன் எனது கந்தரத்தைக் காக்க
தேசுறு தோள் விலாவும் திருமகன் மருகன் காக்க
ஆசிலா மார்பை ஈராறு ஆயுதன் காக்க, எந்தன்
ஏசிலா முழங்கை தன்னை எழில் குறிஞ்சிக்கோன் காக்க.
... ... (4)

உறுதியாய் முன்கை தன்னை உமையிள மதலை காக்க
தறுகண் ஏறிடவே என்கைத் தலத்தை மாமுருகன் காக்க
புறம்கையை அயிலோன் காக்க, பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்கு மால்மருகன்காக்க, பின்முதுகைச் சேய் காக்க.
... ... (5)

Koviloor Digital Library

ஊண்நிறை வயிற்றை மஞ்ஞை ஊர்தியோன் காக்க, வம்புத்
தோள்நிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக் காக்க, குய்ய
நாணினை அங்கி கௌரிநந்தனன் காக்க, பீஜ
ஆணியை கந்தன்காக்க, அறுமுகன் குதத்தைக் காக்க.
... ... (6)

எஞ்சிடாது இடுப்பை வேலுக்கு இறைவனார் காக்க காக்க
அஞ்சகனம் ஓர் இரண்டும் அரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருள் காங்கேயன் விளரடித் தொடையைக் காக்க
செஞ்சரண் நேச ஆசான் திமிரு முன் தொடையைக் காக்க.
... ... (7)

ஏரகத் தேவன்என்தாள் இரு முழங்காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலைவாய்த்தே காக்க
நேருடைப் பரடு இரண்டும் நிகழ் பரங்கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க.
... ... (8)

ஐயுறு மலையன்பாதத்து அமர் பத்து விரலும் காக்க
பையுறு பழநி நாத பரன், அகம் காலைக் காக்க
மெய்யுடன் முழுதும், ஆதி விமல சண்முகவன் காக்க
தெய்வ நாயக விசாகன் தினமும் என் நெஞ்சைக் காக்க.
... ... (9)

ஒலியெழ உரத்த சத்தத் தொடுவரு பூதப்பிரேதம்
பலிகொள் இராக்கதப்பேய் பலகணத்து எவை ஆனாலும்
கிலிகொள எனைவேல் காக்க, கெடுபரர் செய்யும் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத்திடாது அயில்வேல் காக்க.
... ... (10)

ஓங்கிய சீற்றமே கொண்டு உவணிவில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம் எஃகம் தடி பரசு ஈட்டி யாதி
பாங்குடை ஆயுதங்கள் பகைவர் என் மேலே ஓச்சின்,
தீங்கு செய்யாமல் என்னைத் திருக்கைவேல் காக்க காக்க.
... ... (11)

ஔவியமுளர் ஊன் உண்போர் அசடர் பேய் அரக்கர் புல்லர்
தெவ்வர்கள் எவர் ஆனாலும் திடமுடன் எனைமல் கட்டத்து

Koviloor Digital Library

தவ்வியே வருவா ராயின், சராசரம் எலாம் புரக்கும்
கவ்வுடைச் சூர சண்டன் கைஅயில் காக்க காக்க.
... ... (12)

கடுவிடப் பாந்தள் சிங்கம் கரடி நாய் புலிமா யானை
கொடிய கோணாய் குரங்கு கோல மார்ச்சாலம் சம்பு
நடையுடை எதனா லேனும் நான் இடர்ப் பட்டி டாமல்
சடுதியில் வடிவேல் காக்க சானவிமுளை வேல் காக்க.
... ... (13)

ஙகரமே போல் தழீஇ ஞானவேல் காக்க, வன்புள்
சிகரிதேள் நண்டுக் காலி செய்யன் ஏறு ஆலப் பல்லி
நகமுடைய ஓந்தி பூரான் நளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை இவையால், எற் குஓர் ஊறுஇலாது ஐவேல் காக்க.
... ... (14)

சலத்தில் உய்வன்னேறு, தண்டுடைத் திருக்கை, மற்றும்
நிலத்திலும் சலத்திலும் தான் நெடுந்துயர் தரற்கே உள்ள
குலத்தினால், நான் வருத்தம் கொண்டிடாது அவ்வவ்வேளை
பலத்துடன் இருந்து காக்க, பாவகி கூர்வேல் காக்க.
... ... (15)

ஞமலியம் பரியன்கைவேல், நவக்கிரகக்கோள் காக்க
சுமவிழி நோய்கள், தந்த சூலை, ஆக்கிராண ரோகம்,
திமிர்கழல் வாதம், சோகை, சிரமடி கர்ண ரோகம்
எமை அணுகாமலே பன்னிருபுயன் சயவேல் காக்க.
... ... (16)

டமருகத்து அடிபோல் நைக்கும் தலையிடி, கண்ட மாலை
குமுறு விப்புருதி, குன்மம், குடல்வலி, ஈழை காசம்,
நிமிரொணா(து) இருத்தும்வெட்டை, நீர்பிரமேகம் எல்லாம்
எமை அடையாமலே குன்று எறிந்தவன் கைவேல் காக்க.
... ... (17)

இணக்கம் இல்லாத பித்த எரிவு, மாசுரங்கள், கைகால்
முணக்கவே குறைக்கும் குஷ்டம், மூலவெண்முளை, தீமந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி சாலம் என்று அறையும் இந்த
பிணிக்குலம் எனை ஆளாமல் பெரும்சக்தி வடிவேல் காக்க.
... ... (18)

Koviloor Digital Library

தவனமா ரோகம், வாதம், சயித்தியம், அரோசகம், மெய்
சுவறவே செய்யும் மூலச்சூடு, இளைப்பு, உடற்று விக்கல்,
அவதிசெய் பேதி சீழ்நோய், அண்டவாதங்கள், சூலை
எவையும் என்னிடத்து எய்தாமல் எம்பிரான் திணிவேல் காக்க.
... ... (19)

நமைப்புறு கிரந்தி, வீக்கம் நணுகிடு பாண்டு, சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை ஆகுபல் தொழுநோய் கக்கல்
இமைக்குமுன் உறு வலிப்போடு எழுபுடைப்பகந்த ராதி
இமைப்பொழுதேனும் என்னை எய்தாமல் அருள்வேல் காக்க.
... ... (20)

பல்லது கடித்து மீசை படபடென்றே துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரிய மேனி எமபடர், வரினும் என்னை
ஒல்லையில் தார காரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க.
... ... (21)

மண்ணிலும் மரத்தின்மீது மலையிலும் நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதும்சாரி செய் ஊர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தின் உள்ளும் வேறு எந்த இடத்தும் என்னை
நண்ணிவந்து அருள் ஆர்சஷ்டி நாதன் வேல் காக்க காக்க.
... ... (22)

யகரமேபோல் சூல் ஏந்தும் நறும்புயன் வேல்முன் காக்க
அகரமே முதலாம் ஈராறு அம்பகன் வேல்பின் காக்க
சகரமோடு ஆறும் ஆனோன் தன்கைவேல் நடுவில் காக்க
சிகரமின் தேவ மோலி திகழ் ஐவேல் கீழ்மேல் காக்க.
... ... (23)

ரஞ்சித மொழி தேவானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல் கிழக்கில் திறமுடன் காக்க, அங்கி
விஞ்சிடு திசையில் ஞான வீரன் வேல் காக்க, தெற்கில்
எஞ்சிடாக் கதிர்கா மத்தோன் இகலுடைக் கரவேல் காக்க.
... ... (24)

Koviloor Digital Library

லகரமே போல் காளிங்கன்நல்லுடல் நெளிய நின்று
தகர மர்த்தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்,
நிகழ்எனை நிருதி திக்கில் நிலைபெறக் காக்க, மேற்கில்
இகல் அயில்காக்க, வாயுவினில் குகன் கதிர்வேல் காக்க.
... ... (25)

வடதிசை தன்னில் ஈசன்மகன்அருள் திருவேல் காக்க
விடையுடை ஈசன் திக்கில் வேத போதகன் வேல் காக்க
நடக்கையில் இருக்கும்ஞான்றும் நவில்கையில் நிமிர்கையில், கீழ்க்
கிடக்கையில் தூங்குஞான்றும் கிரிதுளைத்துள வேல்காக்க.
... ... (26)

இழந்துபோகாத வாழ்வை ஈயும் முத்தையனார் கைவேல்,
வழங்கும் நல் ஊண் உண்போதும் மால்விளையாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சு அடக்கும் போதும்
செழும்குணத்தோடே காக்க, திடமுடன் மயிலும் காக்க.
... ... (27)

இளமையில் வாலிபத்தில் ஏறிடு வயோதிகத்தில்
வளர் அறுமுகச் சிவன்தான் வந்தெனைக் காக்க காக்க
ஒளிஎழு காலை, முன்எல் ஓம் சிவ சாமி காக்க
தெளிநடு பிற்பகல் கால், சிவகுரு நாதன் காக்க.
... ... (28)

இறகுடைக்கோழித் தோகைக்கு இறைமுன் இராவில் காக்க
திறலுடைச் சூர்ப்பகைத்தே, திகழ்பின் இராவில் காக்க
நறவுசேர் தாள் சிலம்பன் நடுநிசி தன்னில் காக்க
மறைதொழு குழகன் எம்கோன் மாறாது காக்க காக்க.
... ... (29)

இனம்எனத் தொண்டரோடும் இணக்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டந் தன்னில் சரவண பவனார் காக்க
நனி அநுபூதி சொன்ன நாதர்கோன் காக்க இத்தைக்
கனிவோடு சொன்ன தாசன் கடவுள்தான் காக்கவந்தே.
... ... (30)

ஸ்ரீ சண்முக கவசம் முற்றிற்று.

Koviloor Digital Library

சண்முக கவசம் - கருத்துரை

வானம் முதலிய அண்டங்களாகி, பூமியாகி, எவரும் அறிய முடியாத பொருளாகி, தொண்டர்களுக்குக் குருவுமாகி, குற்றம் நீக்கும் தெய்வமுமாகி, எட்டுத் திக்கிலும் உள்ளவர்களும் துதிக்க நின்ற என் ஈசனாகிய சரவணபவனார் எனது தலையைக் காப்பாராக. (1)

எல்லாப் பொருள்களுக்கும் ஆதியாகிய கயிலைச் செல்வன் எனது நெற்றியைக் காப்பாராக, தேன் சிந்தும் கடம்பமாலை அணிந்த முருகன் எனது இரு புருவங்களையும் காப்பாராக, சோதி வடிவாகிய தணிகை ஈசன் எனது கண்களைக் காப்பாராக, என் இறைவனாகிய கார்த்திகேயன் என் மூக்கினைக் காப்பாராக. (2)

இரண்டு காதுகளையும் செவ்வியல் காப்பாராக; வாயை முருகவேல் காப்பாராக; பற்களைக் குமரன் காப்பாராக; கன்னங்களை விநாயகன் துணைவன் காப்பாராக; பிடரியை சிவசுப்பிரமணியன் காப்பாராக.(3)

ஈசனாகிய கார்த்திகேயன் என்னுடைய கழுத்தைக் காப்பாராக; தோள்களையும் விலாக்களையும் குமரன் காப்பாராக. பன்னிரு கை உடையவர் எனது மார்பு காப்பாராக. குறிஞ்சி நிலக் கோமான் எனது முழங்கைகளைக் காப்பாராக. (4)

உமாதேவியின் இளைய குமாரன் என் முன் கைகளைக் காப்பாராக; எனது உள்ளங்கைகளை மகா வல்லமை பொருந்திய முருகன் காப்பாராக; புறங் கைகளை வேலன் காப்பாராக; பத்து விரல்களையும் திருமால் மருகன் காப்பாராக; குழந்தையுருவமான முருகக் கடவுள் என் பின் முதுகைக் காப்பாராக; (5)

Koviloor Digital Library

வயிற்றையும் மயில்வாகனன் காப்பாராக; நிமிர்ந்த தோள்களையுடைய தேவசேனாதிபதி என் உந்தியைக் காக்க. நாபிக்கும் குறிக்கும் இடையிட்ட பகுதியை குமரன் காப்பாராக, பீஜங்களை இணைக்கும் தண்டை கந்தன் காப்பாராக. எரு வாயை அறுமுகன் காக்க. (6)

வேலவன் எனது இடுப்பைக் காப்பாராக; சகனப் பகுதியை அரண் திருமகன் காப்பாராக; அடித் தொடையை கங்காசுதன் காப்பாராக. சிவந்த திருவடிகளை உடைய குருநாதன் எனது முன் தொடையைக் காப்பாராக. (7)

சுவாமிமலையில் எழுந்தருளியுள்ள பிரான் எனது முழங்கால்கள் இரண்டையும் காப்பாராக; திருச்செந்தூர் முருகன் எனது கணைக்கால் காக்க, புறங்கால்கள் இரண்டையும் திருப்பரங்குன்றத்தில் அமர்ந்துள்ள பெருமாள் காக்க, குதிகால்களைப் பழமுதிர்சோலைப் பெருமாள் காக்க. (8)

பாதத்தில் உள்ள பத்து விரல்களையும் குன்றுதோறும் விளங்குகின்ற குமரன் காக்க, பழநியில் வீற்றிருக்கும் முருகன் எனது உள்ளங்கால்களைக் காக்க, உடல் முழுவதையும் சண்முகன் காக்க, எனது நெஞ்சை விசாகப் பெருமாள் காக்க. (9)

உரத்த சப்தமிட்டு வரும் பூதம், பேய் முதலிய தீய கணங்கள் எவையாயினும் அவை அஞ்சச்செய்து, அவற்றால் எனக்குத் துன்பம் ஏற்படாமல் ஞானசக்திவேல் காக்க, பகைவர் செய்யும் சூன்யம் மந்திரம் தந்திரம் எதுவும் என்னை வருத்திடாமல் வேல் காக்க. (10)

வாள், வில், சூலம், சக்கரம், தடி, தண்டு, ஈட்டி முதலிய ஆயுதங்களைப் பகைவர் என்மீது எறிந்தால் அவை எனக்கு எவ்விதமான தீங்கும் செய்யாமல் முருகப்பெருமான் திருக்கைவேல் காக்க. (11)

Koviloor Digital Library

பொறாமையுடையவர்கள், புலால் உண்பவர்கள், கீழ்மக்கள், பேய், அரக்கர், அற்பர், பகைவர் முதலிய எவரேனும் மற்போரில் இறுதிப் பிடிக்க வருவாராயின் கந்தவேள் தன் கைவேல் எனைக் காக்க. *(12)*

பாம்பு, சிங்கம், கரடி, நாய், குதிரை, யானை, ஓநாய், குரங்கு, காட்டுப் பன்றி, பூனை முதலிய மிருகங்களால் நான் துன்புறாமல் விரைவில் வந்து வடிவேல் காக்க.*(13)*

என்னையும் என் இனத்தையும் ங கரம் போல் தழுவி ஞானவேல் காக்க, வலிய பறவைகளும், எலி, தேள், நண்டுந் தெறுக்கால், வலிமைமிக்க செய்யான், விஷப் பல்லி, ஓணான், பூரான், சீதமண்டலம், சிலந்தி இவைகளால் எனக்கு ஒரு கெடுதலும் ஏற்படாமல் அழகிய வேல் காக்க. *(14)*

நீரில் வாழும் முதலை, தவளை, தடி போன்ற வாலுள்ள திருக்கை மீன் முதலியவற்றாலும் நிலத்திலும் நீரிலும் பெரும் துன்பம் தருவதற்கு என்றே உள்ள உயிரினங்களால் நான் வருந்தாமல் என் உடன் இருந்து அக்கினியை உடலாகக் கொண்ட சுடர்வேல் காக்க. *(15)*

அழகிய மயிலை வாகனமாக உடைய முருகன் கைவேல் நவக்கிரகங்களால் எனக்கு நேரும் கேடுகளினின்று காக்க, கண்களில் பூ விழுதல், பல்வலி, மூக்குவலி, திமிர்வாதம், சோகை, காதுவலி முதலிய நோய்கள் என்னை அணுகாமல் பன்னிரு தோளான் தன் வெற்றி வேல் காக்க. *(16)*

உடுக்கை அடிபோல் இடிக்கும் தலைஇடி, கண்டமாலை, சிலந்தி, குன்மம், குடல்வலி, சளி, காசம், நிமிர முடியாதபடி குனிய வைக்கும் வெட்டை முதலிய எல்லாம் என்னை அடையாமல் கிரவுஞ்ச மலை பிளந்த குமரன் கைவேல் காக்க. *(17)*

Koviloor Digital Library

பித்த எரிவு சுரங்கள், கை கால் குறைக்கும் குடம், வெண்மூல முளை, சன்னி முதலிய நோய் எதுவும் என்னை வயப்படுத்தாமல் சக்திவேல் காக்க. (18)

நாவறட்சியுண்டாகும் பெரு நோய், வாதம், சீதளம், மூலச்சூடு, இளைப்பு, வருத்தம், விக்கல், துன்பம் செய்கின்ற பேதிசீழ் நோய், அண்டவாதங்கள் முதலிய எதுவும் என்னிடம் சேராமல் எமது பிரானின் திண்ணிய வேல் காக்க. (19)

கிரந்தி, பாண்டு பலவிதமான தொழுநோய்கள், வலிப்பு முதலிய நோய்கள் ஒரு கணமேனும் என்னைச் சேராமல் அருள் வடிவான வேல் காக்க. (20)

பல்லைக் கடித்து மீசை படபட என்று துடிக்க, கண்களை உருட்டி விழித்து கரிய மேனியை உடைய யமதூதர் வந்தாலும் தாரகாசூரனை சங்கரித்த முருகன் ஓம் ஐம் ரீம் வேல் விரைவில் காக்க. (21)

மண்ணிலும், மரத்திலும், மலையிலும், நெருப்பின் மேலும், குளிர்ந்த நீரின் மேலும், வேறு எந்த இடத்திலும் என்னை அணுகி வந்து அருள்புரியும் சஷ்டிநாதம் வேல் காக்க. (22)

முத்தலையுள்ள சூலம் ஏந்திய முருகன் வேல் என்முன் புறம் காக்க. அகரமுதல பன்னிரு உயிர் எழுத்துக்களையே திருக் கண்களாக உடைய முருகனின் வேல் எனது பின்புறம் காக்க. ஆறெழுத்தாயினவன் கைவேல் நடுவேல் காக்க. தலையில் ஒளிவீசும் திருக்குமரன் வேல் கீழும் மேலும் காக்க. (23)

இனிய மொழியாளான தெய்வானை நாயகனும், வள்ளி மணாளனுமான முருகனது வேல் கிழக்கில் காக்க. அக்னி திக்கில் வீரவேல் காக்க. கதிர்காமத்தோன் கைவேல் காக்க. (24)

Koviloor Digital Library

'ல' என்ற எழுத்துப்போல் வளைந்து ஆரவாரம் செய்த காளிங்கன் என்ற பாம்பின் மீது நடம் செய்த திருமாலின் மருகன் தன் கைவேல் நிருதியில் காக்க, குகன் கதிர்வேல் வாயு திக்கில் காக்க. (25)

வடக்கில் சிவகுமரன் அருள்வேல் காக்க. ஈசான திகில் பிரம்மனுக்குப் பிரணவப் பொருள் உரைத்த முருகன் திருவேல் காக்க, நடக்கும் போதும், இருக்கும் போதும், பேசும் போதும், நிமிர்ந்து எழுதும்போதும், தரையில் கிடக்கும் போதும், தூங்கும் போதும் கிரவுஞ்ச மலை துளைத்தவேல் காக்க. (26)

உண்ணும்போதும், குலவும்போதும், பணிந்து போற்றும் போதும், தியானிக்கும்போதும், குமரன் கைவேல் காக்க, மயில் காக்க. (27)

இளமையிலும் மூப்பிலும் அறுமுகச் சிவன் எனைக் காக்க ஞாயிறு தோன்றும் காலையிலும், முற்பகலிலும், நடுப் பகலிலும், பிற்பகலிலும் சிவனார் மனங்குளிர உபதேசித்த குருநாதன் எனைக் காக்க. (28)

சேவலுக்கும் மயிலுக்கும் இறையாகிய முருகன் இரவில் எனைக் காக்க, சூரனை சங்கரித்த வேலன் பின் இரவில் என்னைக்காக்க தேன் ஒழுகு மாலையும் சிலம்பும் அணிந்த முருகன் நடுநிசியில் என்னைக் காக்க. வேதங்கள் தொழும் கட்டிளங் குமரன் எப்போதும் என்னைக் காக்க. (29)

திருத் தொண்டர் குழாத்தில் என்னைச் சேர்க்கும் செட்டி காக்க. தனியாயுள்ள போதும் கூட்டத்தில் உள்ள போதும் சரவண பவனார் காக்க. கந்தர் அநுபூதி பாடிய அருணகிரிநாதருக்கு அதிபதியாகிய முருகன் காக்க. இதைக் கனிவுடன் கூறிய குமரகுருதாசரின் கடவுளாகிய முருகன் வந்து காக்க. (30)

▲

Koviloor Digital Library

வரம் அருளும்
சிறுவாபுரி முருகன்

சிறுவாபுரி முருகன் தலத் திருப்புகழ் பாடல்களில் பெருமையையும், இத்தலத்தின் அரிய பல சிறப்புகளை அனைவரும் உணர்ந்து இன்புற 'சிறுவாபுரி முருகன் அபிஷேகக் குழு' என்ற அமைப்பு 1981-இல் தொடங்கி செயலாற்றி வருகிறது.

இக் குழுவின் முயற்சியால் G.N.T. சாலையிலிருந்து சிறுவாபுரி சாலை பிரியும் இடத்தில் மிகப்பெரிய நுழைவாயில் (Arch) திரு K.S. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மற்றும் ஸ்ரீமூகாம்பிகை சிட் பண்ட்ஸ் நிறுவன அன்பர்கள் பொருளுதவியுடன் கட்டப்பட்டு 15.8.90 ஆண்டு திறந்து வைக்கப்பெற்றது. இத்திருக்கோயில் விநாயகர், முருகப்பெருமான், உண்ணாமுலையம்மன் சந்நிதிகளுக்கு திருவாசி (பிரபை), மூலவர் பீடத்திற்கு பித்தளை கவசம், ஐந்தடி உயர வெண்கல அன்னவிளக்கு, உற்சவர் பாதுகாப்பு அறை, காற்றாடி வசதி, மூலவர் சந்நிதி மற்றும் வள்ளி மணவாளப் பெருமான் சந்நிதிக்கும் சுவற்றில் பளிங்குக்கல்

Koviloor Digital Library

பதித்தல் ஆகிய திருப்பணிகள் நடை பெற்றுள்ளன. சிறுவாபுரித் திருப்புகழ்ப் பாடல்கள், வேல் போற்றி 108, திருப்புகழ் அர்ச்சனை 108 மற்றும் பாராயணப் பாடல்கள் கொண்ட பல கல்வெட்டுகள் பதிக்கப்பெற்றுள்ளன. வெளிப் பிரகாரத்தில் ஒரு பகுதியில் சிமெண்ட் தரை. 'அநுபூதி மேடை' மரகத மயில் மண்டப இரும்புக் கதவுகள் ஆகிய பணிகளும் அன்பர்களது நன்கொடைகளினால் நிறைவேறியுள்ளன.

இத்திருக்கோயில் 11.7.1993 அன்று நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தில் சிறுவாபுரி முருகன் அபிஷேகக்குழு யாகசாலைப் பொறுப்புகளை ஏற்று சிறப்பாக நடத்தியது குறிப்பிடத்தக்கது. அன்பர்களின் காணிக்கைகளைக் கொண்டு 110 கிலோ எடையில் சுவாமிமலை சிற்பக்கலை செல்வர் திரு S.தேவசேனாபதி ஸ்தபதி அவர்கள் உருவாக்கிய "வள்ளி மணவாளப் பெருமான்" என்னும் "வள்ளி கல்யாண சுந்தரர்" பஞ்சலோக விக்ரஹம் 12.6.1994 அன்று இத்திருக்கோயிலுக்கு சிறுவாபுரி முருகன் அபிஷேகக் குழுவால் காணிக்கையாக அளிக்கப் பெற்றுள்ளது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். வள்ளி எம்பிராட்டி முருகப்பெருமானைத் திருக்கரம் பற்றி உலக உயிர்களுக்கு ஆனந்தம் அளிக்கும் இவ்வற்புதமான திருமணக் கோல அமைப்பு அகில உலகத்திலும் வேறு எங்கும் காண இயலாத வகையில் சிறுவாபுரி ஸ்ரீ பாலசுப்பிரமண்ய சுவாமி திருக்கோயிலில் தான் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்குழுவின் முயற்சியால் சிறுவாபுரி R.S.M. விவேகானந்தா வித்யாலயா கல்விக்கூடம் கல்கட்டிடமாக கட்டப்பெற்றுள்ளது. திருப்புகழ்ப் பாடல் பெற்ற கரபுரத்து ஆறுமுகப்பெருமான் திருக்கோயில் (திருப்பாற்கடல்) கும்பாபிஷேகம், திருவிடைக்கழி ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி

Koviloor Digital Library

திருக்கோயில் மகா கும்பாபிஷேகத்தில் யாகசாலைப் பொறுப்பு மற்றும் "குஞ்சரிரஞ்சித குமரன்" பஞ்சலோக விக்ரஹப் பிரதிஷ்டை, திருக்கள்ளில் (திருக்கண்டலம்) ஸ்ரீ சிவானந்தேச்வரர் கோயிலில் நால்வர் மற்றும் ஸ்ரீசக்தி தட்சிணாமூர்த்தி சன்னிதி பிரதிஷ்டை கும்பாபிஷேகம் ஆகியவைகளுடன் அருணகிரியாரின் அற்புதத் திருப்புகழ்ப் பாடல் பெற்ற ஞானமலை ஸ்ரீஞான பண்டித சுவாமி திருக்கோயிலில் மலைப்படிகள் கட்டி திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடைபெற்று நித்யபூஜையும் நன்கு நடைபெற்று வருகின்றன.

பல்வேறு விழாக்களுக்கும் அவ்வப்போது நன்கொடை வழங்கி வரும் அடியார் பெருமக்களுக்கும் சிறுவாபுரி முருகன் அபிஷேகக் குழு சார்பில் நன்றியைத் தெரிவித்து, அவர்கள் குடும்பத்தில் அனைவரும் சிறுவாபுரி முருகன் திருவருளால் எல்லா வளங்களுடன் அனைத்து நலன்களையும் பெற்று இன்பமாய் வாழ பிரார்த்திக்கிறோம். இத்திருக்கோயிலில் நித்திய பூஜைகள், திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறவும், எல்லா வகையிலும் உதவி வரும் பெருமக்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

சிறுவை மேவி வரம் மிகுந்த பெருமான் திருவருள் எங்கும் பொங்கிப் பொலிவதாக.

சிறுவாபுரி முருகா சரணம் சரணம்.

வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன்,
ஒருங்கிணைப்பாளர்

Koviloor Digital Library

நகரத்தார்களின் உயர்ந்த பண்புகள்

மத்திய நிதியமைச்சர் மாண்புமிகு
திருமதி நிர்மலா சீதாராமன் ஆற்றிய உரை

நான் 2015 ஆம் ஆண்டு சொன்ன சில விஷயங்களையே இப்பொழுதும் இந்த அவையில் நான் சொல்ல விரும்புகிறேன். என்னடா, இவர் திரும்பத் திரும்ப சொல்கிறாரே என்று நீங்கள் நினைக்கவேண்டாம். எத்தனை முறை வேண்டுமானாலும், நகரத்தாரைப்பற்றி திரும்பத் திரும்பச் சொல்லலாம்.

எவ்வளவு முறை வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் சொல்லலாம் என்று நான் சொல்வதை யாரும் மறுக்க முடியாது.

ஏனென்றால், அரசர்கள், ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டின்மீது படையெடுத்து, அவர்களுடைய ஆதிக்கத்தை நிலை நிறுத்துவார்கள்.

இது நாம் சரித்திரத்தில் படித்த விஷயம்தான்.

இதுதவிர, கலாச்சாரம், பண்பாடு, தொழில், வர்த்தகத்திற்காகக்கூட ஒரு நாட்டிலிருந்து, இன்னொரு நாட்டிற்குச் செல்வார்கள். அவர்கள்மூலமாகவும், ஒரு விதத்தில் ஆதிக்கம் - ஆதிக்கம் என்பது தவறான வார்த்தை - ஆனால், அவர்களின்மூலமாகக்கூட ஒரு இன்புலையன்ஸ் இன்னொரு ஏரியாவில் பரவும்.

Koviloor Digital Library

இது எல்லா நாடுகளிலும் பேசக்கூடிய விஷயம் தான். ஒவ்வொரு நாட்டிலும் இருக்கக்கூடிய சில கம்யூனிஸ்ட்டிஸ், சில ஏரியாவில் பரவியிருக்கிறார்கள். ஆனால், நான் கண்ணால் பார்த்த விஷயம் என்பதினால், இதை உணர்ச்சிவயப்பட்டு சொல்கிறேன், குறிப்பாக, சவுத் இஸ்ட் ஏசியாவில், ஒவ்வொரு நாட்டினுடைய பெயரையும் எடுத்துச் சொல்ல முடியும். அதை நான் பார்த்திருக்கின்றேன் கண்ணால். இப்பொழுது கூட அந்தந்த நாட்டின் கலாச்சார சின்னங்கள் என்று சொல்லக்கூடிய சில கேந்திரங்கள், சில இடங்கள் மூலதனம் நகரத்தாரால் உற்பத்தி செய்யப்பட்டது.

நீங்கள் வியட்நாமில் இருந்து ஆரம்பித்து, கம்போடியாவாக இருந்தாலும், மியான்மர், ரங்கூன், பர்மா என்று சொல்லிக் கொண்டிருந்தோம் இந்த ஒவ்வொரு நாட்டிற்கும் நான் சென்றபொழுது, சாதாரணமாக மோடி அய்யாவினுடைய அமைச்சரவையில் இருக்கக் கூடிய ஒவ்வொரு அமைச்சர்களும், எந்தப் பணிக்காகச் சென்றோமோ, அந்தப் பணியை மட்டும் செய்துவிட்டு வந்துவிடுவோம். ஆனால், அதில் கொஞ்சம் சின்ன சலுகை எடுத்துக்கொண்ட நான், அந்த நாடுகளில் இருக்கக்கூடிய நம்மூர்க்காரர்கள் செய்த நல்ல காரியங்களைப் பார்ப்பதற்காக, மோடி அய்யாவிடம் சொல்லிவிட்டுப் போய் பார்ப்பதுண்டு.

நீங்கள் சைகான் என்று சொல்லக்கூடிய, அதாவது வியட்நாம் போருக்கு முன்பு, சைகான் என்று அழைக்கப் பட்ட ஊர் ஒச்சிமின் நகரமாக இருக்கிறது இன்று. இன்றைக்கும் அங்கே நம்முடைய செட்டிநாடு வீடுகள் இருக்கின்றன. அங்கே நகரத்தார் வியாபாரம் செய்து கொண்டு, வசதியாக இருந்தவர்கள், அங்கே நடைபெற்ற போரின்போது, அங்கே இருந்து அருகிலுள்ள ஊர்களுக்குச் சென்றுவிட்டார்கள். ஆனால், அவர்கள் கட்டிய வீடுகளும், கோவில்களும் இன்றைக்கும் நல்லவிதமாக அங்கே இருக்கின்றன. அந்தக் கோவில்களுக்குச் சென்று

Koviloor Digital Library

வழிபடுகின்றவர்களும், அந்தக் கோவில் மூலமாக சில கலாச்சாரங்களை வளர்த்துப் பேணிக் காத்தவர்கள் குறைந்து போய்விட்டார்கள்.

அதைப்பற்றி நான் அங்கே உள்ள அதிகாரிகளுடன் பேசியபோது, மீண்டும் அந்த நகரத்தார் இங்கே வந்து, அவர்களுடைய வீட்டில் வசிக்கலாம். ஆனால், இந்த வீடுகளை விற்பதை நாங்கள் சட்டத்தின்மூலமாகத் தடுத்துவிட்டோம் என்றனர்.

ஆனால், அந்த மக்களைப்பற்றியோ, அவர்கள் அங்கே செய்த வியாபாரத்தைப்பற்றியோ, அந்த வியாபாரத்தின்மூலம் அவர்கள் சம்பாதித்ததைப்பற்றியோ, சம்பாதித்தப் பணத்தைக் கொண்டு செய்த தர்மக் காரியங்களைப்பற்றியோ எந்தவிதமான குறைகளையும் நான் காதில் ஒருமுறைகூட கேட்கவில்லை.

வியட்நாமில் இப்படி என்றால், அதேபோன்றுதான் கம்போடியாவில், லாவோசில், சவுத் ஈஸ்ட் ஏசியா கன்ட்ரியில் ஒவ்வொருவிதமான சின்னங்கள் இருக்கின்றன.

நான் உதாரணத்திற்காகச் சொல்லலாம், தஞ் சாவூர் கோவில் போன்று, அங்கே கம்பீரமாக ஒவ்வொரு கோவிலும், சிற்பக் கலையில் சிறந்து விளங்குகின்றன.

இங்கே எழுத்தாளர்களும், பதிப்பாளர்களும் வந்திருக்கிறார்கள் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

இவையெல்லாம் யாரால் நடந்தது? ஒரு மனிதனாலா? தனி மனிதனாலா? இல்லை.

ஒரு சமூகத்தால்தான். அந்தக் கட்டுப்பாடான சமூகம் வேரூன்றி இருப்பதால்தான். நாம் எவ்வளவுதான் உயர உயரப் பறந்தாலும், விரிவாகப் பரவினாலும், நம்முடைய பாதங்கள் எங்கே இருக்கிறது என்பதை மறக்காத சமூகம்.

ஆகையால்தான், அந்த சமூகம், ஒருமைப்பாட்டுடன், இன்றைக்கும் சிதையாமல், எந்தவிதக் குறைபாடும் இல்லாமல், அந்த சமூகத்தைப்பற்றி யாரும் குறை சொல்லாமல், யாருக்கும் வெறுப்பின்றி அவர்கள்

Koviloor Digital Library

நடக்கின்றார்கள் என்றால், அந்தப் பாதம் எங்கே இருக்கிறது என்பதை மறக்காமல், நாம் எவ்வளவு உயரத்தில் பறந்தாலும், எவ்வளவு விரிவாகப் பரவினாலும், அந்தக் கலாச்சாரத்தில் இருக்கக்கூடிய உறுதித்தன்மையால்தான், இன்றைக்கு அந்த நகரத்தார்மேல் அவ்வளவு மதிப்பு இருக்கிறது.

இதை வெளிநாட்டில் மட்டும் நாம் பார்க்கவில்லை. நம்முடைய நாட்டிலும்தான். 'திரைகடல் தாண்டி திரவியம் தேடு' என்றுதான் சொல்வார்கள். நாம் சம்பாதித்துக் கொண்டு வந்த திரவியத்தை (பொருளை) வைத்து, அதனை நற்காரியங்களுக்குப் பயன்படுத்தும் ஒரு சமூகம் இருக்கிறது என்றால், அந்த சமூகம் நகரத்தார் சமூகம்தான்.

அதற்கு உதாரணமாக இப்பொழுது நான் சொல்கிறேன், இங்கே ஊடகத் துறையினர் இருக்கிறார்கள், அவர்களின் மூலமாகவும் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால்,

நாட்டில் வடக்கு ஆதிக்கம், இந்தித் திணிப்பு என்றெல்லாம் பேசினாலும்கூட, நம்நாடு ஒன்றுதான், இந்த நாட்டில் உள்ள கலாச்சாரம் ஒன்றுதான். இதில் சிறு சிறு வேறுபாடு இருக்கலாம். ஒவ்வொரு ஊரிலும் இருக்கக்கூடிய தனித்தன்மை நிறைய இருந்தாலும்கூட, நகரத்தார் சமூகம், ஒரு உதாரணத்தைக் காட்டுகிறார்கள்.

அது என்னவென்றால்,

படோடாபம் இல்லாமல், விளம்பரப்படுத்தாமல், ஆடம்பரம் இல்லாமல், நாங்கள் செய்துவிட்டோம், நாங்கள் செய்துவிட்டோம் என்று தண்டோரா என்று இந்தியில் சொல்வார்கள்; தமுக்கடிப்பதுபோல், நானே என்னுடைய கதையை சொல்வது என்று அந்த முயற்சி இல்லாமல்,

காசிவிசுவநாதர் கோவிலில் புனர் நிர்மாணம் செய்தார்கள் என்றால், தமிழ்நாட்டிலிருந்து வந்த நம்முடைய நகரத்தார்தான்.

Koviloor Digital Library

இதில், இந்தியா, தமிழா, தெலுங்கா, கன்னடமா, குஜராத்தியா என்ற விவகாரம் எல்லாம் வேண்டாம்.

எங்கே இருந்தாலும், நம்முடைய கோவில்களும், கலாச்சாரத்திற்கு சின்னங்களாக இருப்பவற்றையும் நாம் இழந்துவிடக் கூடாது.

வழிபடுகிறவர்கள் அதிகமா, குறைவா என்றெல்லாம் பார்க்காமல், எங்கெல்லாம் நம்முடைய சின்னங்கள் இருக்கிறதோ, அதனைப் பாதுகாக்கவேண்டும். அப்படி செய்தால், வருகின்ற தலைமுறையினர் அங்கே சென்று வழிபடுவார்கள். அந்தச் செயலை இந்தத் தலைமுறை குறைவில்லாமல் செய்துவிட்டு, சத்தமே இல்லாமல் இருக்கின்ற நகரத்தாருக்கு நான் தலைவணங்கி நமஸ்காரம் செய்கிறேன்.

இது ஒரு கிளாசிக் உதாரணம்.

நல்ல காரியம் செய்யுங்கள்; நாம் சம்பாதிக்கும் ஆதாயத்தினால், ஒரு பத்து பேருக்கு உதவவேண்டும். அது கோவில் மட்டுமல்ல, நாம் நடத்துகின்ற தொழில்மூலமாகவும். அதே சமயம், அதை செய்துவிட்டு, விளம்பரம் தேடாமல், பணிவோடு இருக்கக்கூடியவர்கள் நம்முடைய நகரத்தார் சமூகத்தவர்.

தமிழ்நாட்டில் நான் சிறிய வயதில் பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற காலத்தில், மூன்று மந்திரங்களை சொல்லிக் கொண்டிருப்பார்கள். அந்த மந்திரங்களைச் சொன்னவர்கள், அதனை அவர்களுடைய செயல்பாட்டில் காட்டி-யிருப்பார்கள் என்பதுதான் என்னுடைய நம்பிக்கை.

கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு என்பதுதான் அந்த மூன்று மந்திரங்கள்.

கடமை - கண்ணியம் - கட்டுப்பாட்டிற்கு உதாரணமாக இருப்பது நகரத்தார்தான்.

ஆகையால், 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்ச்சியிலும் நான் பங்கேற்றேன். இன்றைக்கும் இங்கே

Koviloor Digital Library

வந்திருக்கின்றேன் என்றால், இந்தச் சமூகத்தின்மீது இருக்கின்ற ஒரு அட்மிரேசன்தான்.

தமிழ்நாட்டிலிருந்து வரக்கூடிய ஒரு சமூகம், அந்த சமூகத்தின் செயல்மூலமாக, தமிழ்நாட்டிற்கும், பாரதத்திற்கும் புகழ் தேடிக் கொடுத்திருக்கிறீர்கள்.

ஒரு நாட்டின் அமைச்சராக இருந்துகொண்டு, For the Country, if every community decides, that will do are best for Nation Building Ü‰î Nation Building is not just my Little Provance Ü‰î Nation Building is not just my Little Chettinad. It's my entire Country.

நான் வெளியில் சென்று, நம்முடைய நாட்டைப்பற்றி எடுத்துச் சொல்லும்பொழுது, என்னுடைய செல்ப் கான்பிடென்ஸ், என்னுடைய எத்திகல் வேல்யூசும் என்னுள் இருந்தது என்றால், நான் சொல்வதை, மரியாதையாகக் கேட்பார்கள். நான் எந்தவிதத்திலும் காம்ப்ரமைஸ் ஆகக்கூடாது.

ஆகையால், நான் சொல்லக்கூடிய வேல்யூஸ் சிஸ்டத்தை எடுத்துச் சொல்லும்பொழுது, நான் சொல்கிற வார்த்தையை அவர்கள் சீரியசாக எடுத்துக் கொள்வதற்கு, என்னுள் இருக்கின்ற ஆத்ம சக்தியும், என் குடும்பத்தின்மூலமாக எனக்கு வந்த தைரியமும், கலாச்சாரத்தின்மூலம் வந்த கான்பிடன்சும்தான் எனக்கு வழி நிற்கிறது.

அதை இன்றைக்கு நீங்கள் எடுத்துச் சொல்லக்கூடிய வகையில் இருக்கிறீர்கள். ஒவ்வொரு சமூகமும் இதுபோன்று செய்தால், இந்த நாட்டினுடைய சாப்ட் பவர் சாலிடாக நிற்கும். அதில் உங்களுடைய பங்களிப்பை என்னால் மறக்க முடியாது. ஆகையால், அதனை நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன் என்று நீங்கள் நினைக்கவேண்டாம். நீங்கள் உங்களுடைய நிகழ்ச்சிக்கு அழைத்தீர்கள், ஆகையால், உங்களைப்பற்றி நான்கு வார்த்தை புகழ்ந்து சொல்ல வேண்டும் என்பதற்காக இதனை நான் சொல்லவில்லை.

Koviloor Digital Library

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக, நீங்கள் எங்கே சென்றாலும், அதைத்தான் நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதைத்தான் தலைமுறை தலைமுறையாக ஒரு சொத்தாக உங்களுடைய குழந்தைகளுக்குக் கொடுக்கிறீர்கள். எல்லோரும் தங்களுடைய குழந்தைகளுக்கு தங்கத்தையோ, வைரத்தையோ சம்பாதித்துக் கொடுக்கிறார்கள். அதெல்லாம் கொடுங்கள். ஆனால், அதோடு, பண்பையும், பண்பாட்டையும் கொடுக்கும் பழக்கத்தை தலைமுறை தலைமுறையாக நீங்கள் கொடுக்கிறீர்கள்.

அது உங்களுடைய சாப்ட் ஸ்கில் என்று நான் சொன்னேன்; அதை இன்று நான் வேறு விதத்தில் யோசித்துப் பார்க்கிறேன்.

இதே பிரின்சிபல், இதே ஸ்பீரிட்டை வைத்துத்தான் மோடி அய்யா எப்பொழுதும் பேசிக் கொண்டிருப்பார்.

India should stand all; Indian value system should stand and India should become a Jagatguru we should become Vishva Guru

என்று அவர் பேசுவதின் அர்த்தம் என்ன?

நம்மிடம் எத்தனையோ திறமைகள் இருக்கின்றன. நாம் உலகத்திற்கே கற்றுக் கொடுக்கின்ற திறமைகள் இருக்கின்றன. வகுப்பறையில் குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்கின்ற திறமையா? அந்தத் திறமையும் இருக்கிறது. வெளியில் சென்று தொழில் செய்கின்ற திறமையா? அந்தத் திறமையும் இருக்கிறது.

தொழில் நடத்தி சம்பாதித்த பணத்தை என்ன செய்யவேண்டும்? அதையும் எடுத்துச் சொல்கின்ற திறமை இருக்கிறது. இப்படி நீங்கள் பார்த்தீர்களேயானால், ஒவ்வொரு விஷயத்திலும் அந்தத் திறமைகள் நம்மிடம் இருப்பதைப் புரிந்துகொண்ட காரணத்தினால்தான், நாம் விசுவ குருவாக இருக்கக்கூடிய தகுதி நமக்கு இருப்பதை எடுத்துச் சொன்னார்.

ஒலியை எழுத்தாக்கியவர்: **'முரசொலி' முத்தையா**

▲

Koviloor Digital Library

பெண்களின் பாதுகாப்புக்கு கந்தசஷ்டி கவசம் படியுங்க!

ஒரு வீரனுக்கு, அவனது மார்பிலுள்ள கவசம் எதிரிகளிடம் இருந்து பாதுகாப்பு தருகிறது. அதுபோல், பக்தர்களைக் காப்பதற்காக கந்தசஷ்டி கவசம் உள்ளது. இது தேவராய சுவாமியால் பாடப்பட்டது. சஷ்டி விரதம் இருப்பவர்கள் அதற்காக ஆறுநாளும் இதனைப் படித்து வருவர்.

இதனைப் படித்தால் கிடைக்கும் நன்மையைப் பற்றி தேவராய சுவாமிகளே சொல்லியுள்ளார். கவசத்தின் முதல் பாடலில் 'துதிப்போர்க்கு வல்வினை போம்; துன்பம் போம்; நெஞ்சில் பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் கதித்தோங்கும்; நிஷ்டையும் கைகூடும்' என்கிறார் அவர். அதாவது படிப்போருக்கு தீவினையும், துன்பமும் நீங்குவதோடு செல்வ வளம் பெருகும்.

காலை, மாலையில் பக்தியுடன் படித்து, திருநீற்றினை நெற்றியில் அணிவோருக்கு நவக்கிரகங்களால் நன்மை உண்டாகும். மன்மதன் போல பேரழகும், வாழ்வில் பெறவேண்டிய பதினாறு பேறுகளும் கிடைக்கும். சஷ்டி விரத காலம் மட்டுமின்றி, தினமும் இதைப் படிப்போருக்கு சிறந்த பாதுகாப்பு கிடைக்கும். குறிப்பாக, பெண்களுக்கு பாதுகாப்பற்ற நிலை நிலவும் இந்தக் காலத்தில், சஷ்டி கவசம் சிறந்த பாதுகாப்பைத் தரும்.

▲

Koviloor Digital Library

சிக்கலை சீர்செய்யும் சிங்கப்பூர் தண்டாயுதபாணி

▲ பனையபுரம் அதியமான் ▲



சிங்கப்பூர் அரசின் தேசிய நினைவுச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்ட ஆலயம், நகரத்தாரால் 19-ம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட கோவில், ஆன்மிகப் பணியோடு சமூகப் பணிக்கு உதவிடும் ஆலயம் என பல்வேறு பெருமைகள் கொண்ட ஆலயமாகத் திகழ்வது, சிங்கப்பூர் தண்டாயுதபாணி திருத்தலம் ஆகும்.

ஆலய வரலாறு

1820-ம் ஆண்டு சிங்கப்பூருக்கு குடியேறிய சில நகரத்தார் சமூகத்தினர், 1859-ம் ஆண்டு அங்கு முருகப்பெருமானுக்கு ஒரு ஆலயம் எழுப்பினர். தொடக்கக் காலத்தில் இன்றைய ரிவர் வேலி சாலையும், கிளமென்சியு அவென்யூ என்ற இடமும் சந்திக்கும் பகுதியில் குளக்கரையின் அரச மரத்தடியில் வேல் ஒன்றை நிறுவி வழிபாடு செய்து வந்தனர். பின்னரே தனி ஆலயம் எழுப்பப்பட்டிருக்கிறது. தொடக்கத்தில் முருகனின்

Koviloor Digital Library

சன்னிதி மட்டுமே இந்த ஆலயத்தில் இருந்திருக்கிறது. 1878-ம் ஆண்டு, ஜம்பு விநாயகர், மீனாட்சி அம்மன், சுந்தரேஸ்வரர், இடும்பன், தட்சிணா மூர்த்தி, பைரவர், விஷ்ணு துர்க்கை, நவ துர்க்கை மற்றும் நவக்கிரக சன்னிதிகளும் அமைக்கப்பட்டன.

அதற்கு அடுத்த ஆண்டு முதல் தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் இந்த ஆலயத்தின் விரிவாக்கப் பணிகள் நடைபெற்றன. அதன்படி 75 அடி உயர ராஜ கோபுரம், அர்த்த மண்டபம், அலங்கார மண்டபம், திருமண மண்டபம், பணியாளர் விடுதி, கோவில் அலுவலகம் போன்றவை அமைக்கப்பட்டன.

ஆலய அமைப்பு

சிங்கப்பூர் நகரின் டேங்க் சாலையில், பிரம்மாண்டமான பரப்பளவில் இந்த முருகப்பெருமான் ஆலயம் அமைந்திருக்கிறது. ஐந்து நிலை கொண்ட 75 அடி உயர ராஜகோபுரம் நம்மை கம்பீரத் தோற்றத்துடன் வரவேற்கிறது. ஐந்து கலசங்களைத் தாங்கி நிற்கும் அந்த கோபுரம் கிழக்கு நோக்கி காட்சி தருகிறது. ராஜகோபுரத்திற்குள் நுழைந்ததும் மகா மண்டபம் தென்படுகிறது. நேர் எதிரில் இந்த ஆலயத்தின் மூலவரான முருகப்பெருமான், ‘தண்டாயுதபாணி’ என்ற திருநாமத்துடன் வீற்றிருந்து அருள்பாலிக்கும் கருவறை உள்ளது. தன்னை நாடி வரும் பக்தர்களின் வேண்டுதல் நிறைவேற்றித் தரும் வள்ளலாக

Koviloor Digital Library

இந்த ஆலய இறைவன் திகழ்கிறார். இங்கு வந்து வழிபடுபவர்களின் சிக்கல்கள் அனைத்தும் விரைவில் தீர்ந்துவிடும் என்பது நம்பிக்கையாக உள்ளது.

ஆலயத்தின் கருவறையில் வலதுபுறம் ஜம்பு விநாயகர், இடதுபுறம் இடும்பன், சுந்தரேஸ்வரர், மீனாட்சி அம்மன் சன்னிதிகள் அமைந்துள்ளன. அலுவலகத்தின் எதிரில் நவக்கிரக சன்னிதியும், அதன் அருகே ஆலய அலுவலகமும் இருக்கிறது. ஆலயத் திருச் சுற்றில் விழா மண்டபம் உள்ளது.

விழாக்கள்

தமிழகத்து விழாக்களையொட்டியே இவ்வாலய விழாக்களும் அமைந்துள்ளன. மீனாட்சி அம்மன், துர்க்கை அம்மன் ஆகியோருக்கு லட்சார்ச்சனை, நவராத்திரி விழா, கந்தசஷ்டி, கார்த்திகை தீபத் திருவிழா, ஆருத்ரா தரிசனம், மகா சிவராத்திரி, ராமாயணம் பாராயணம், பிரதோஷம், மாத கார்த்திகை என விழாக்கள் பலவும் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகின்றன. இதுதவிர, திருமுறைகள் முற்றோதல், சைவ சமய சொற்பொழிவுகள் போன்றவையும் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப் படுகின்றன.

இந்த ஆலயத்தின் பிரதான விழாவாக, தைப்பூசம் திகழ்கிறது. தமிழ்க்கடவுளான முருகப்பெருமான் தீய சக்திகளை வெற்றி கொண்டதன் ஐதீகத்தில், தை மாதப் பவுர்ணமியில் வரும் பூச நட்சத்திரத்தில் தைப்பூசம் கொண்டாடப்படுகிறது. தைப்பூசத்தின் முதல்நாள் வெள்ளி ரதத்தில் ஊர்வலமாக புறப்படும் முருகப்பெருமான், கியொங் செய்க் சாலையில் உள்ள 'லயன் சித்தி விநாயகர்' ஆலயம் சென்று, அங்குள்ள விநாயகரிடம் ஆசி பெற்று வேலினைப் பெற்றுக்கொண்டு, காவடிகள் சூழ ஊர்வலமாக மீண்டும் ஆலயம் திரும்புவார்.

Koviloor Digital Library

தைப்பூச நாளன்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள், சிராங்கூன் சாலையில் உள்ள ஸ்ரீனிவாச பெருமாள் ஆலயத்தில் இருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ள தண்டாயுதபாணி கோவிலுக்கு நடைபயணம் மேற்கொண்டு தங்கள் வேண்டுதலை நிறைவேற்றுகின்றனர். அலகு குத்தியும், அலகு குத்திய காவடி, ரதக்காவடி என பல்வேறு விதமான காவடிகளும் எடுத்து வருகின்றனர். பெண்கள், பால்குடங்களைத் தலையில் சுமந்தபடி ஆலயம் வந்து, வேலுக்கு அபிஷேகம் செய்து வேண்டுதலை நிறைவு செய்கின்றனர். விழாவில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படுகிறது.

வெள்ளி ரத உற்சவம்

தொடக்க காலத்தில் இரண்டு காளைகள் பூட்டிய ரதமாக வலம் வந்த வெள்ளிரதம், இன்று நவீன யுகத்திற்கு ஏற்றாற்போல் மோட்டார் வாகனம் மூலம் இழுக்கப்பட்டு வருகிறது. சிங்கப்பூரில் ராபில்ஸ் பிளேஸ், மார்க்கம் தெரு உள்ளிட்ட முக்கிய சாலைகளின் வழியே ரதம் நகர்வலம் வருகின்றது.

அமைவிடம்

சிங்கப்பூர் நகரின் மையப்பகுதியில் கிளமென்சியு அவென்யூ பகுதியில், டேங்க் ரோடு எனும் தேங்க் சாலையில், எண் 15-ல், தண்டாயுதபாணி ஆலயம் அமைந்துள்ளது.

- *தினத்தந்தி, வெள்ளிமலர், 16.2.2018*

Koviloor Digital Library

மாசி மகத்தில் ரத்தின வேல் தரிசனம்!

▲ இலக்கியமேகம் ஸ்ரீநிவாஸன் ▲

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு தேவகோட்டையைச் சார்ந்த நயினப்பச் செட்டியார் கொழும்புவில் தொழில் செய்த போது ஒரு ரத்தின கற்கள் பதித்த வேலினைச் செய்தார். கொழும்புவில் இருந்து அவர்கள் பரம்பரையினர், தேவகோட்டைக்கு வந்தபோது பாதுகாப்பு கருதி ரத்தினவேலை விபூதி பெட்டிக்குள் வைத்து, பூமிக்குள் பாதுகாப்பாக வைத்து இருந்தார்கள். அதன் மகிமை வெளிப்பட ஆரம்பித்தபின், உலக நலனுக்காக அந்த வேலினை, பூஜை செய்து அதனால் அனைவரும் பலன் பெற வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் தகுதியான நபராக தீர்மானித்து கண்டனூர் அருளாடியார் குட்டையய்யா என்பவரிடம் ஒப்படைத்தனர். அருளாடியார் அவர்களும் அவர்கள் பரம்பரையினரும் ரத்தின வேலை விபூதி பைக்குள் வைத்து குன்றக்குடி அன்னதான மடத்தில் பாதுகாப்பாக

Koviloor Digital Library

வைத்து நித்ய பூஜைகளையும் பழநி பாதயாத்திரை சமயத்தில் பையுடன் எடுத்தும் செல்வார்கள். வழிநெடுகிலும் மக்கள் தரிசனம் செய்வார்கள். பைக்குள்தான் வேல் வைக்கப்பட்டிருக்கும்.

சிறப்பு வாய்ந்த இந்த ரத்தின வேலினை தேவகோட்டை நகரத்தார்கள் குன்றக்குடியில் இருந்து பெற்று வந்து ஆண்டுதோறும் மாசிமகத் திருநாளில் தேவகோட்டை நகரச்சிவன் கோயிலில் இருந்து வெள்ளித் தாம்பாளத்தில் பட்டுத்துணியின் மேல் வைத்து நகரப் பள்ளிக் கூடத்திற்கு (கோட்டையம்மன் கோயில் அருகில்) எடுத்துச் செல்வார்கள். நாற்பது வகை நகரத்தார்களில் அறங்காவலராக இருக்கும் அறுபது வயது நிரம்பிய ஒருவர் இதனை எடுத்துச் செல்வார். இதற்காக அவர் ஒரு மாத கால விரதம் மேற்கொள்வார் என்பது சிறப்பு.

மங்கல வாத்யம் முழங்க முருகப்பெருமான் பக்தி பாடல்களுடன், கட்டியம் கூறிட பயபக்தியுடன் விபூதி பையிலிருந்து ரத்தின வேலை எடுத்துக்கொண்டு பாதையெங்கும் ‘மாத்து’ எனப்படும் துணிகளை விரித்து அதன்மேல் நடந்து செல்வார்கள். வழி நெடுகிலும் பக்தர்கள் ரத்தின வேலுக்கு பன்னீரால் தங்கள் கைகளாலேயே (ஆண்கள் மட்டும்) அபிஷேகம் செய்து மகிழ்வார்கள். ஒரு கி. மீ. தொலைவிலுள்ள நகரப்பள்ளிக் கூடத்திற்கு எடுத்துச்சென்று அங்கு அலங்காரம் செய்யப்பட்டிருக்கும் முருகப்பெருமான் திருக்கரங்களில் சார்த்தி சிறப்பு பூஜை செய்வார்கள்.

ஒரு முறை இந்த ரத்தினவேலை வெளியே எடுத்தால் குறைந்தது 32 மூட்டை அரிசி சாதம் வடித்து ஊருக்கெல்லாம் அன்னதானம் செய்ய வேண்டும் என்ற ஒரு நியதி பின்பற்றப்படுவதால், முதல் நாள் அந்தணர்களுக்கு அரிசியும், காய்கறிகளும் வழங்குவார்கள். மாசிமகத்தன்று

Koviloor Digital Library

மகேஸ்வர பூஜை என்னும் அன்னம் பாலிப்பினை ஊர் மக்கள் அனைவரும் உண்ணும் வண்ணம் நகரத்தார் பெரு மக்கள் ஆண்டுதோறும் மிகச்சிறப்பாக செய்து வருகின்றார்கள்.

'வேலை வணங்குவதே வேலை' என்பார்கள் முருக பக்தர்கள்.

- *தினமணி 15.2.2019*

நலம்தரும் ஸ்ரீ லெட்சுமி நரசிம்மர் ஆலயம்

கற்பகவிநாயகர் நகர் விரிவு, பிள்ளையார்பட்டி - 630 207, சிவகங்கை மாவட்டம்.

காரைக்குடி அருகில் உள்ள பிள்ளையார் பட்டியின் தென்மேற்குப் பகுதியான குபேரன் ஆட்சி செய்யும் பகுதியில் நலம்தரும் ஸ்ரீலட்சுமி நரசிம்மர் ஆலயம் அமைந்துள்ளது.

முக்கியமாக எதிரிகளின் தொல்லைகள் அகன்று, ஏவல், பில்லி, சூன்யம் போன்ற பாதிப்புகள் அறவே நெருங்காது. இன்றே, இப்பொழுதே என்கிற நரசிம்மரின் தத்துவத்தின்படி இந்த ஆலயத்தைத் தொழுவதற்கு தமிழகத்தின் பல இடங்களில் இருந்தும் மக்கள் வந்தவண்ணம் உள்ளனர். பிரகலாதனைக் காத்து ஆட்கொண்டவரான லட்சுமி நரசிம்மர் வந்து தொழும் நம்மையும் ஆட்கொள்ளட்டும்.

ஆலய நிறுவனர்
நடராஜ் முருகப்பன்
செல்: *09659868108*

ஆலய அறங்காவலர்
சிதம்பரம் மீனாட்சி

Koviloor Digital Library

முழங்கால் வலி நீக்கும் முருகன்!

▲ சி.வ.சு. ஜெகஜோதி ▲

மேலக்கொடுமலூர் ஸ்ரீகுமரய்யா திருக்கோயில்

அசுரன் சூரபதுமனை அழிப்பதற்காகவே சேனாதிபதியாக முருகப் பெருமானின் அவதாரம் நிகழ்ந்தது. சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து ஜோதியாகத் தோன்றி, ஆறுமுகம் கொண்ட குழந்தையாகி, குமரனாகி, தேவர்களின் சேனைக்கு அதிபதியாகி, அன்னை பராசக்தியிடம் இருந்து சக்தி ஆயுதமாக வேல் பெற்று அதன் துணை கொண்டு அசுரனை வதம் செய்தார் குமரப் பெருமான்.

இது கந்த புராணம் கூறும் கந்தனின் கதை. ஆனால், மேலக்கொடுமலூரில் உள்ள ஓர் ஆலயத்தில், தல புராணமாக வித்தியாசமான ஒரு கதை சொல்லப்படுகிறது. இதுவே இந்த ஊருக்கு பெயர் வந்ததன் காரணத்தையும் கூறுகிறது.

முருகப் பெருமான், அன்னையிடம் வேல் பெற்றுக்கொண்டு மட்டும் போருக்குச் செல்லவில்லை. இன்னும் பல சக்தி வாய்ந்த ஆயுதங்களையும் பெற்றார். அதில் ஒன்று மழு என்ற ஆயுதம். இந்த ஆயுதத்தால் அசுரனின் தலையைக் கொய்து, அதை எடுத்து வரும் வழியில், மாலை வெகு நேரம் ஆனதால், ஓர் இடத்தில் தங்க நேர்ந்தது. அங்கே முனிவர்கள் தவம் செய்துவந்தனர். அவர்களுக்கு காட்சி தந்து அருளினார் குமரப் பெருமான். மேலும், சூரியன் மேற்கில் மறைந்த

Koviloor Digital Library

பின்னே முனிவர்களுக்கு மேற்கு முகமாக நின்று காட்சி அளித்தார். இவ்வாறு, அசுரனை அழிக்க அன்னையிடம் மழு என்ற ஆயுதத்தைக் கேட்டுப் பெற்றதை நினைவுகூரும் வகையில் 'கொடுமழு ஊர்' என்று அழைக்கப்பட்டது இந்த ஊர். மேலும் மேற்கு நோக்கி நின்ற கோலத்தில் இருந்ததால், மேலக் கொடு மழூர் என்று ஆனது. இதுவே பின்னாளில் மேலக்கொடுமலூர் என்று மருவி வழங்கப்படுகிறது. இத்தல இறைவன் குமரனை, பாம்பன் சுவாமிகள், திருவேகம்பத்தூர் கவிராஜ பண்டிதர், எமனேசுவரம் ஜவ்வாதுப்புலவர் உள்ளிட்ட பலரும் பாடியுள்ளனர்.

சூர்யாஸ்தமனத்தில் அபிஷேகம்

மாலை நேரத்தில் சூரியன் மேற்கே மறைந்த பிறகே இந்தத் திருக்கோயிலில் சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். வார நாட்களில் திங்கள், வெள்ளி ஆகிய இரு தினங்களிலும் மாதக் கார்த்திகை நாட்களிலும் சம்பந்தப்பட்ட நட்சத்திரம் இரவு நேரத்தில் வருவதை அனுசரித்து அனைத்து அபிஷேக ஆராதனைகளும் நடக்கின்றன. இந்தத் திருத்தலத்தில் நடைபெறும் 33 அபிஷேகங்களையும் இரவு நேரத்தில் மட்டுமே பார்க்க முடியும். பகலில் அபிஷேகம் எதுவும் நடப்பதில்லை. மா, பலா, வாழை இவை மூன்றும் இணைந்த முக்கனிகளால் ஆன முப்பழ பூஜை வைகாசி மாத கடைசி வெள்ளிக்கிழமை இரவு நடைபெறும்.

Koviloor Digital Library

ஆடிக் கிருத்திகை, பங்குனி உத்திரத் திருவிழா ஆகியவற்றின் போது ஏராளமான பக்தர்கள் காவடி எடுத்து நேர்த்திக்கடன் செய்து பிரார்த்தனைகளை நிறைவேற்றுகிறார்கள். பாத யாத்திரைக் குழுக்கள், மாத கார்த்திகை அபிஷேகத்துக்கு பாத யாத்திரையாகவே வந்து 33 அபிஷேகங்களையும் செய்து வழிபடுவது குறிப்பிடத்தக்கது. சுவாமிக்கு அன்ன நைவேத்தியம் கிடையாது என்பதால் இக்கோயிலில் யாரும் பொங்கல் வைப்பதில்லை. பழங்கள், தேன் கலந்த தினைமாவு, வெல்லம் கலந்த பாசிப் பருப்பு, கைக்குத்தல் அரிசி ஆகியவையே நைவேத்தியமாகப் படைக்கப்படுகிறது.

தல விருட்சம்

குமரக் கடவுளால் பல் துலக்கி வலதுபுறம் வீசப்பட்ட குச்சியே பெரிய அளவில் தல விருட்சமாக (உடைமரமாக)விளங்குகிறதாம். இதன் பெருமையை “விழுந்த உடை வேரூன்றி வெயில் முகம் காணாமல் தளிந்த உடைக்கீழிருக்கும் தங்கக் குமரையாவே” என்று ஜவ்வாதுப் புலவர் பாடியுள்ளாராம்.

இந்தக் கோயிலில் மூலஸ்தானம் சீரமைத்துக் கட்டப்பட்டு, 1926ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது. ராமநாதபுரம் மன்னர் ராமநாத சேதுபதி தலைமையில் 1978ஆம் ஆண்டும் பின்னர் 2004ஆம் ஆண்டும் கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

முழங்கால் வலி நீக்கும் அற்புதம்

தீராத முழங்கால் வலி உடையவர்கள் இக்கோயிலுக்கு வந்து மஞ்சள் பூசப்பட்ட உடங் கால்களை (கவட்டையுடன் கூடிய உடைமரக் கால்கள்) வாங்கி, பக்தி பூர்வமாக குமரனை வேண்டிக்கொண்டு நேர்த்திக் கடன் செலுத்தினால் முழங்கால் வலி நீங்கும். வயிற்றுவலி, நெஞ்சுவலி உள்ளவர்கள் மாவிளக்கு

Koviloor Digital Library

வைக்கின்றனர். குழந்தைப்பேறு இல்லாதவர்கள் 48 நாள் தூய விரதமிருந்து தலவிருட்சமாக உள்ள உடைமரத்து இலையை சாப்பிட்டு, குமரனருளால் குழந்தைப்பேறு கிடைக்கப் பெறுகிறார்கள்.

இருப்பிடம்

ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுகாவில் உள்ள இத்திருக்கோயிலுக்கு மதுரையில் இருந்து வருபவர்கள் பரமக்குடியில் இறங்கி அங்கிருந்து 20 கி.மீ. தூரத்தில் உள்ள நகரப் பேருந்துகள் மூலமாக செல்லலாம். பேருந்து வசதி நிறைய உண்டு. அபிராமத்தில் இருந்து 8 கி.மீ தொலைவு.

- தினமணி, 28.10.2011

புத்தகங்களைக் காதலித்தவர்கள்: பதிப்புத் துறை நால்வர் நூற்றாண்டு!

தமிழ்ப் பதிப்புத் துறையின் வரலாறு நூறாண்டுகளைக் கடந்தது. எனினும், இன்றுவரை அது பெரிதும் லாபகரமான துறையாக இருந்ததில்லை. தனிமனித லட்சிய வேட்கைதான் பெரும்பாலும் இந்தத் துறையை ஒருவரை நாடச்செய்கிறது. இந்தத் துறையையும் லாபம் மிக்கதாகவும் மக்களுடன் நேரடியாக உறவு கொள்வதாகவும் மாற்றிய சாதனைப் பதிப்பாளர்கள் சிலர் இருந்திருக்கிறார்கள். அவர்களில் முக்கியமானவர்கள், ‘பழனியப்பா பிரதர்ஸ்’ பதிப்பகத்தின் நிறுவனர் பழனியப்பா செட்டியார், ‘முல்லை’ பதிப்பகத்தின் நிறுவனர் முல்லை முத்தையா, ‘தமிழ்ப் பண்ணை’யின் சின்ன அண்ணாமலை, ‘பாரி நிலைய’த்தின் செல்லப்பன் ஆகியோர். இந்த நால்வரும் இந்த ஆண்டு நூற்றாண்டைக் காண்கிறார்கள் என்பதுதான் விசேஷம்.

- தி இந்து தமிழ் திசை, 23.5.2020

Koviloor Digital Library

சகல நலன்களும் அருளும் சஷ்டி விரதம்

▲ குமரன் ▲

முருகப் பெருமான் அருள் பெற மேற்கொள்ளப் படும் முக்கிய விரதம் சஷ்டி விரதம். கந்த சஷ்டி என்பது, சூரனை முருகப் பெருமான் சம்ஹாரம் செய்த பெருமைக்கு உரிய நாள். ஐப்பசி மாத வளர்பிறை சஷ்டி அன்றுதான் சூரபத்மனை முருகர் அழித்தார் என்பது புராணம். இதை முன்னிட்டே கந்த சஷ்டி விரத விழா கொண்டாடப்படுகிறது. எல்லா முருகன் தலங்களிலுமே கந்த சஷ்டி விரதம் ஆறு நாட்கள் கடைப்பிடிக்கப்படுகின்றது.

கலியுகக் கடவுளான கந்தப் பெருமான், கொடுங்கோலாட்சி செலுத்திய ஆணவத்தின் வடிவமாகிய சூரனையும், கன்மத்தின் வடிவமாகிய சிங்கனையும், மாயாமலத்தின் வடிவமாகிய தாரகனையும் என, அசுர சக்திகளை அழித்து நல்ல சக்தியை நிலைநாட்டிய நாளே கந்தசஷ்டி என்பது. ஐப்பசி மாத வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி வரை ஆறு நாட்களும் கந்தப் பெருமானை நினைத்து வழிபட்டு சஷ்டி விரதம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

Koviloor Digital Library

விரதம் இருத்தல் உடலுக்கு நலம் பயக்கும் எனக் கூறப்படும். மிளகுகளை விழுங்கி பழங்களை மட்டும் உண்டு, நீர், இளநீர் குடித்து ஒரு நேரம் உணவு உண்டு என்று, அவரவருடைய உடல் நிலைக்கு ஏற்ப கந்தசஷ்டி விரதத்தை கடைப்பிடிக்கலாம். விரதத்தின் ஆறாவது நாளான கந்தசஷ்டியன்று முழு விரதம் இருக்க வேண்டும். விரதத்தைத் தொடங்கும் முன்னர், முருகனின் ஆலயத்துக்குச் சென்று, விரதம் எடுப்பதாக சங்கல்பம் செய்துகொண்டு காப்புக் கட்டி விரதத்தை மேற்கொள்ள வேண்டும்.

இந்த கந்தசஷ்டி விரதம் கடைப்பிடித்தலை ஆண்களும், பெண்களும், சிறுவர் சிறுமியரும்கூடக் கடைப்பிடிக்கிறார்கள். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்க, குடும்பப் பெண்கள் குடும்ப நன்மைக்காக, கன்னிப் பெண்கள் நல்ல கணவனை வாழ்க்கைத் துணையாக அடைய வேண்டி, குழந்தைச் செல்வம் இல்லாதவர்கள் குழந்தை வேண்டி என இந்த விரதத்தைக் கடைப்பிடிக்கிறார்கள்.

கந்தசஷ்டி விரத பயன்கள்

இந்த விரதத்தின்போது, தினமும் கந்த சஷ்டி கவசம், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருப்புகழ், கந்த புராணம் ஆகியவற்றைப் பாராயணம் செய்வதால் சாந்தம், மன அமைதி ஆகியவை ஏற்படும். சகல நலன்களையும் இது அளித்தருளும். கந்த சஷ்டி விரதம் மேற்கொள்ளும் ஆறு நாட்களும் கந்த பிரான் எழுந்தருளியுள்ள ஆலயங்களில் எல்லாம் பூரண கும்பம் வைத்து சிறப்பு அபிஷேகம், அர்ச்சனையும் செய்து, கந்த புராணத்தைப் படிக்கும் நிகழ்ச்சி நடைபெறும். விரதம் முடியும் தினத்தில், முருகன் ஆலயத்தில் சூரன் போர் நடைபெற்று மறுநாள் விரதம் அனுஷ்டித்தவர்கள்,

Koviloor Digital Library

காப்புக் கயிறு விலக்கி, விரதத்தை நிறைவு செய்து, பூஜிக்க வேண்டும். விரத நிறைவு அன்று ஆறு பேருக்கு அன்னதானம் வழங்கி, பிறகே தாம் உணவு உண்ண வேண்டும்.

குறிப்பாக, கந்தசஷ்டி விரத நாட்களில், கறை ஏதுமில்லாத பக்குவப்பட்ட மனத்துடன் இருக்க வேண்டும். உணவு, உறக்கம் தவிர்த்து, தனித்திருந்து செய்யும் தவமே கந்தசஷ்டி விரதம். இதற்கு உரிய பலன், மும்மலம் நீங்கி ஆன்மா முக்தியைப் பெறுவதாகும்.

இருப்பினும், கந்தசஷ்டி விரதத்தை முறையாகக் கடைப்பிடிப்பவர்களுக்கு இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்திகளுக்கு தலைவனான முருகப் பெருமானின் பேரருள் கிட்டும். கந்த சஷ்டி அன்று கந்தப் பெருமானுக்கு அபிஷேகம் செய்த பாலைப் பருகினால், குழந்தைப் பேறு கிட்டும். சஷ்டியில் இருந்தால் அகப்பையில் வளரும் என்பது புகழ்பெற்ற பழமொழி. இதற்கேற்ப, சஷ்டி விரதம் இருந்தால், குழந்தை பாக்கியம் உண்டாகும் என்பது பழங்காலத்தில் இருந்து இன்று வரை இருக்கும் நம்பிக்கை.

கந்த சஷ்டி விரதத்தின் மகிமையையும் பயனையும் கூறும் பாடல்:

ஆரண முனிவர் வானோர் அங்கதன் மற்றை வைகல்
சீரணி முருகவேட்குச் சிறப்பொடு பூசை ஆற்றிப்
பாரணம் விதியிற் செய்தார் பயிற்றும் இவ்விரதம் தன்னால்
தாரணி அவுணர் கொண்ட தம்பதத் தலைமை பெற்றார்.

- தினமணி, 28.11.2011

▲

Koviloor Digital Library

கம்ப ராமாயணம் ஒரு வாழ்வியல் காவியம்

▲ தினமணி ஆசிரியர் கி. வைத்தியநாதன் ▲

சென்னை குரோம்பேட்டையில் உள்ள மாணவர் கம்பர் கழகத்தின் ஒன்பதாம் ஆண்டு விழா வியாழக்கிழமை நடைபெற்றது. கம்ப ராமாயணம் தொடர்பாக நடத்தப்பட்ட விநாடி வினா, பாடல் ஒப்பித்தல் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள், போட்டிகளை ஒருங்கிணைத்த ஆசிரியர்கள், புரவலர்களுக்கு தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன் பரிசுகளை வழங்கினார். அவ்விழாவில் தினமணி ஆசிரியர் பேசியது:

இளைய தலைமுறைக்கு இலக்கியத்தை எடுத்துச் செல்லும் அளப்பரிய பணியைக் கம்பன் கழகம்தான் செய்ய முடியும். கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம் என்று கம்பன் கழகங்கள் ஆற்றும் தமிழ்ப்பணி நிகரற்றது. மாணவர்களைக் கம்பனை ரசித்துப் படித்துப் போட்டிகளில் பங்கேற்க வைக்கும் மிகப் பெரிய சேவையில் குரோம்பேட்டை மாணவர் கம்பன் கழகம் ஈடுபட்டிருக்கிறது.

அடுத்த தலைமுறை இளைஞர்களுக்கு கம்பனையும், கம்ப ராமாயணத்தையும் கொண்டு செல்வதற்கான

Koviloor Digital Library

இதுபோன்ற நிகழ்ச்சிகளை முன்னெடுப்பது பாராட்டுக்குரியது. கம்ப ராமாயணத்தில் தித்திக்காத இடமே இல்லை. பலாப் பழத்தில் ஒவ்வொரு சுளையும் இனிப்பதுபோல அதன் ஒவ்வொரு பாடலும் இனிமையானவை, ரசனைக்குரியவை. ரசனை மிகுந்த வாழ்க்கையை வாழ விரும்பினால் கம்ப ராமாயணத்தை அவசியம் வாசிக்க வேண்டும்.

உலக இலக்கியங்கள் அழகியலுக்கு மட்டுமே முன்னுரிமை அளிப்பவை. ஆனால், இந்திய இலக்கியங்கள், குறிப்பாக தமிழ் இலக்கியங்கள், மனித உணர்வுகளை வெளிப்படுத்துவதில் தன்னிகரற்று விளங்குகின்றன. சங்க இலக்கியங்களும், சிலம்பும், கம்பகாதையும் தொட்டுக் காட்டும் ரசனைக்குரிய மென்மையான உணர்வுக்கு நிகரான கற்பனைகளை, உலக இலக்கியங்கள் அனைத்தையும் தேடிப் பார்த்தாலும் காணக் கிடைக்காது.

திருவள்ளுவர், பாரதியார், ஔவையாரின் கருத்துகள் உலகம் முழுவதும் உள்ள மக்களிடையே எடுத்துச் செல்லப்பட வேண்டும். அதைப் படித்தவர்கள் வாழ்க்கையில் எந்தவொரு இடத்திலும் நிலை தடுமாறாமல் வாழ முடியும் என்றார்.

Koviloor Digital Library

விழாவையொட்டி கம்ப ராமாயணம் குறித்த சொல்லரங்கம், இசை அரங்கம், பட்டிமன்றம், நாட்டிய அரங்கம் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாணவர் கம்பர் கழகம் சார்பில் நடத்தப்பட்ட போட்டிகளில் சென்னை, திருவள்ளூர், வேலூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 35க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்.

இதில் பாஜக மூத்த தலைவர் இல.கணேசன், மாணவர் கம்பர் கழகத்தின் செயலர் பத்மா மோகன், புரவலர்கள் என்.ஆர்.வெங்கடேஸ்வரன், வை.தா.ர.மூர்த்தி, இணைச் செயலர்கள் கோ.மணி, ரேகா மணி, உரத்த சிந்தனை ஆசிரியர் உதயம் ராம், அம்பத்தூர் கம்பன் கழகத்தின் தலைவர் பழ.பழனியப்பன், பேராசிரியர் சரஸ்வதி ராமநாதன், ராமேஸ்வரம் கம்பன் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் கோடூர் ரமணி சாஸ்திரி, எழுத்தாளர் ஏர்வாடி ராதாகிருஷ்ணன், புதுகைத் தென்றல் ஆசிரியர் புதுகை தர்மராஜன், பேராசிரியர் உலகநாயகி பழனி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

- *தினமணி, 30.8.2019*

Koviloor Digital Library

ஆடி அமாவாசையில் பிதுர்பூஜை வழிபாடு!

▲ எஸ். வெங்கட்ராமன் ▲



தஞ்சை மாவட்டம், திருவையாறு வட்டத்தில் உள்ளது திருப்பூந்துருத்தி. திருநாவுக்கரசரின் தேவாரத்திருப்பதிகம் பெற்ற காவிரியின் தென்கரையில் உள்ள பதினோறாவது திருத்தலமாகும். அவர் இங்கு திருமடம் ஒன்று அமைத்து பலகாலம், தங்கி, முதன் முதலில் உழவாரப்பணி செய்த திருத்தலம், சப்தஸ்தான தலங்களுள் ஒன்று. திருஞானசம்பந்தரை பூந்துருத்தி எல்லையில் நாவுக்கரசர் எதிர்கொண்டு அழைத்து அவர் வரும் பல்லக்கை தன் தோளில் சுமந்த பெருமையுடைய இத்தலத்தில்தான் சம்பந்தப்பெருமானுக்காக திரு நந்தியை விலகச் செய்து இறைவன் காட்சியளித்த வரலாறும் உண்டு.

Koviloor Digital Library

காசிப முனிவரின் கடுந்தவத்திற்கு மகிழ்ந்து அவருக்கு இறைவன் இத்தலத்தில் உள்ள ஆதி விநாயகர் சந்நிதியில் உள்ள கிணற்றில் ஓர் ஆடி அமாவாசைத் தினத்தன்று பதிமூன்று புண்ணிய கங்கை உட்பட ஜீவநதிகளை பொங்கி எழச் செய்து காசி விசாலாட்சி சமேத விஸ்வநாதராகக் காட்சி தந்தபெருமை வாய்ந்தது. அந்த புண்ணிய தினத்தில் காசியிலிருந்து கங்கை இங்கு வருவதாக ஐதீகம். பிதுர்சாபம் நீங்கவும், உலக நன்மையைக் கருதியும், அனைத்து விதத்தில் வளர்ச்சியடை வேண்டியும் ஹோமங்கள் நடைபெறுகின்றன. அருள்மிகு செளந்தரநாயகி அம்மன் சமேத ஸ்ரீ புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில் வளாகத்தில் காலை 5.30 மணிக்கு திருமுறை விண்ணப்பம் மங்கள இசையுடன் தொடங்குகின்றது.

பிதுர் சாப நிவர்த்தி தலங்களில் ஒன்றாகிய திருப்பூந்துருத்தியில் ஆடி அமாவாசையன்று செய்யப்படும் பிரார்த்தனை, பித்ரு பூஜை, தர்ப்பணம், சிரார்த்தம் ஆகியவை மிகவும் உன்னதமடைவதாகக் கூறப்படுகிறது. நமது முன்னோர்களை வழிபடும் ஒரு முறையே அவர்களுக்கு நன்றி செலுத்தும் ஒரு பிரார்த்தனையே தர்ப்பணம் எனப்படும். மிகவும் எளிதான அனைவரும் செய்யக்கூடிய வழிபாடாகும். அன்று திருப்பூந்துருத்தி சென்று பித்ரு பூஜை வழிபாட்டில் கலந்து கொள்பவர்கள் ஆலயத்தில் உள்ள ஜீவநதிகள் பொங்கிய கிணற்று நீரை தலையில் தெளித்துக்கொண்டு சங்கல்பம் செய்த பின் பூஜைகளில் கலந்துகொள்ளலாம்.

தொடர்புக்கு: 98944 01250.

- தினமணி, 26.7.2019

Koviloor Digital Library

மறந்ததை மஹாளயத்தில் செய்!

▲ எஸ்.எஸ். சீதாராமன் ▲

ஓர் இல்லறவாசியானவன் தன் பித்ருக்களுக்கு ஒரு வருடத்தில் 15 நாள்களுக்கு சிரார்த்தம் (சிரத்தையோடு நம் முன்னோர்களை நினைவு கூறும் நாள்) செய்ய வேண்டுமென மகரிஷி யாக்ஞவல்கியர் வழி வகுத்து தந்துள்ளார்; இதை மனு மற்றும் பிரம்மாண்ட புராணம் உறுதி செய்துள்ளது.

தர்ம சாஸ்திரத்தில் சிரார்த்த ப்ரகரணம் என்று ஒன்று உள்ளது. அதில் சிரார்த்தத்தைப் பற்றி கூறும்போது தம் முன்னோர்களுக்கு சிரார்த்தம் செய்வதைக் காட்டிலும் மனிதனுக்கு நன்மையைக் கொடுக்கக் கூடியது வேறு ஒன்றுமில்லை. ஆகையால் தமக்கும் தம் குடும்பத்தினருக்கும் நன்மை தொடர்ந்து கிடைக்க வேண்டுமென்று விரும்புபவர்கள்; சிரார்த்தத்தை சிரத்தையுடன் செய்யவேண்டும் என்கிறது. இதுபோல் எவனொருவன் செய்கிறானோ கண்டிப்பாக அவன் பாக்கியவான்; அவனுக்கு நற்பயன் நிச்சயம் உண்டு.

கஜச்சாயை யோகம் என்பது புரட்டாசி மாதத்து கிருஷ்ண பட்சத்தில் வருவதாக ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. இதுவே பித்ரு பட்சம்', 'மஹாளயம்' என அழைக்கப்படுகிறது. அதற்கு மனுஸ்ம்ருதி, தைத்ரிய ப்ராம்மணம் ஆகியவற்றில் புரட்டாசி மாதத்து கிருஷ்ண பட்சத்தில் வருகிற மக நட்சத்திரத்தில் பித்ருக்களை அழைக்கும் விதி கூறப்பட்டுள்ளது. இது கஜச்சாயையில் கூடும் மக நட்சத்திரத்தையே குறிக்கிறது. இந்த நாள்களில் சிரார்த்தம் செய்தால் பல முறை சிரார்த்தம் செய்த பலன் கிடைக்கும் என கூறுவதால் அவ்வளவு விசேஷம் இந்த மஹாளயத்திற்கு.

Koviloor Digital Library

மஹாவிஷ்ணுவிற்கு உகந்த மாதமான புரட்டாசியில் மஹாளய அமாவாசை வருவதால் (மால் +அயம் என்றால் திருமாலுக்கு உரித்தான அயனகாலம் என்று பொருள்); அன்று தர்ப்பணமாவது கட்டாயம் செய்யவேண்டும் எனக் கூறுகிறார்கள். ஆனால் நாம் இதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அறிந்தோ, அறியாமலோ அல்லது தெரிந்தோ, தெரியாமலோ செய்ய மறந்து விடுகிறோம். இதைத்தான் நம் சனாதன தர்மம் 'மறந்ததை மஹாளயத்தில் செய்' என்று கூறுகிறது.

மஹாளயத்தில் நெருங்கிய அனைத்து முன்னோர்களுக்கும் பிண்ட தானம் செய்யப்படுவதால், மஹாளய சிரார்த்தம் சால சிறந்தது. இதை நாம் செய்வதால் நம் குடும்பத்தில் நம்மைச்சுற்றி காரணமே தெரியாமல் நடக்கும்; நம் கண்களுக்குப் புலப்படாத பல இன்னல்கள்/தடங்கல்கள் நீங்கி வளர்ச்சிக்கு வழி செய்து, நற்பேற்றினை அடையச் செய்யும். இதனையே திருவள்ளுவர் 'தென்புலத்தார் வழிபாடு' என சிறப்பித்து கூறியுள்ளார்.

இறந்தபின் நம் முன்னோர்களின் ஆத்மாவானது ஒரு குறிப்பிட்ட காலம் வரை பூமியில் சுற்றிவிட்டு; பின் விண்ணுலகம் செல்லுமாம். பித்ருக்கள் உலகம் என்று ஒன்று உள்ளது; அது சூரிய, சந்திர மண்டலத்திற்கு அப்பால் சொர்க்க லோகம் என்ற பெயரில் உள்ளது. இங்கு அவர்கள் ஆதி என்பவரது கட்டுப்பாட்டில் வசிக்கின்றார்கள். அங்கு அனைத்து வசதிகள் இருந்தாலும்; தனக்கான உணவினை தாங்களே அவர்களால் எடுத்துக் கொள்ளமுடியாது.

அதனால் இந்த உலகத்தின் அதிபதியான எமதர்மராஜனிடம்; தங்கள் குழந்தைகளுக்கும், உறவினர்

Koviloor Digital Library



களுக்கும் தாங்கள் சேர்த்து வைத்த சொத்துக்களுக்கு கைமாறாக அவர்களைக் காண செல்ல வேண்டுமென வேண்டினர். அவர்களின் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு 15 நாள்கள் பூலோக வாசம் அளித்து, தங்கள் பிள்ளைகளிடமிருந்து தாங்கள் வேண்டியதை பெற்றுக்கொள்ளும்படி பித்ருக்களை பூமிக்கு அனுப்பி வைக்கிறார் தர்மராஜன். அந்த காலமே மஹாளயபட்சம் ஆகும்.

இதனை ஏற்று நம் முன்னோர்கள் அவரவர் குழந்தைகளையும், உறவினர்களையும் பார்ப்பதற்காக ஆசையுடன் நம் வீட்டு வாசலில் வந்து நிற்பார்களாம். அப்போது நாமும் மகிழ்ச்சியோடு அவர்களை மந்திரம் மூலம் வரவேற்று அவர்களை திருப்தி செய்ய வேண்டுமென்கிறது நம் புராணம். நாம் செய்யும் தர்ப்பணத்தில் விடுகிற எள்ளும் தண்ணீரும்; எப்படி நாம் அனுப்பும் மணி ஆர்டர் வேறு ஊரிலுள்ள முகவரிக்கு சரியாக போய் சேருமோ அதுபோல்; ஸ்வேதாதேவி என்பவள் அதை உணவாக மாற்றி நம் மூதாதையருக்கு கொடுப்பதற்கு பாலமாக இருக்கிறாள்.

சிலர் பிதுர்சாபம் உள்ளது எனக்கூறுகின்றனர்; அது தவறு. பிதுர்கள் தன் குழந்தைகளுக்கு சாபம் கொடுக்கமாட்டார்கள்; மாறாக சற்று வருத்தப்படுவார்கள். இந்த குழந்தைகள் கையில் தானே

Koviloor Digital Library

நம் பசியை போக்கும் சாவி உள்ளது; நாம் வெறும் எள்ளும் தண்ணீரும் தானே இவன் கை வழியாக கேட்கிறோம்? அதனை தருவதற்குகூட இவர்கள் தயங்குகிறார்களே என வருத்தப்படுகிறார்களாம். அப்படி அவர்களை வருத்தப்பட வைக்கக்கூடாது. அதுவே நமக்கு நற்பேறு கிட்டாமல் செய்துவிடும்.

புனிதமான நீர்நிலைகளில் இதனைத் தருவதால் அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். கயா, காசி, ஹரித்வார், ப்ரயாக்ராஜ், உஜ்ஜைனி, நாசிக் (பஞ்சவடி), புஷ்கர், குருஷேத்ரா, ராமேஸ்வரம், திருமறைக்காடு என்றழைக்கப்படும் வேதாரண்யம், தென்கைலாயம் எனப்போற்றப்படும் திருவையாறு போன்ற புண்ணிய நதிகள் ஓடும் தலங்கள்; மற்றும் மகாபுண்ணிய தலமான கும்பகோணத்திலுள்ள மகாமகக் குளக்கரை போன்ற இந்தத்தலங்களில் முக்கியமாக செய்யலாம். தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்தில் 'அண்டமி' என்ற கிராமத்தில் ஒரு சிவன் கோயில் உள்ளது. இங்கு பித்ருக்களின் ஆசியை பெறுவதற்காகவே அங்குள்ள 'சிவகங்கை' தீர்த்தப்படித்துறையில் பித்ரு ஹோமமோ, பித்ரு தர்ப்பணமோ செய்வது சாலச்சிறந்தது. ஆடல்கலை அறுபத்து நான்கினை; அறுபத்திநான்கு திசைகளாக நிர்ணயித்த சிவனார், தன் அம்சமான, வாஸ்து பகவானாக இங்கு அவதரித்ததாக இத்தல வரலாறு கூறுகிறது.

இத்தனை பெருமை மிக்க மஹாளயபட்சம், நாள்களில் நம் முன்னோர்களுக்கு 'பிதுர் யக்ஞம்' என்று அழைக்கப்படும் நாம் செய்ய வேண்டிய கடமையை ஏதோவொரு நீர்நிலையில் செய்வோம்; மனத்துயர் நீங்கி நிம்மதி பெறுவோம்.

- தினமணி, *13.9.2019*

Koviloor Digital Library

சிறுவாபுரிப் பதிகம்

- மீயன்னா சேவுகன் செட்டி

காப்பு

சிவனாரின்பிள்ளை கணநாத வள்ளல்
 திருப்பாதம் முந்தித் தொழுது
புவியாளக் குன்றந் தனிலாடும் வேலன்
 புகழ்பாட நல்ல தமிழை
சுவையோடு தந்து நிறைவாகச் செய்ய
 துணையாக வேண்டும் எனவே
கவிபாடி வேண்டிக் கசிந்தேத்து கின்றேன்
 கணநாதன் என்றுந் துணையே.

பதிகம்

கல்லாத பேர்க்கும் கவிபாடும் ஆற்றல்
 கடல்போல தந்து விடுவான்
வெல்லாத கோழை வெகுவீர னாக
 விதிமாற்றி வைத்து விடுவான்
நில்லாத செல்வம் நிலையாக இல்லில்
 நிதங்கூடச் செய்து விடுவான்
செல்வாக்கும் வீடும் சீரோடு ஈவான்
 சிறுவாபுரிக் குமரனே. ...1

எனக்காக இல்லம் இலையேஎன் றேங்க
 எழில்வீடு ஐயன் தருவான்
பணக்கார னென்றும் பரதேசி யென்றும்
 பார்த்தாள எண்ணி அறியான்
தனைக்காண வந்து தமிழ்பாடும் அன்பர்
 துணையாக என்றும் வருவான்
தினைக்காட்டு வள்ளி தனைநாடும் வள்ளல்
 சிறுவாபுரிக் குமரனே ...2

Koviloor Digital Library

நெல்லோடு வாழை நிறைவோடு சூழும்
நிலமோங்கு நல்ல பதியாம்
வில்லேந்தும் ராமர் வைதேகி பாலர்
வென்றாடி நின்ற இடமாம்
பொல்லாத சூரன் புறமோட்டி வேலன்
பொழுதோடு தங்கும் இடமாம்
செல்வாக்கும் வீடும் சீரோடும் ஈவான்
சிறுவாபுரிக் குமரனே ...3

தவமோங்கு தந்தை செவியோடு பேசிச்
சதுர்வேதம் சொல்லி விடவே
சிவசாமி நீயும் தென்சாமி மலையில்
திருவீடு கொள்ள விலையோ
புவிவாழும் யானும் புதுவீடு ஒன்றில்
புகவேணும் நல்ல குடியே
சிவபால தேவன் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே ...4

எட்டாத வானோர் எழிலான வீட்டில்
எக்காள மிட்டுப் புகுந்து
கொட்டாடும் சூரர் குலநாச மாகக்
கூர்வேலைத் தொட்ட குமரன்
தட்டாமல் தேவர் தன்வீடு தன்னில்
தானாள விட்ட குகனாம்
செட்டாய் எனக்கும் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே ...5

சூராதி சூரன் தூளாகிப் போக
சுகமேவு தேவர் மகிழ்ந்து
காராருங் கூந்தல் தெய்வானை தன்னைக்
கல்யாணஞ் செய்து தருவார்
ஏராரும் வேலன் இல்வாழ்க்கை காணும்
இனியபரங் குன்றம் எழிலாம்

Koviloor Digital Library

சீராய் எனக்கும் ஒருவீடும் ஈவான்
சிறுவாபுரிக் குமரனே ...6

ஒருயானை போன்ற கணநாத வள்ளல்
ஒப்போடு அன்று உதவ
குறமாது தன்னை மணமாலை சூடிக்
கொண்டாடும் இன்ப நினைவில்
தருமேவு நல்ல தணிகாச லத்தில்
தனிவீடு கொண்ட குகனாம்
சிறியேன் எனக்கும் ஒருவீடும் ஈவான்
சிறுவாபுரிக் குமரனே ...7

சிறகாட வானில் பறந்தாடும் புள்ளும்
சிறுகூடு கட்டி வளரும்
குறியாப் பணத்தைக் கொள்ளாது விட்ட
அறியாத பிள்ளை எனையும்
உறவோரும் என்றும் ஒப்போடு காண
உடனோடி வந்து அருளி
சிறியேன் எனக்கும் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே ...8

ஏராளச் செல்வம் இருந்தாலும் எல்லாம்
எல்லார்க்கும் வாய்ப்ப திலையே
பாராளும் கந்தன் பார்த்தாலே கிட்டும்
பாரோங்கும் உண்மை நிலையே
ஊராரும் போற்றும் பேரோடு வாழ
உடனோடி வந்து அருளி
சீரான இல்லம் தோதாய் அருள்வான்
சிறுவாபுரிக் குமரனே ...9

மெய்பேச வாழ்வில் விளையாது துன்பம்
விதிகூறும் உண்மை இதுவே
பொய்பேசிச் செல்வம் புகழோடு யாரும்
புவிவாழ்ந்த தென்றும் இலையே

Koviloor Digital Library

கையாற வேலன் கால்தேடிப் பற்றக்
கவினாடும் இன்ப நிலையே
தெய்வானை நாதன் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே ...10

வரம்

இப்பாடல் பத்தும் எப்போதும் பாட
எந்நாளும் இன்பம் மிகுமே
செப்பாத போதும் தப்பேதும் இல்லை
செவியாறக் கேட்டபின் நலமே
தப்பாது தேடும் தரமான வீடு
தனதாக வந்து விடுமே
அப்பாவின் பிள்ளை அழகேச வள்ளல்
அவனாசி உண்டு நிதமே.

சிறுவாபுரி திருப்புகழ் பாடல்கள்

வேண்டுவன தரும் திருப்புகழ்

அண்டர்பதி குடியேற மண்டசுரர் ஊருமாற
அண்டர்மன மகிழ்மீற அருளாலே

அந்தரியொ(டு) உடனாடு சங்கரனும் மகிழ்கூர
ஐங்கரனும் உமையாளும் மகிழ்வாக

மண்டலமும் முனிவோரும் எண்திசையில் உளபோரும்
மஞ்சனனும் அயனாரும் எதிர்காண

மங்கையுடன் அரிதானும் இன்பமுற மகிழ்கூற
மைந்துமயி லுடனாடி வரவேணும்

புண்டரிக விழியாள! அண்டர்மகள் மணவாள!
புந்திநிறை அறிவாள உயர்தோளா!

Koviloor Digital Library

பொங்குகடலுடன் நாகம் விண்டுவரை இகல்சாடு
பொன்பரவு கதிர்வீசு வடிவேலா

தண்தரள மணிமார்ப! செம்பொன்எழில் செறிரூப!
தண்தமிழின் மிகுநேய முருகேசா

சந்தமும் அடியார்கள் சிந்தையது குடியான
தண்சிறுவை தனில்மேவு பெருமாளே!

வரம் தரும் திருப்புகழ்

பிறவி யான சடமி றங்கி வழியி லாத துறைசெ றிந்து
பிணிக ளான துயர்உ ழன்று தடுமாறிப்

பெருகு தீயவினையி னொந்து கதிகள்தோறு மலைபொருந்தி
பிடிப டாத ஜனன நம்பி அழியாதே

நறைவி ழாத மலர்மு கந்த அரிய மோன வழிதிறந்த
நளின பாதம் என் சிந்தை அகலாதே

நரர்சு ராதி பரும்வ ணங்கும் இனிய சேவைதனை விரும்பி
நல ன்தாக அடியன் என்று பெறவேனோ

பொறிய ழாத முனிவர் தங்கள் நெறிவழாத பிலனுழன்று
பொருநி சாச ரனைநி னைந்து வினைநாடிப்

பொருவி லாமல் அருள்புரிந்து மயிலின் ஏறி நொடியில் வந்து
புளக மேவ தமிழ் புனைந்த முருகோனே

சிறுவ ராகி இருவர் அந்த கரிபதாதிகொடுபொருஞ் சொல்
சிலைஇ ராமன் உடன்எ திர்ந்து சமராடிச்

செயம தான நகர்அ மர்ந்த அளகை போல வளமிகுந்த
சிறுவை மேவி வரமி குந்த பெருமாளே!

Koviloor Digital Library

அர்ச்சனைத் திருப்புகழ்

சீதள வாரிஜ பாதா! நமோநம
நாரத கீத விநோதா நமோநம
சேவல மாமயில் ப்ரீதா! நமோநம மறைதேடுஞ்

சேகரமான ப்ரதாபா! நமோநம
ஆகமசார சொரூப நமோநம
தேவர்கள் சேனைமகீபா! நமோநம கதிதோயப்

பாதக நீவுகுடாரா! நமோநம
மாவசு ரேசர்கடோரா நமோநம
பாரினி லேஜய வீரா! நமோநம மலைமாது

பார்வதி யாள்தரு பாலா! நமோநம
நாவல ஞான மனோலா நமோநம
பால குமார சுவாமி! நமோநம அருள்தாராய்

போதக மாமுகன் நேரான சோதர
நீறணி வேணியர் நேயா! நமோநம
பூமக ளார்மரு கேசா மகோததி இகல்சூரா

போதக மாமறை ஞான! தயாகரா!
தேனவிழ் நிபநறா வாரு மார்பக
பூரணி மாமதி போல் ஆறு மாமுக! முருகேசா

மாதவர் தேவர்களோடேமுராரியும்
மாமலர் மீதுறை வேதாயு மேபுகழ்
மாநிலம் ஏழினும் மேலான நாயக! வடிவேலா

வானவர் ஊரினும் வீறாகி வீறள
காபுரி வாழ்வினு மேலாக வேதிரு
வாழ்சிறு வாபுரி வாழ்வே! சுராதிபர் பெருமாளே

Koviloor Digital Library

தீயவை நீக்கும் திருப்புகழ்

வேல்இ ரண்டெனு நீள்விழி மாதர்கள்
காதலின் பொருள் மேவின பாதகர்
வீணில் விண்டுள நாடிய ரூமைகள் விலைகூறி

வேளை யென்பதி லாவசை பேசியர்
வேசி என்பவ ராமிசை மோகிகள்
முது நெஞ்சழி ஆசையி லேஉழல் சிறியேனும்

மால யன்பர னார்இமை யோர்முனி
வோர் புரந்தரன் ஆகிய ரேதொழு
மாத வம்பெறு தாளினை யேதி மறவாதே

வாழ்த ருஞ்சிவ போகந னூனெறி
யேவி ரும்பி வினாவுட னேதொழ
வாழ்வ ரந்தரு வாய்அடி யேன்இர் களைவாயே

நீல சுந்தரி கோமாளி யாமளி
நாட கம்பயில் நாரணி பூரணி
நீடு பஞ்சமி சூலினி மாலினி உமைகாளி

நேயர் பங்கெழு மாதவி யாள்சிவ
காம சுந்தரி யேதரு பாலக!
நீர்பெரு ருஞ்சடை யாரருள் தேசிக! முருகேசா

ஆலில் நின்றுல கோர்நிலை யேபெற
மாநில ங்கள் எலாநிலை யேதரு
ஆய னந்திரு வூரக மால்திரு மருகோனே

ஆட கம்பயில் கோபுர மாமதில்
ஆல யம்பல வீதியு மேநிறை
வான தென்சிறு வாபுரி மேவிய பெருமாளே

Koviloor Digital Library

நெற்குப்பை தந்த சம்பந்தம்

▲ ந. ஆவுடையப்பன், நமது செட்டிநாடு ஆசிரியர் ▲

ந. ஆவுடையப்பன்

'செய்யும் தொழிலே தெய்வம்' என்று இருப்பவர்கள் பெரும்பாலும் பகுத்தறிவு வாதிகளாக இருப்பார்கள் என்பதற்கு பலர் உதாரணமாக இருந்து வரலாற்றில் தனியிடம் பிடித்துள்ளனர். அவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்தான் இராம. திருஞான சம்பந்தம் என்கிற இராம. திரு. சம்பந்தம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள அழகிய சிற்றூர் நெற்குப்பை. பல தமிழ் அறிஞர்களை ஈன்ற புகழ் கொண்ட இவ்வூர், பேராசிரியர் முனைவர் தமிழண்ணல், உலகம் சுற்றிய தமிழன் எனப் பேர் பெற்ற சோமலெ, பத்திரிகைத் துறையில் தனியிடம் பெற்ற இராம. திரு. சம்பந்தம் உள்ளிட்டவர்களை தமிழகத்திற்கு வழங்கிய ஊராகும். மூவரும் சமகாலத்தவர்கள் என்பது கூடுதல் சிறப்பாகும்.

நெற்குப்பையில் 1934-ல் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை மேலைச்சிவபுரியில் திண்ணைப் பள்ளியில் பயின்றவர். மதுரை தியாகராாசர் கலைக் கல்லூரியில் படித்து இளங்கலைப் பட்டம் பெற்றார். தனது 22-வது வயதில் மதுரையிலிருந்து வெளிவந்த 'தமிழ்நாடு' நாளிதழில் மதுரையிலும், பின்னர் சென்னையிலும் நான்கு ஆண்டுகள் நிருபராகப் பணியாற்றினார்.

Koviloor Digital Library

இராம. திரு. சம்பந்தம்

1960-இல் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' குழுமத்தின் நிறுவனமான 'இந்தியன் நியூஸ் சர்வீஸ்'-ல் சேர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு அக்குழுமத்தின் அதிபர் ராம்நாத் கோயங்கா அவர்களின் அன்பைப் பெற்றவர். இவரின் ஆங்கிலப் புலமையை அறிந்த கோயங்கா அவர்கள் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளேட்டின் நிருபராகப் பணியமர்த்தினார்.

தனது கடின உழைப்பாலும், தொழில் மீது கொண்ட அளப்பரிய அர்ப்பணிப்பு உணர்வாலும், தனது திறமையாலும் தொடர்ந்து முதுநிலைச் செய்தியாளர், முதன்மைச் செய்தியாளர், சிறப்புச் செய்தியாளர் மற்றும் செய்திப் பிரிவுத் தலைவர் எனப் படிப்படியாக உயர்நிலைகளை எட்டிப் பிடித்தார்.

பத்திரிகைத் துறையில் தனக்கு பக்க பலமாக இருந்து வளரத் துணை நின்ற எக்ஸ்பிரஸ் குழுமத் தலைவர் ராம்நாத் கோயங்கா அவர்களின் மறைவிற்குப் பின் தினமணி நாளிதழின் துணை ஆசிரியராக பொறுப்பேற்று பின்னர் 1995-இல் அதன் ஆசிரியர் ஆனார். 2004 வரை அந்தப் பொறுப்பில் திறம்பட பணியாற்றி தமிழின் முன்னணி பத்திரிகைகளில் ஒன்றாகப் பரவலான வாசகர்களைக் கொண்டதாக உயர்த்தினார்.

நவீன தமிழ் பத்திரிகை உலகின் முன்னோடி இராம. திரு. சம்பந்தம் என்று குறிப்பிடலாம். அந்த அளவிற்கு அவர் செய்தி சேகரிப்பது, வழங்குவது

Koviloor Digital Library

என தன் பணியை மட்டுப்படுத்திக் கொள்ளாது, பத்திரிகைத் துறையின் அனைத்துப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

பத்திரிகைத் துறையின் நிர்வாகத்தையும் திறம்பட நடத்திச் சென்ற பெருமகன் இவர். எதையும் உளமார்ந்த அர்ப்பணிப்பு உணர்வுடன், கடின உழைப்பை நல்கி, கவனமாகச் செய்ய வேண்டும் என்ற கொள்கைப் பிடிப்பு இளம் வயதிலேயே இவரிடம் குடிகொண்டு விட்டது. அதனால்தான் ஆன்மிகமும் வர்த்தகப் பின்னணியும் கொண்ட பாரம்பரியம் மிக்க தன வணிகர் சமூகத்தில் பிறந்த இவர், இளம் வயதிலேயே பகுத்தறிவு கொள்கையை ஏற்று தந்தை பெரியார் வழியில் பயணிக்க முடிவு செய்துள்ளார்.

ஆரம்பத்தில் ஏற்ற கொள்கையை கடைசி வரை கடைப்பிடிப்பதென்பது அரிது. கொள்கைப் பிடிப்புடன் கண்டிப்புக்கு பெயர் பெற்ற பத்திரிகையாளராக கடைசி வரை அவர் இருந்துள்ளார். இவர் பத்திரிகைப் பணியில் எந்த சமரசத்திற்கும் உட்படாதவராகத் திகழ்ந்துள்ளார் என்பதைச் சில நிகழ்வுகள் வாயிலாக நாம் அறியலாம்.

சம்பந்தம் அவர்கள் எவ்வளவு கோபக்காரரோ அதே அளவு இளகிய மனம் கொண்டவர். அந்த இளகிய மனம்தான் தினமணியில் பல புதிய யுக்திகளைப் புகுத்தி பத்திரிகை செய்தியை முந்தித் தருவது மட்டுமல்ல. எளியவர்களுக்கு உதவக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதை உணர்த்தியவர். தினமணியில் வெளியிட்ட செய்திகள் மூலம் பல நூறு ஏழை, எளிய மாணவ, மாணவிகள்

Koviloor Digital Library

மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயர்கல்வி பெற நிதி உள்ளிட்ட உதவிகள் பெற்றனர்.

அதேபோல் ஈழத் தமிழ் அகதிகளின் பரிதாப நிலை கண்டு இவர் வெளியிட்ட செய்தி மக்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி அவர்கள் வாழ்வு மலர பல லட்சங்களை நிதி உதவியாகத் திரட்ட துணைபுரிந்தது.

பொங்கல் மலர், மருத்துவ மலர், மாணவ மலர், தீபாவளி மலர், ரமலான் மலர், கிறிஸ்துமஸ் மலர் என ஆண்டுதோறும் அறிவார்ந்த, பயனுள்ள கட்டுரைகள் கொண்ட சிறப்பு மலர்களை தினமணி மூலம் வெளியிட்டு மலர்களின் முன்னோடியாகத் தினமணியை மிளிரச் செய்தார்.

சமுதாயத்தில் பின்தங்கியவர்களுக்கு உதவ செய்திகள் வெளியிட்ட சம்பந்தம் அவர்கள், தன்னிடம் பணியாற்றும் ஊழியர்களில் உதவி பெறத் தகுதியான, அதே நேரம் சிறப்பாக பணியாற்றுபவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உபரியாக வருவாய் பெறச் செய்யும் உயர்ந்த உள்ளம் அவரிடம் இருந்தது.

அது மட்டுமன்றி தகுதி வாய்ந்தவர்களின் வாரிசுகள் உயர்கல்வி பெற கலாசாலைகளில் இடம் பெற்றுத் தந்த நிகழ்வுகளும் உண்டு. கோபம் இருக்கும் இடத்தில் குணம் இருக்கும் என்பார்கள். அதற்கு சாட்சியாக இருந்தவர் சம்பந்தம் அவர்கள். ஆனால், அந்த குணத்தை தகுதியானவர்களுக்கு மட்டும் காட்டுவது அவரின் இயல்பு. இதனால் பலரின் வெறுப்புக்கு ஆளானாலும் அதுபற்றி கவலைப்பட மாட்டார்.

Koviloor Digital Library

ஒரு செய்தியை முழுமையாகவும், அதே சமயம் தெளிவாகவும், சுருக்கமாவும் எப்படித் தரவேண்டும் என செய்தியாளர்களுக்கு கற்றுத் தந்தவர். செய்தி சேகரிப்பதிலும், வழங்குவதிலும் சிறப்பாகச் செயல்பட்டால் நேரடியாக வெகுவாகப் பாராட்டுவார். அதே சமயம் சரியாகச் செயல்படவில்லை எனில் சிறிதும் தயவு தாட்சண்ய மின்றி கடுமையாக திட்டி விடுவார். ஆனாலும் சிறிது நேரத்தில் சகஜ நிலைக்குத் திரும்பி விடுவது இவரின் இயல்பாகும்.

ஆரம்ப காலத்தில் தினமணியின் இணைப்பாக தினமணி கதிர் மட்டுமே வந்த நிலையில், இவர் ஆசிரியராக இருந்த போது முதல் முதலாக தமிழ் நாளிதழ்களிலேயே சிறப்பு இணைப்பாக வெளியிட்ட சிறுவர்மணி, கலைமணி ஆகியவை வாசகர்களிடம் பெரும் ஆதரவைப் பெற்றன. தற்போது எல்லா முன்னணி தமிழ் நாளிதழ்களும் தினசரி ஒரு இணைப்பை வெளியிடுகின்றன என்றால் இதற்கு தினமணியே முன்னோடியாகும்.

தினமணியிலிருந்து 2004-இல் ஓய்வு பெற்ற இவர், சில காலம் நோய் தாக்குதலில் சிரமப்பட்டு 2007-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், 14-ஆம் நாள் இயற்கை எய்தினார். மறைந்த பின் தன் உடலை மருத்துவமனைக்கு தானமாக வழங்க உயில் எழுதியதின்படி இவரது உடல் சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனைக்கு தானமாக வழங்கப்பட்டு, மறைவுக்குப் பின்னரும் மருத்துவக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பயன்பட்டார்.

- தினமணி, 85 சிறப்பு மலர்

Koviloor Digital Library

31573

குலாலக் கோட்டையூர் குடவரை ஈஸ்வரர்

▲ பொ. ஜெயச்சந்திரன் ▲

புதுக்கோட்டைச் சீமை வடக்கே மாத்தூரையும், கிழக்கில் கறம்பக்குடியையும்; தெற்கில் நேமத்தான் பட்டி வடபுறமுள்ள சவேரியார்புரத்தையும், மேற்கில் ஒலிய மங்கலத்தையும் எல்லையாகக் கொண்ட பகுதியாகும்.

புதுக்கோட்டை சீமை சிறிய பரப்பளவைக் கொண்டவையாக இருந்தாலும் இதன் வரலாற்று பெருமை பல மடங்கு உயர்ந்தது எனலாம். அதாவது, சின்னஞ் சிறிய புதுக்கோட்டை பகுதியில் கி.பி. 7அல்லது 8 ஆம் நூற்றாண்டளவில் மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட சுமார் 16 குடவரை கோயில்களைப் பார்க்கும்போது புதுக்கோட்டையின் சிறப்பு நன்கு விளங்கும். அதில் ஒரு குடவரைதான் குலாலக் கோட்டையூர் குடவரை!

Koviloor Digital Library

குலாலக் கோட்டையூர், புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்திற்கு கிழக்கில் சுமார் 10 கி.மீ. தொலைவில் ராயவரம் ஊருக்கு மேற்கில் சுமார் 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது கோட்டையூர் என்ற வெள்ளாள கோட்டையூர். இந்த கிராமத்திற்கு தென்புறத்திலுள்ள ஒரு சிறிய பாறையின் கிழக்குப் பகுதியில் சுமார் 4 அடி உயரமும், 6 அடி சதுரமும் கொண்ட கருவறையில் இக்குடவரை அமைக்கப்பட்டுள்ளது.

மற்ற எல்லாக் குடைவரைகளிலும் கருவறையிலுள்ள லிங்கத்தை சுற்றி வரலாம். குலாலக் கோட்டையூர் குடவரையில் அரை வட்ட வடிவில் தாய்ப்பாறையின் பின் சுவருடன் சேர்ந்ததாக ஆவுடையார் உள்ளது. லிங்கம் மட்டும் தாய்ப்பாறையின் பின் சுவருடன் சேராமல் இடைவெளியுடன் அமைந்துள்ளது. இவ்வமைப்பு ஒரு வித்தியாசமான அமைப்பாக காணப்படுகிறது. இவ்இறைவனை குடவரை ஈஸ்வரர் என்று அழைக்கிறார்கள். குலாலக் கோட்டையூர் குடவரை கானா நாட்டுப் பகுதியில் பாண்டிய நாட்டின் எல்லைக்குள் அமைந்துள்ளது.

தற்காலத்தில் இக்குடவரையின் வாசற்படிக்கு மரக்கதவு போடப்பட்டுள்ளதோடு கோயிலின் கருங்கல்லில் நந்தியும், பலிபீடமும் செய்து வைக்கபட்டுள்ளன. குடவரையின் வடக்கில் சிறிய ஆஸ்பெட்டாஸ் கொட்டகை அமைத்து அதில் ஓர் அம்பாள் சிலை வைக்கப்பட்டுள்ளது. இந்த அம்பாளை ஸ்ரீமங்களாம்பிகை என்று அழைக்கிறார்கள். இக்கோயிலில் சித்திரா பௌர்ணமி, மாதப் பௌர்ணமி, பிரதோஷம் போன்றவை சிறப்பாக நடைபெறுகின்றன. பக்தர்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு ஈசன் மற்றும் அம்பாளின் பேரருளைப் பெறுகின்றனர்.

தொடர்புக்கு: 84898 85410.
- தினமணி, 8.5.2020

Koviloor Digital Library

குலம் காக்கும் கொப்புடையம்மன்

▲ ரஞ்சனா பாலசுப்ரமணியன் ▲



தமிழகத்தில், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள காரைக்குடி மற்றும் அதன் சுற்றுவட்டார மக்கள் அனைவரின் கண்கண்ட தெய்வமாக விளங்குபவள் அன்னை ஸ்ரீ கொப்புடையம்மன். இந் நகரின் மையப் பகுதியில் அம்பிகையின் அழகிய திருக்கோயில் அமைந்துள்ளது. இத்தலத்தின் கிராம தேவதையாக (இப்பொழுது நகரின்) விளங்குகிறாள் கொப்புடைய நாயகி அம்மன்.

ஆதிசங்கரர் இத்தலம் வந்து கொப்புடை அம்மனை வழிபட்டார் எனக் கூறுகிறார்கள். ஒரு காலத்தில் இந்த இடம் முழுவதும் காரை மரங்கள் அடர்ந்து செழித்த வனப்பகுதியாக இருந்த காரணத்தால் இவ்வூருக்கு 'காரைக்குடி' எனப் பெயர் ஏற்பட்டது. இந்த அம்பிகையைப் பற்றி ஒரு செவிவழி செய்தி கூறப்படுகிறது:

Koviloor Digital Library

இங்கு காட்டுப்பகுதியில், இக்கோயிலின் உபகோயிலான காட்டம்மன் கோயிலில் விளங்கும் காட்டம்மனின் தங்கையாக கொப்புடை நாயகி விளங்குகிறாள். இக்கோயில் வரலாற்றின்படி கொப்புடையம்மனுக்குப் பிள்ளைகள் இல்லை. ஆனால் காட்டம்மனுக்கு ஏழு பிள்ளைகள் உண்டு. கொப்புடையம்மன் தன் சகோதரியைக் காண வரும்பொழுது குழந்தைகளுக்குக்காக கொழுக்கட்டை முதலான தின்பண்டங்களை செய்து எடுத்து வருவாள். ஆனால், காட்டம்மனோ தன் சகோதரி குழந்தையில்லாமலிருப்பதால், தன் குழந்தைகளைப் பார்த்தால் கண்பட்டுவிடுமென்று கருதி, அவர்களை ஒளித்து வைத்து விடுகிறாள். தன்னைத் தவறாக நினைத்த சகோதரியின் மீது கோபம் கொண்ட கொப்புடையம்மன், ஒளித்து வைத்த குழந்தைகளைக் கல்லாக்கி விடுகிறாள். அப்படியும் தன் கோபம் தணியாமல் அங்கிருந்து புறப்பட்டு காரைக்குடி வந்து, அங்கேயே தெய்வமாக அமர்ந்து விட்டதாக கூறப்படுகிறது.

அம்பிகை தன் திருக்கோயிலில் ஸ்ரீ சக்கரத்தின் மீது கிழக்கு நோக்கி நின்ற நிலையில் ஜ்வாலை கிரீடத்துடன் பஞ்சலோக உற்சவத் திருமேனியில் வலது கை அபயம் அளிக்கும் தோற்றத்துடனும், வலது மேல்கை சூலத்தை ஏந்தியபடியும் இடது மேல்கை பாசமேந்தியபடியும் இடது கீழ்கை கபாலத்தை தாங்கியும் அருள்பாலிக்கிறாள். துர்க்கை அம்சத்துடன் விளங்கும் அம்பிகை, கல்வி, செல்வம், வீரம் என மூன்றையும் வாரி வழங்கும் வரப்பிரசாதியாய் விளங்குகிறாள். இந்த மூர்த்தமே உற்சவ மூர்த்தியாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது. இத் திருத்தலத்தில் கருப்பண்ணசாமி வேறெங்கும் இல்லாத கோலத்தில் குதிரையில் அமர்ந்து அருள்பாலிக்கிறார்.

Koviloor Digital Library

இக்கோயிலில் பிரம்மோத்சவம் எனப்படும் பெருந்திருவிழா மிகவும் விசேஷமானது. இத்திருவிழா சித்திரை மாதம் கடைசி செவ்வாய்க்கிழமை தொடங்கி வைகாசி முதல் வாரம் முடிய பத்து நாட்கள் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. சித்திரை மாதம் வரும் நான்கு செவ்வாய்க்கிழமைகளில், மூன்றாவது செவ்வாயன்று கொப்புடையம்மனுக்குப் பூச்சொரிதல் விழா நடைபெறும். இத்திருவிழாவின் எட்டாம் நாள் காலையில் அம்பிகையின் தேரோட்டம் நடைபெறும். அந்த தேர், பிற்பகலில் புறப்பட்டு, மாலையில் காட்டம்மன் கோயிலை அடைந்து, இரவு அங்கேயே தங்கிவிட்டு மீண்டும் மறுநாள் அங்கிருந்து புறப்பட்டு ஆலய நிலைக்கு வந்து சேரும். இத் திருவிழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கு கொள்வர்.

மிகவும் சக்தி வாய்ந்த கொப்புடையம்மனை தன் குலம் காப்பாள் என்ற நம்பிக்கையோடு வணங்குபவர்களின் தீராத நோய்களைத் தீர்த்து வைப்பதுடன், அவர்களை வளமாகவும் வாழ வைக்கிறாள். இங்குள்ள மக்கள் தங்கள் விவசாயம் செழிக்கவும், தொழில் விருத்திக்காகவும், கல்யாண வரம், குழந்தை பாக்கியம் வேண்டியும் அம்பிகையை பிரார்த்தித்து தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றுகின்றனர்.

இவ்வாண்டு, தற்கால சூழ்நிலையைக் கருதி, திருவிழாக்கள் நடைபெறவில்லையானாலும் இச்சமயத்தில் அம்பிகையை நினைவு கூர்ந்து, தங்கள் இல்லங்களிலேயே அம்பிகையை வணங்கி அவள் அருள் பெறுவோம்.

- தினமணி, 8.5.2020

▲

Koviloor Digital Library

உலகின் முதல் சிவன் ஆலயம்

▲ தகவல்: வலையபட்டி சுப்புசுந்தரம் ▲

உத்தரகோசமங்கை பற்றிய சிறப்புத் தகவல்கள்

சிவனின் சொந்த ஊர் மற்றும் உலகின் முதல் நடராஜர் தோன்றிய ஊர், உலகில் உள்ள அனைத்து ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள் வந்து வழிபாடு செய்த கோவில் மற்றும் நவகிரகங்கள் தோன்றுவதற்கு முன்னரே உருவான கோயில். நான்கு யுகங்கள் தோன்றுவதற்கு முன்னரே உருவான ஆலயம் இதுதான்!

ஆயிரம் சிவ அடியார்கள் ஒரே சமயத்தில் மோட்சம் பெற்று சகஸ்கர லிங்கம் உருவாக்கிய ஆலயம் இது. 3000 ஆண்டுகளாய் பூத்து குலுங்கும் இலந்தை மரம் உள்ள ஆலயம் இது. மரகத நடராஜர் சிலை உள்ள ஆலயம் இது. இப்படி பலப்பல அதிசயங்களையும், ஆச்சர்யங்களையும் தன்னகத்தே கொண்டு, சாந்தமாய் இருக்கும் ஆலயம் அதுதான் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள திருஉத்தரகோசமங்கை மங்களநாதர் மங்களநாயகி திருக்கோவில்.

Koviloor Digital Library

தவறாமல் இத்திருக்கோவிக்கு ஒருமுறையாவது சென்று வாருங்கள். இராமநாதபுரம் மாவட்டதில் அமைந்துள்ள உத்தரகோச மங்கை புனித தலம் பற்றிய 60 சிறப்பு தகவல்கள்:

1. உத்தரகோச மங்கையில் உள்ள மூலவர் சுயம்பு லிங்கம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதாக கணிக்கப்பட்டுள்ளது.

2 உத்தரகோச மங்கை கோவில் சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

3. உத்தரகோச மங்கையே சிவபெருமானின் சொந்த ஊர் என்று அழைக்கப்படுகிறது.

4. இத்தலத்து உமா மகேசுவரர் சன்னதி முன்பு நின்று வழிபாடுகள் செய்தால் தம்பதியர் ஒற்றுமை பலப்படும்.

5. திருவிளையாடல் புராணத்தில் வரும் 'வலை வீசி மீன் பிடித்த படலம்' இத்தலத்தில்தான் நடந்தது.

6. உத்தரகோச மங்கை கோவிலில் முக்கிய திருப்பணிகளை பாண்டிய மன்னர்களே செய்தனர். பாண்டிய மன்னர்கள் ஆட்சி அதிகாரத்தில் சிறந்து இருந்த போது, அவர்களது. தலைநகராக சிறிது காலத்துக்கு உத்திரகோசமங்கை இருந்தது.

7. ஆதி காலத்தில் இந்த தலம் சிவபுரம், 'தெட்சிண கைலாயம்', சதுர்வேதி மங்கலம், இலந்தி கைப் பள்ளி, பத்ரிகா ஷேத்திரம், பிரம்மபுரம், வியாக்ரபுரம், மங்களபுரி, பதரிசயன சத்திரம், ஆதி சிதம்பரம் என்றெல்லாம் வேறு வேறு பெயர்களில் அழைக்கப்பட்டது.

8. மங்கள நாதர், மங்கள நாயகி இருவரையும் வழிபடும் முன்பு அங்குள்ள பாண லிங்கத்தை தரிசனம் செய்தால் முழுமையான பலன்கிடைக்கும்.

9. இத்தலத்தில் வழிபாடுகள் செய்பவர்களுக்கு இம்மையில் அனைத்து நன்மைகளும் கிடைக்கும். மறுமையில் முக்தி கிடைக்கும்.

Koviloor Digital Library

10. மங்கள நாதர் தலத்தில் திருமணம் செய்தால் நிறைய மங்களம் உண்டாகும் என்பது ஐதீகம். எனவே முகூர்த்த நாட்களில் நிறைய திருமணங்கள் இத்தலத்தில் நடைபெறுகின்றன.

11. மூலவருக்கு மங்களநாதர் என்ற பெயர் தவிர மங்களேசுவரர், காட்சி கொடுத்த நாயகர், பிரளயாகேசுவரர் என்ற பெயர்களும் உண்டு.

12. இறைவிக்கு மங்களேசுவரி, மங்களாம்பிகை, சுந்தரநாயகி ஆகிய பெயர்கள் உள்ளன.

13. இறைவி மங்களேசுவரி பெயரில் வ.த. சுப்பிரமணியப் பிள்ளை என்பவர் பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார். 1901ஆம் ஆண்டு வெளியான அந்த நூல் 1956ஆம் ஆண்டு மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டது.

14. இத்தலத்தில் உள்ள கல்வெட்டுக்களில் ராவணனின் மனைவி மண்டோதரி பெயர் இடம் பெற்றுள்ளது. எனவே இத்தலம் ராமாயண காலத்துக்கும் முன்பே தோன்றியதற்கான ஆதாரமாக இந்த கல்வெட்டு கருதப்படுகிறது.

15. இத்தலத்தில் வேதவியாசர், காக புஜண்டர், மிருகண்டு முனிவர், வாணாசுரன், மயன், மாணிக்கவாசகர், அருணிகிரிநாதர் ஆகியோர் வழிபட்டு ஈசன் அருள் பேறு பெற்றுள்ளனர்.

16. இத்தலத்து பஞ்சலோக நடராஜர் மிகவும் வித்தியாசமானவர். இவர் வலது புறம் ஆண்கள் ஆடும் தாண்டவமும், இடது புறம் பெண்கள் ஆடும் நளினமான கலைப்படைப்பாக உள்ளார்.

17. கோவில் வாசலில் விநாயகப்பெருமானும், முருகப்பெருமானும் இடம் மாறியுள்ளனர்.

18. இத்தலத்து முருகனுக்கு வாகனமாக யானை உள்ளது. முருகப்பெருமானுக்கு இந்திரன் தனது ஐராவதத்தை இத்தலத்தில் அளித்தான் என்று, இத்தலமான்மியமான 'ஆதி சிதம்பர மகாத்மியம்' கூறுகிறது.

19. ராமேஸ்வரத்தில் இருந்து 83 கிலோமீட்டர் தொலைவிலும், ராமநாதபுரத்தில் இருந்து 18 கிலோமீட்டர் தூரத்திலும் இவ்வாலயம் இருக்கிறது.

20. சங்க இலக்கியத்தில் குறிக்கப்படும் "இலவந்திகைப் பள்ளி" என்பது உத்தரகோச மங்கையைக் குறிக்கும் என்கிறார்கள். மேற்குறித்த கல்வெட்டில் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் பெயரும் செதுக்கப்பட்டுள்ளது.

21. மாணிக்கவாசகருக்கு உருவக் காட்சிதந்த சிறப்புடைய தலம்.

22. இலந்தை மரத்தடியில் எழுந்தருளிய மங்கைப் பெருமான் என்று இப்பெருமான் போற்றப்படுகிறார்.

23. இத்தலத்தில் சுவாமியை அம்பாள் பூசிப்பதாக ஐதீகம்.

24. சொக்கலிங்கப் பெருமான் பரதவர் மகளாகச் சபித்துப் பின் சாபவிமோசனம் செய்து அம்பாளை மணந்து கொண்டு இத்தலத்திலேயே அம்பாளுக்கு வேதப்பொருளை உபதேசம் செய்து, பின்னர் அம்பிகையுடன் மதுரை சேர்ந்ததாக மதுரைப் புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

25. ஆதிசைவர்கள் வசமிருந்த இத்தலம் பின்னரே ராமநாதபுரம் ராஜாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதுமுதல் இன்றுவரை ராமநாதபுர சமஸ்தான ஆளுகைக்கு உட்பட்டதாக இருந்து வருகிறது இத்தலம்.

26. உட்பிரகாரம் நுழையும் பொழுது அழகிய வேலைப்பாடுகளுடன் காணப்படும் யாழிகளில் இரண்டு யாளிகள் வாயில் கல்லால் ஆன பந்தை கொண்டுள்ளது. நாம் கையை நுழைத்துக்கூட பந்தை நகர்த்த முடியும்.

27. இத்தலத்து கோவில் குளத்தில் வாழும் மீன்கள் நல்ல நீரில் வாழும் மீன்கள் இல்லை. கடல்நீரில் வாழும் மீன்களாகும்.

Koviloor Digital Library

28. பிரதோஷத்தன்று இங்கு தாழம்பூ வைத்து வழிபடுகின்றனர். இந்த கோவிலில் சிவனுக்கு அம்பாளுக்கு தாழம்பூ மாலை கட்டிப்போட்டால் அனைத்து தோஷங்களும் நீங்குவதாக ஐதீகம். இதனால் திருமணம் உடனே கைகூடும்.

29. இங்கு ஆதிகாலத்து வராகி கோவில் உள்ளது. இங்கு ஒவ்வொரு வெள்ளி, செவ்வாய். ஞாயிறு தினங்களில் ராகுகாலத்தில் பூஜை தொடர்ந்து செய்தால் தீராத பிரச்னைகள், திருமணத்தடை போன்றவை விலகுகின்றன.

30. ராமேஸ்வரம் வருபவர்கள் இந்த கோவிலுக்கு செல்லலாம்.

31. டெல்லியை தலைநகராகக் கொண்டு 1300ம் ஆண்டு ஆட்சி செய்து வந்த அலாவுதீன் கில்ஜி, உத்தரகோச மங்கையில் மரகதகல் நடராஜர் சிலை இருப்பதை அறிந்து அதை கொள்ளையடிக்க முயன்றான். மங்களநாதர் அருளால் அவன் முயற்சிக்கு வெற்றி கிடைக்கவில்லை.

32. இத்தலத்தில் தினமும் முதல் அமைச்சரின் அன்னத்தானத்திட்டம் நடைபெறுகிறது. ரூ. 700 நன்கொடை வழங்கினால் 50 பேருக்குஅன்னதானம் கொடுக்கலாம்.

33. காகபுஜண்ட முனிவருக்கு கவுதம முனிவரால் ஏற்பட்ட சாபம் இத்தலத்தில்தான் நீங்கியது.

34. சிவனடியார்கள் 60 ஆயிரம் பேர் இத்தலத்தில் தான் ஞான உபதேசம் பெற்றனர்.

35. இத்தலத்தில் உள்ள மங்களநாதர் சன்னதி, மங்களேசுவரி சன்னதி, மரகதகல் நடராஜர் சன்னதி சகஸ்ரலிங்க சன்னதி நான்கும் தனிதனி கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், கொடி மரத்துடன் தனித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

Koviloor Digital Library

36. நடராஜர் மரகத கல்லில் இருப்பதால் இத்தலத்தை சிலர் ரத்தின சபை என்கிறார்கள். ஆனால் உலகின் முதல் கோவில் என்பதால் இது எந்த சபைக்கும் உட்படாதது என்றும் சொல்கிறார்கள்.

37. காரைக்கால் அம்மையாரும் இத்தலத்துக்கு வந்து ஈசனை வழிபட்டு சென்றுள்ளார்.

38. உத்தரகோசமங்கை கோவிலின் கட்டிடக்கலை திராவிட கட்டிடக்கலையை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டதாகும்.

39. ஒவ்வொரு மாதமும் அமாவாசை, பவுர்ணமி, பிரதோஷம், கிருத்திகை, சதுர்த்தி நாட்களில் இத்தலத்தில் சிறப்பு பூஜைகள் நடத்தப்படுகின்றன.

40. சித்திரை மாதம் திருக்கல்யாண வைபவம், வைகாசி மாதம் வசந்த உற்சவம், ஆனி மாதம் பத்துநாள் சிவ உற்சவம், ஐப்பசி மாதம் அன்னாபிஷேகம், மார்கழி மாதம் திருவாதிரை விழா, மாசி மாதம் சிவராத்திரி ஆகியவை இத்தலத்தில் நடைபெறும் முக்கிய விழாக்கள்ஆகும்.

41. தினமும் இத்தலத்தில் காலை 5.30 மணிக்கு உஷத் காலம், 8 மணிக்கு கால சாந்தி, 10 மணிக்கு உச்சிக் காலம், மாலை 5 மணிக்கு சாயரட்சை, இரவு 7 மணிக்கு இரண்டாம் காலம், இரவு 8 மணிக்கு அர்த்தஜாம பூஜைகள் நடத்தப்படுகிறது.

42. மங்களநாதருக்கு தினமும் காலை 6 மணிக்கு, மதியம் 12.30 மணிக்கு, மாலை 5.30 மணிக்கு அபிஷேகம் நடத்தப்படுகிறது.

43. இத்தலத்தில் அதிகாலை 5 மணி முதல் மதியம் 1 மணி வரையும் பிற்பகல் 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் சாமி தரிசனம் செய்யலாம்.

44. மரகத கல் நடராஜர் மீது சாத்தப்பட்டு எடுத்துத் தரப்படும் சந்தனத்தை வெந்நீரில் கரைத்து குடித்தால் தீராத நோய்கள் கூட தீர்ந்துவிடும் என்பது நம்பிக்கை.

Koviloor Digital Library

45. இத்தலத்தில் மொத்தம் 11 விநாயகர்கள் உள்ளனர்.

46. மங்களநாதர் சன்னதியை சுற்றி வரும் போது இடது பக்க மூலையில் மகாலட்சுமியை வழிபடலாம்.

47. இத்தலத்தில் உள்ள ராஜகோபுரத்தில் சர்பேஸ்வரர் சிலை உள்ளது.

48. உலகத்தில் முதலில் தோன்றிய கோவில் என்ற சிறப்பு உத்தரகோசமங்கை தலத்துக்கு உண்டு. இந்த ஆலயம் சிதம்பரம் கோவிலுக்கு முன்பே தோன்றியது.

49. நடராஜர் இங்கு அறையில் ஆடிய பின்னர்தான் சிதம்பரத்தில் அம்பலத்தில் ஆடினார்.

50. இது அம்பிகைக்கு பிரணவப்பொருள் உபதேசித்த இடம்.

51. இங்குள்ள மங்களநாதர் லிங்க வடிவில் உள்ளார்.

52. தலவிருட்சமான இலந்தமரம் மிகமிகத் தொன்மை யானதும் இன்று வரை உயிருடன் உள்ளதும் பல அருள் தலைமுறைகளையும், முனிவர்கள் தரிசித்த தல விருட்சம் ஆகும். இந்த இலந்த மரம் 5000 ஆண்டுகளுக்கு முன்பு உள்ளது.

53. வேதவியாசரும், பாராசரும், காகபுஜண்டரிசி, மிருகண்டு முனிவர்கள் பூஜித்த தலம்.

54. உலகில் உள்ள 1087 சிவாலயங்களிலும் இருக்கும் அருட் சக்திகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் சகஸ்ரலிங்கம் இங்குள்ளது.

Koviloor Digital Library

55. ஆண்டுக்கு இரண்டு திருவிழா இங்கு நடத்தப்படுகிறது. ஒன்று சித்திரைத் திருவிழா, இன்னொன்று மார்கழித் திருவாதிரைத் திருவிழா.

56. இத்திருத்தலத்தில் ஒன்பது தீர்த்தங்கள் உள்ளது.

57. சிவபெருமானால் பரத நாட்டிய கலையை உலக மக்களுக்கு முதல் முதலில் அறிமுகம் செய்யப்பட்ட திருத்தலமாகும்.

58. ஈசன் ஈஸ்வரி பிறந்த ஊரான உத்திரகோச மங்கையில் ஒரு முறை பக்தர்கள் வந்து மிதித்தால் சொர்க்கம் செல்லுவது நிச்சயாமாகும்.

59. உத்தர கோசமங்கை திருத்தலமானது ஸ்ரீராமருக்கு ஈசன் சிவலிங்கம் வழங்கி சேது சமுத்திரத்தில் பாலம் போட உத்தரவு வழங்கிய இடமாகும்.

60. இத்தலத்தில் மாணிக்கவாசகர் பாடிய பொன்னூஞ்சல் பாடலை குழந்தைகளை தாலாட்டும்போது பாடினால், குழந்தைகள் உயரமாகவும், உன்னத மாகவும் வாழ்வார்கள் என்பது பக்தர்கள் நம்பிக்கையாகும்.

இந்து மதத்தை எந்த சக்தியாலும் அழிக்க முடியாது, இது உண்மையிலும் உண்மை.

அதே சமயம் நம் இந்து மதத்தைப் போற்றிப் பாதுகாப்பதும், நம் இந்து மதத்தின் வரலாற்று உண்மையை பிறருக்குத் தெரியப்படுத்துவதும் நம் தலையாய கடமை. முடிந்தவரை நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தெரியபடுத்துங்கள்.

ஓம் நம சிவாய.

- ஜூன் 2019, அருள்மழை

▲

Koviloor Digital Library

தேவகோட்டைச் சேக்கிழார் விழா

▲ முனைவர் சபா. அருணாசலம்,
தேவகோட்டை ▲

திருவாவடுதுறை ஆதீனத்தில் மஹா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தமிழ் பயின்றவர் தேவகோட்டை வன்றொண்டர் நாராயணன் செட்டியார். இவர் கண்பார்வை அற்றவர். சைவ நியம நிட்டைகளிலும் கடுமையான வழிகாட்டு முறையைக் கடைப்பிடித்தவர். ஆகவே திருவாவடுதுறை ஆதீனம் 16ஆம் பட்டம் மேலகரம் சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் இவரை வன்றொண்டர் என்று அழைத்துப் பாராட்டினார்.

பிள்ளையவர்களிடம் தமிழ் பயின்றதால் பெரியபுராணத்தில் இவருக்கு ஈடுபாடு மிகுதி. ஆகவே சேக்கிழார் பெருமானுக்குத் தேவகோட்டையில் திருக்கோவில் அமைக்க எண்ணி இடம் வாங்கினார். செய்கோன் (வியட்நாம்) ஊரிலிருந்து கோவில் மணி வாங்கினார். அதில் சேக்கிழார் கோயில் எனப் பொறிக்கப் பெற்றுள்ளது. இன்றும் தேவகோட்டை நகரச்சிவன் கோயிலில் இம்மணி உள்ளது.

1866 ஜுன் மாதத்தில் தேவகோட்டை வந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களிடம் தாம் கட்டவிருக்கும் கோவிலில் எழுந்தருள இருக்கும் சேக்கிழார் பெருமானுக்காகப் பிள்ளைத்தமிழ் பாடித் தருமாறு கேட்டார். அவ்வாறு தோன்றியதே சேக்கிழார் பிள்ளைத்தமிழ் நூல்.

வன்னொண்டர் வாங்கிய இடத்தில் நகரச் சிவன் கோவிலும் அங்கு தனிக் கருவறையில் சேக்கிழார் கோவிலும் அமைந்துள்ளது. குன்றத்தூரில் இருந்து கொண்டு வரப்பட்ட கல்லால் சேக்கிழார் திருமேனி எழுந்தருளச் செய்யப்பெற்றது. சேக்கிழார் பெருமானுக்கென்று தனிக் கருவறையில் உள்ள கோயில் இடம் மட்டுமே உள்ளது. 1947 முதல் சேக்கிழார் விழா இங்கு நடைபெற்று வருகிறது. முப்பது ஆண்டுகளாக டாக்டர் சபா. அருணாசலம் இந்த விழாவை நடத்தி வருகிறார். ▲

Koviloor Digital Library

சிவகங்கை - பாகனேரியில் 1,000-க்கும் மேற்பட்ட அரிய நூல்கள் கண்டெடுப்பு

▲ தகவல்: தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் கோ.விஜயராகவன் ▲

சிவகங்கை மாவட்டம் பாகனேரியில் 200 ஆண்டுகள் பழைமையான நூல்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. நூல் கண்டறியும்போது கடந்த 1806-ஆம் ஆண்டு வெளியான 'மாறனலங்கார விஷய சூசிகை' எனும் மிகப் பழைமையான அகராதி கிடைத்துள்ளது.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து தமிழகத்தில் உள்ள ஏராளமான பல அரிய நூல்களைக் கண்டறிந்து பழமை மாறாமல் மின் எண்மம் செய்து நூலாக்கி தமிழக அரசின் 'அரிய நூல் அனைவருக்கும்' எனும் திட்டத்தின் மூலம் வெளியிட்டு வருகிறது. இதற்காக தமிழகத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வெளியிடப் பட்ட பல அரிய நூல்களைத் தேடி கண்டறியும் களப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



Koviloor Digital Library

நான்கு லட்சம் பக்கங்கள் மீட்டுருவாக்கம்

இதுவரை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலமாக பல அரிய நூல்கள் கண்டெடுக்கப்பட்டு பழைமை மாறாமல் மீண்டும் தொகுக்கப்பட்டு மக்களுக்குப் பயன் தரும் வகையில் இதுவரை நான்கு லட்சம் பக்கங்கள் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த நூல்கள் அனைத்தும் மின் எண்மம் மற்றும் பதிப்பு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு கிடைக்கும் வகையில் வழிவகுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் கோ.விசயராகவன் தலைமையில் உலகத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் இயக்குநர் பசும்பொன் மற்றும் தமிழறிஞர்கள் சிவகங்கை மாவட்டம் பாகனேரி கிராமத்தில் அமைந்துள்ள காசி விசுவநாத செட்டியார் அரசு நூலகத்தில் அரிய நூல்களைத் தேடி புதன்கிழமை களப்பயணம் மேற்கொண்டனர். இந்தக் களப்பயணத்தில் 1,000-க்கும் மேற்பட்ட பல அரிய

Koviloor Digital Library

நூல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த நூல்கள் அனைத்தும் முறையாகப் பெறப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூலமாக மின் எண்மம் செய்யப்பட்டு, மறுவெளியீட்டுத் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

அரிய சொற்கள் - செய்திகள்:

நூல் கண்டறியும்போது கடந்த 1806-ஆம் ஆண்டு வெளியான 'மாறனலங்கார விஷய சூசிகை' எனும் மிகப் பழைமையான அகராதி கிடைத்துள்ளது. இந்த அகராதியில் தமிழ் மொழியின் பழமையான மற்றும் அரிய சொற்கள் கிடைத்துள்ளன. கடந்த 1883-ஆம் ஆண்டு வெளியான 'கோடீச்சுவரக் கோவை ஆராய்ச்சி' எனும் நூலில் சிவபெருமானின் உருவத் திருமேனி குறித்த 100-க்கும் மேற்பட்ட அரிய சொற்கள் மற்றும் செய்திகள் இடம்பெற்றுள்ளன. அதேவேளையில், அகராதி முறையில் அந்த சொற்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இன்று நூலாசிரியர்கள் காப்புரிமை பெறுவதைப் போன்று அந்தக் காலகட்டத்திலேயே தத்துவ விளக்கப் படல நூலில் 'இப்புத்தகத்தை வாங்கும் ஒவ்வொருவருக்கும் அடியிற் கண்ட சிதம்பரம் கோ.சி.த.மடாலாயம் ஏஜெண்ட் முத்து கிருஷ்ண சுவாமிகளின் கையெழுத்துடன் பார்த்து வாங்க வேண்டியது, கையெழுத்து இல்லாத புத்தகங்கள் சரியானவை அல்ல, ஆகையால் அவற்றை வாங்குபவர்களும் விற்பவர்களும் சட்டப்படி தண்டனைக்குள்ளாவார்கள் என்று இதனால் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது' என அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

என்னென்ன நூல்கள்?

நபிகள் நாயகத்தின் ஜீவிய சரித்திரம் (1931), சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் (1872), ஸ்ரீ கிருஷ்ண சுவாமி தூது (1887), கா.சு. பிள்ளை தமிழகமெங்கும் தேடித் திரட்டித் தொகுத்தளித்த தனிப்பாடல் திரட்டு (1905), திருவாரூர் தியாகராாசர் லீலை (1905), முஸ்லிம் சங்க மறுகமலம் (1920), அற்புத ராமாயணம் (1911), பிரபஞ்ச உற்பத்தி (1913), முன்னாள் முதல்வர் அண்ணா எழுதிய நூல்களில் பல நூல்கள் முதற்பதிப்பாக கிடைத்துள்ளன. அந்த நூல்களில் அண்ணாவின் பெயர் தளபதி சி.என். அண்ணாதுரை என்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் வளர்ச்சித் துறையிடம் ஒப்படைத்தால்...:

இந்த நூல்கள் அனைத்தும் விரைவில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலமாக மறுபதிப்பு செய்யப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டுக்காக வழங்கப்படவுள்ளது. இதுபோன்ற அரிய நூல்கள் பொதுமக்களிடம் இருந்தால் தமிழ் வளர்ச்சித் துறைக்கு அனுப்பி வைப்பவர்களுக்கு மூலப் பிரதியோடு மறுபதிப்பு செய்யப்பட்டு, புதிய நூல்கள் 15 பிரதிகள் வழங்கப்படும் என தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் கோ.விசயராகவன் தெரிவித்தார்.

இந்தக் களப்பணியின்போது தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் வ.சுந்தர், மதுரை காமராாசர் பல்கலைக்கழக தமிழியல் துறைத் தலைவர் பேராசிரியர் போ.சத்தியமூர்த்தி, முன்னாள் தமிழ்த்துறை பேராசிரியர் ரேணுகாதேவி, மன்னர் கல்லூரி ஆய்வாளர் மயில்வாகனன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

- அ. ஜெயச்சந்திரன்,
தினமணி 7.11.2019

Koviloor Digital Library

சிவராத்திரியன்று மட்டுமே தரிசனம் தரும் திருவாசகம்

▲ முல்லை மு. இராமநாதன்,
முல்லை மு. கருப்பையா ▲

திருவாசகம் இறைவனால் எழுதப்பெற்றது. இந்நூலில் இறைவனை எப்படி அடைவது, இறைவனின் பெருமைகள், அண்ட கோளங்களின் விந்தைகள், இரகசியங்கள் இயக்கங்கள், அவைகளை இயக்கும் மூலப்பொருள்கள், சூட்சும நிலைகள் யாவும் விவரிக்கப்பட்டுள்ளன.

ஆத்ம சாதகர்களுக்கு உயிராக விளங்கக்கூடியது திருவாசகம். இந்நூலின் பெருமையை அருளுணர்வால் உணர்ந்து இறைதரிசனம் பெற்றார் இராமலிங்க சுவாமிகள். வள்ளலாரைப் போன்றே பல ஆத்மசாதகர்கள் இந்நூலின் வழியே சென்று, சாதனையில் வெற்றி கண்டுள்ளார்கள்.

கனக சபையிலிருக்கும் இந்நூலை யாரிடம் ஒப்புவிப்பது என்ற பிரச்சனை வந்தது.ஒவ்வொருவரும் தாங்களே இந்நூலை வைத்துக்கொள்ளவேண்டும் என்ற வைராக்கியத்தைக் கொண்டனர்.

அது பொழுது ஒரு அசரீரி கேட்டது; "இந்நூலை நம் சிவகங்கையில் விடுங்கள்.அது கங்கையை சுற்றியிருக்கும் யாரிடம் போய் சேருகின்றதோ அவரிடம் இருக்கட்டும்" என்றது.

அவ்வாறே அந்நூல் சிவகங்கையில் விடப்பட்டது. ஆத்ம சாதகரும் சிவநேசச்செல்வருமாகிய ஒரு பெரியவரிடம்அந்நூல் வந்து நின்றது. அவர், அந்நூலை

Koviloor Digital Library

எடுத்து தலையில் வைத்துக் கொண்டு சிவ பஞ்சாட்சரத்தை ஓதிக் கொண்டே அகத்திற்கு ஏகினார்.

அன்று முதல் அவ்விடத்திற்கு ஸ்ரீ பாதபூஜை அம்பலத் தாடையார் மடம் என்று பெயர் வழங்கலாயிற்று. பெரியவர்க்கு பின் ஒருவர் பின் ஒருவராக திருவாசகத்திற்கு சிவபூஜை செய்து பாதுகாத்தனர்.

இச்சமயம், கர்னாடகா யுத்தம் வந்தது. கோவில் களும், மடங்களும் இடித்து நாசமாக்கப்பட்டன. யுத்தம் சிதம்பரம் வரை பரவியது.

அப்பொழுது, அம்பலத்தாடையார் மடத்து பத்தாவது பட்டத்தை வகித்து வந்தார் ஸ்ரீ நாகலிங்க சுவாமிகள். யுத்தம் பரவி வருவதும் கோவில்கள் இடிக்கப்பட்டு நாசமாக்கப்படும் செய்தியை கேள்விப்பட்டு அதிர்ந்தார். கண் கலங்கினார். இறைவனால் கைச்சாத்து இடப்பட்ட அத்தெய்வத் திருநூலுக்கு பாதிப்பு வந்து விடுமோ என்று பயந்தார்.

பரம்பொருளிடம் சென்று அழுதார்.உண்பதை விட்டு உயிரில்வதியும் சிவபெருமானை நோக்கி சிவபஞ் சாட்சர தியானத்தினுள் ஆழ்ந்தார். நாட்கள் கடந்தன. யுத்தம் கடுமையாகியது. அழிவுச் செய்திகள் வந்த வண்ணமிருந்தன.

Koviloor Digital Library

சுவாமிகள் நித்திரையை விட்டார். சிவதியானத்தை தீவிரமாக்கினார். உலகியல் நினைப்பொழித்தார். திருவாசகத்தை காக்க வேண்டுமே என்ற ஒரே சிந்தனையில் இருந்தார். ஓம் சிவாய நம என்ற நாமத்தில் ஆழ்ந்திருந்தார்.

அடியாரின் துயர் கண்ட இறைவன்,இனியும் கலங்க வைப்பது முறையல்ல என்றெண்ணி நாகலிங்க சுவாமிகளின் நெற்றிப் பொட்டில் பூரணமாய் பரிணமிக்கும் இடத்தை சுட்டி காட்டினார்.

சுவாமிகள் களிப்பு கொண்டார். இறைவன் சுட்டிக் காட்டிய இடமான ஞான பூமியாம் புதுவை என்பதனைக் கண்டு மகிழ்ந்தார்.

ஆத்மசாதனைக்கு மிகவும் உகந்த இடமானதும், சித்தர்களையும் ஞானிகளையும் தன் பால் கவர்ந்திழுக்கும் புண்ணிய பூமியாம் புதுவை தான், "திருவாசகத்தை" பாதுகாக்க சரியான இடம் என்ற இறைவன் தீர்ப்பைக் கண்டு வியந்தார். இறைவன் கருணையை கண்டு மகிழ்ந்தார்.

திருவாசகம் கொண்ட வெள்ளி பெட்டகத்தை பட்டுத் துணியால் மூடி,சிரத்திலே சுமந்து தொண்டர்கள் இருவரை அழைத்துக் கொண்டுபுறப்பட்டார்புதுவைக்கு. புயலினின்றும் தப்பித்து கடலூர் வழியாக புதுவை வந்து சேர்ந்தார்.

புதுவையில் ஓரிடத்தில் சிறு குடில் அமைத்து திருவாசகப் பெட்டகத்தை வைத்து சிவபூஜை செய்து வந்தார். ஆழ்ந்த சிவத்தியானத்தில் ஈடுபட்ட நாகலிங்க சுவாமிகளுக்கு சக்திகள் பெருகின. அவை சித்துக்களாக மாறின. அன்பர்கள் பலரும் சுவாமிகளை தேடி வந்து,குறைகளைக் கூறி போக்கிக் கொண்டனர். சுவாமிகளின் பெருமைகளை பலரும் உணர்ந்தனர்.

Koviloor Digital Library

இப்படியே பல ஆண்டுகள் கடந்தன. சுவாமிகள் இறைவனோடு கலக்கும் நாளை எதிர்ப்பார்த்திருந்தார்.

ஒருசமயம் சிவபூஜை செய்து கொண்டிருக்கும் பொழுது அருகிலிருந்த பட்டத்து தம்பிரான் எதிர்கால நிகழ்ச்சியை சூசகமாக தெரிவிக்க சீடன் பக்குவ நிலைக்கு வந்திருப்பதை உணர்ந்து,அக்கணமே தமது 10 வது பட்டத்தை 11வது பட்டமாக சீடனுக்கு அளித்து பீடத்தில் அமர்த்தினார். அன்றிரவே தாம் இறைவனோடு கலக்கும் செய்தியை இறைவனின் திருக்குறிப்பின் மூலம் உணர்ந்தார்.

இரண்டாம் நாள் தெய்வீக நிலையிலேயே சென்றது. சுவாமிகள் மௌனத்தையே கடைப்பிடித்தார். தம் சீடர் செய்ய வேண்டிய முறைகளை மட்டும் விளக்கினார். மூன்றாம் நாள் வந்தது. சிவத்தினுள் சிவமாகும் நேரமும் வந்தது. சிவத்தோடு ஐக்கியமாகும் ஜீவன் முக்தி பெற்றார்.

உலகம் உய்ய இறைவன் அருளிய திருவாசகத்தைப் போற்றி பாதுகாத்து, புதுவைக்கு கொண்டு வந்த பெருமை ஸ்ரீ நாகலிங்கசுவாமிகளையே சாரும். சுவாமிகள் தங்கியிருந்த இடத்தினுள்ளே அவரின் சமாதி அமைக்கப்பட்டுள்ளது. சமாதி மேல் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது இத்தெய்வீக இடத்திற்கு அம்பலத்தாடையார் மடம் என்று பெயர்.

இம்மடம் அமைந்துள்ளதால் அத்தெருவிற்கு அம்பலத்தாடையார் மடத்து வீதி என்று பிரஞ்சு அரசு பெயர் சூட்டியுள்ளது.

திருவாசகம் அமைந்த வெள்ளிப் பெட்டகம் அன்றாடம் பூஜிக்கப் பட்டு வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் சிவராத்திரியன்று இரவு பெட்டகம் திறக்கப்பட்டு பூஜை செய்யப்படுகின்றது.

Koviloor Digital Library

முருகன் ஒரு மாமரத் தச்சன்

▲ தமிழாகரர் தெ. முருகசாமி ▲

தோன்றிய எந்த ஒரு பொருளும் அழிவதில்லை. அது உருமாறிய மாற்றத்தைப் பெறும், இது அறிவியல் கண்டுபிடிப்பாயினும் ஆன்மிகம் இந்த உண்மையை உறுதிப்படுத்தும் விதமாகவே புராணக் கதையில் பாத்திரங்களின் வழிக் கவிஞர்கள் உணர்த்தினர்.

கந்தபுராணம் கதையில் ஆணவத்தின் உருவமான சூரபதுமன், முருகக் கடவுளை எதிர்த்து இறுதியில் சேவலும் மயிலுமாக முருகனோடு தொடர்பு கொள்கிறான் எனக் கூறுகிறார் கச்சியப்பர். பிற புராண அமைப்பில் கடவுளோர்டு எதிர்த்தவர்கள் அழிந்தொழிந்தாலும் கந்தபுராணத்தில் அப்படியாக இல்லாமல் சூரனே சேவலும் மயிலுமாக மாற்றம் பெறுகிறான்.

மாமரமாக மாயா ஜாலம் காட்டி எதிர்த்த சூரபதுமனாகிய ஓர் உயிர், மயிலும் சேவலுமான ஈருயிராய் வந்தது அறிவியல்படியே உண்மை எனலாம். ஒரு மாமரத்தின் கனிகள் பலவாகத் தோன்றிப் பல மாமரங்களை உருவாக்கும் உண்மைபோல ஈண்டு சூரபதுமனாம் மாமரம் சேவலும் மயிலுமானது. மேலும், இதுவே ஒட்டுமாமரப் பாங்கில் இணைத்து வளர்ந்ததாயின் ஈர் உயிர்ப்பின் ஒட்டுக்கேற்ப மயிலும் சேவலுமான ஈருயிர்த் தோற்றம் அமைந்ததைப் பொருத்தமாக உணரலாம்.

Koviloor Digital Library



இந்த ஒட்டுநிலை போன்ற நிலையிலேயே சூரன் - பதுமன் என்ற இருவேறு உயிர்கள் சேர்ந்து சூரபதுமனாய் ஒருருக் கொண்டு முருகனை எதிர்த்துச் சேவலும் மயிலுமாய் மாறினான் சூரன். சூரன் - பதுமன் என்ற ஈருயிர்க்கு ஈருயிராய் சேவலும் மயிலுமாய் ஆயின என்பது அறிவியல் சார்ந்த தத்துவம் என்று திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் தம் கந்தர்சஷ்டிச் சொற்பொழிவில் கூறியதை நூலிலும் எழுதியுள்ளார். இப்படித் தத்துவத்தோடு கூடிய உண்மையை அசை போட்ட அருணகிரிநாதர், முருகக் கடவுளை 'தச்சா' எனப் புதுப் பெயரிட்டு வழிபடுகிறார்.

'அச்சாய் இறுக்கு ஆணி காட்டி' எனத் தொடங்கும் தச்சூர்த் திருப்புகழில்,

"எக்காலும் மக்காத சூர்கொத் தரிந்த சினவேலா! 'தச்சா'!
மயில் சேவ லாக்கிப் பிளந்த சித்தா!"

Koviloor Digital Library

என்கிறார் அருணகிரியார். மரத் தச்சர்கள் மரத்தைச் சோதித்துப் பார்த்ததும் சிற்பம் செய்ய முற்படுவர். அதுபோல பக்குவப்பட்ட சூரபதுமனைத் த்ண்டித்து ஆட்கொள்கிறார். ஆணவமாக இருந்தவனின் ஆணவத்தைப் போக்கியதால் அவன் சிற்பம் செய்ய உதவும் மரத்தைப் போலாகிவிட்டதால் அருணகிரியார் சூரனை 'மக்காத' என்றார். அதனால்தான் எந்தக் கடவுளரின் வாகனத்தையும் துணை எனக் கூறாத நம் ஆன்றோர் வேலும் மயிலும் துணை என்றனர். இந்த மயில் - மேலே கூறிய 'மக்காத' என்பதுக்குள் அடங்குமன்றோ!

மரத்தச்சர் மரத்தை அரிந்தும், பிளந்தும் செதுக்கியே சிற்பம் வடிப்பர். அதுபோல முருகனும் சூரனாம் மரத்தை ஆணவத்தைப் போக்கிய நேர்த்தியால் தன் வடிவேலால் பிளந்து சேவல், மயில் என்ற இரு சிற்பங்களாய்ச் செதுக்கினான். இந்தச் செயல் ஒரு சித்து வேலைப்பாடானது என்பதால் அருணகிரியார் முருகனைத் தச்சா என்றதும் சித்தா எனப் பாராட்டினார். ஏனெனில், ஒரு மரத்தில் ஒரு சிற்பமே வடிப்பது வழக்கமாயினும் முருகனாகிய தச்சனோ இரு சிற்பம் செதுக்கியது ஒருவித சித்து விளையாட்டன்றோ என வியக்கத் தூண்டுவதால் சித்தா என்றது பொருந்தும்.

இந்தச் சித்தா என்ற பெயரும் முன்னர் கூறிய ஈருயிர்க்கு ஈருயிர் என்ற அறிவியலோடு தொடர்புடைய ஆன்மிகப் பெயராகும்.

தச்சுத் தொழிலுக்கு ஆயுதம் வேண்டுவது போல முருக தச்சனுக்கு வேலே ஆயுதம். இந்த ஆயுதத்தைக் கொண்டு சூரபதுமனை மட்டுமின்றி அவனது தம்பியரையும் கொன்று ஆட்கொள்கிறார் என்பது

Koviloor Digital Library

கந்தபுராணக் கதை. அதற்கேற்பவே "மக்காத சூர் கொத்து அரிந்த சின வேலா" என்றார் அருணகிரியார்.

சூரபதுமனின் தம்பி சிங்கமுகனும் தாரகா சூரனும் முருகனது வேற்படையில் மாய்ந்தாலும் அவர்கள் முருகனின் தாய் பார்வதிக்குச் சிங்க வாகனமாகவும் முருகனுக்கு யானை வாகனமாகவும் முறையே சிங்கமுகனும் தாரகனும் மாற்றம் அடைகின்றனர்.

இவர்களின் இந்த மாற்றத்திற்கும் மேலான மாற்றத்தால் உலகியலுக்கே மெய்ப்பொருள் உண்மையை உணர்த்தும் வகையில் முருகன் மரத் தச்சனாய் செதுக்கிய சேவலும் மயிலுமே சிறப்புடைய தாகும்.

சேவலின் ஒலி - விடியலை உணர்த்தும், மயிலின் தோகை விரித்த ஆட்டம், பறந்துபட்ட ஒளி விளக்கத்தை உணர்த்தும். இவற்றால் ஒலி ஒளி எனப்பட்ட இரண்டே (Sound and Light) மிக மிக இன்றியமையாதன என்பதை உலகறியச் செய்தான் முருகன் என்பது கருத்து. இவற்றைத்தான் தத்துவார்த்தமாக நாத (ஒலி) விந்து (ஒளி) என்ற குறியீட்டுச் (Technical Term) சொற்களாகக் கூறுவர்.

மேலும், இந்த ஒலியினும் ஒளியின் சிறப்பை உணர்த்தும் வகையில் முருகன் சேவலைக் கொடியாகக் கொண்டாலும் மயிலைத் தான் அமரும் வாகனமாக்கிக் கொண்டான். ஆணவம் அடங்கினால் எல்லாம் அடங்கும் என்பதை உலகிற்குக் கூறும் விதமாகவே மயில் ஆணவமாகப் பறந்து செல்லாதபடி ஓரிடத்திலேயே அடக்கி ஆட்கொண்டான் முருகன் என்பது கருத்து. மூன்று வகை மயில்களில் இது அசுர மயில்.

Koviloor Digital Library

இருப்பினும் அசுரத் தன்மையான சேவற் கொடியோடும் மயில் வாகனத்தோடும் முருகனை வணங்குவதில் ஒரு தத்துவம் அறிவுறுத்தப்படுகிறது. அதுதான், கந்தபுராணச் சாரமாய் மரத்தச்சன் செய்த மகத்துவச் சிற்ப வார்ப்பாகும். "தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்றால் தூயவர் ஆவர்' என்கிறார் கச்சியப்பர். இதன் குறியீடே சேவலும் மயிலுமான முருகத் தோற்றம்!

- தினமணி, *26.11.2017*

குன்றத்தூர் காவடி பாதயாத்திரை

- கருணாலயம் பழ. ராமநாதன்

குன்றத்தூர் வாருங்கள்! குறைகளைத் தீர்த்திடுவான்!
காவடி எடுங்கள்! கந்தனருள் பெறுங்கள்!
வேலனை நம்புங்கள்! வினைதீர்ப்பான் பாருங்கள்!
பால்குடம் எடுங்கள்! பாலன் அருள் பெறுங்கள்!
யாத்திரை செல்லுங்கள்! வேற்றுமையை தீருங்கள்!
அன்னதானம் செய்யுங்கள்! ஆறுமுகன் அருள் பெறுங்கள்!
வினை விதைப்பவன் வினை அறுப்பான்!
தினை விதைப்பவன் தினை அறுப்பான்!
கவலையை மறக்க கந்தனை நாடுங்கள்
தீயவினை அகல தியானம் செய்யுங்கள்

கருணாலயம் பழ. இராமநாதன்
பிளாட் எண் 18, நியூ சிவராசன் தெரு,
இரண்டாவது குறுக்குத் தெரு,
திருநீர்மலை, சென்னை- 600 044.
செல்: 98404 26413, 9042318768

Koviloor Digital Library

முருகனின் முற்பிறவி ரகசியம்

▲ சென்னை ஜனகல்யாண் செய்தி மடல் ▲

முருகன் எப்படி அவதரித்தார் என்பது குறித்து காஞ்சிப்பெரியவர், திரிபுரா ரகஸ்யம் என்ற நூலில் மேற்கோள் காட்டியுள்ளார்.

பிரம்மாவின் புத்திரர் சனத்குமாரர். இவர் ஒருமுறை அசுரர்களுடன் போர் புரிந்து வெல்வது போல கனவு கண்டார். இது பற்றி தந்தை பிரம்மாவிடம் விளக்கம் கேட்டார்.

"முற்பிறவியில் அசுரர்களின் அட்டகாசத்தைக் கண்ட நீ அவர்களை ஒழிக்க முடிவெடுத்தாய். அதுவே கனவாக வெளிப்பட்டது. எல்லா உயிர்களையும் தெய்வமாக நீ கருதுவதால் போர் புரிய மாட்டாய். அடுத்த பிறவியில் கனவு பலிக்கும் என்றார். இப்படிப்பட்ட ஞானியான சனத்குமாரிடம் வேண்டும் வரம் அருள்வதாக சிவபார்வதி தெரிவித்தனர்.

வரம் பெற்று பிழைக்கும் தேவை எனக்கில்லை. வேண்டுமானால் நான் வரம் தருகிறேன்," என்றார்.

ஆசை துளியும் இல்லாத சனத்குமாரரைக் கண்டு மகிழ்ந்த சிவன் "அப்படியானால்... ஞானியான நீ எனக்கு குழந்தையாகப் பிறக்க வேண்டும்" என்றார்.

Koviloor Digital Library

சரி..என்று ஒப்புக்கொண்ட சனத்குமாரர் அதிலும் ஒரு புள்ளி வைத்தார். "சிவனே! நீர் மட்டும் தான் என்னை பிள்ளையாகப் பிறக்கக் கேட்டீர். எனவே, தாயின் சம்பந்தமின்றி பிறப்பேன்" என்றார். இதையறிந்த பார்வதி வருந்தினாள்.

அதற்கு சிவன், "கவலை வேண்டாம்! பஸ்மாசுரன் என்பவன் யார் மீது கை வைத்தாலும் அவர்கள் சாம்பலாகும் வரத்தை பெற்றான். அதைச் சோதிக்க என் தலையிலேயே கை வைக்க முயற்சிக்கவே, நான் மறைந்தேன். என்னைக் காணாத சோகத்தில் தண்ணீராக உருகிய நீ பொய்கையாக மாறினாய். அதுவே இப்போது சரவணப்பொய்கையாக இருக்கிறது. நெற்றிக்கண் மூலம் நான் சனத்குமாரனை தீப்பொறிகளாக உண்டாக்குவேன். அத்தீயை தாங்கும் சக்தி அந்த பொய்கைக்கு மட்டுமே உண்டு. சரவணப்பொய்கையில் தாங்கும் போது உனது சம்பந்தமும் பிள்ளைக்கு வந்து விடும்" என்றார்.

அதன்படியே சிவனின் நெற்றிக்கண்ணில் இருந்து முருகன் அவதரிக்க சரவணப் பொய்கையாக தாங்கினாள் பார்வதி.

சொக்கலிங்கம்புதூர்
அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர்

பேரழகும் பெருந்திருவும் பெரும்புகழும் பெற்றானை
காரழகு மலர்க்கூந்தல் கன்னிஇடம் கொண்டானை
ஊரழகுச் சொக்கலிங்கம் புத்தூர் உகந்தானை
தாரழகுச் சந்தரனின் தாள்பணிவோம் நாள்தோறும்

தென்மதுரைப் பாண்டியனின் செல்வத் திருமகளே
அன்புருவத் தாயே அருள்விளக்கே - இன்பமயச்
சொக்கலிங்கம் புதூர்ச் சுந்தரியே மீனாளே
தக்க பெரு நல்வாழ்வு தா.

- கவிஞர் முத்தழகப்ப செட்டியார்

Koviloor Digital Library

உ

சிவமயம்

சொக்கலிங்கம்புதூர்

அருள்மிகு மீனாட்சி சுந்தரர் திருக்கலியாண விழா

திருமணத் தோத்திரம்

▲ இயற்றியவர்: பழ.மு.முத்தழகப்ப செட்டியார் ▲

ஸ்ரீ மீனாட்சி அம்பிகை திருமணத்தோத்திரப் பாடல்கள்

முன்னுரை

சர்வ சக்திகளுக்கும், அதிபதியாக அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனாக சர்வ உலகங்களையும் இயக்கி வரும் சர்வேசுரனையே திருக்கைலை மலையிலிருந்து தென்மதுரைக்கு மேள தாளத்துடன் வரவழைத்தவள் நம் அருள்மிகு மீனாட்சி.

Koviloor Digital Library

இரு துவருங்களின் சக்திகளும் ஒன்றி பராசக்தியாக, சிவசக்தியாக விளங்குபவள் அவள். சகல வேத ஆகமங்களுக்கும் ஞான மார்க்கங்களுக்கும் அப்பாற்பட்ட எல்லையற்ற பரம்பொருள் அவள். எனினும், சிறு குழந்தைகளுடன் அன்புத்தாய், ஆனந்தமாக விளையாடுவது போல, நம்மை அரவணைத்து ஆதரித்து அருட்செல்வம் வழங்குகிறாள்.

திருமணத்தாலேயே, தெய்வீக சக்தியாகத் திகழும் மீனாள், திருமணங்களை உள்ளம் கனிந்து நிறைவேற்றித் தருகிறாள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. அருள்மிகு மீனாட்சி சுந்தரர் ஆண்டு விழாவில் ஆனி மாதம் சுவாதி நட்சத்திரமும் சுபயோகமும் கூடிய சுப தினத்தில், அம்பிகை அண்ணல் திருக்கல்யாண வைபவத்தில், திருத்தாலி ஆசி பெறுதல் சிறப்பிற்குரியதாகும்.

அருள்மிகு அன்னையைப் பாடிப்பணியும் பணியினை ஆர்வமுடன் ஏற்றேன். சக்தி ஈர்த்தது பாடல்கள் மலர்ந்தன. எல்லோரும் பாடிப் பணிந்து பயன் பெற வேண்டுகிறேன். இன்னமும் ஆலய வாயன் இறைவன் கருணை நோக்கால் பன்னரும் புகழ் மிகுந்த பாக்கியம் உனக்கு உண்டாகுக.

அன்பன்
பழ.மு. முத்தழகப்பன்

மலர்கின்ற தாமரை மாணிக்கம்
கங்கை, மதுர மொழி
வளர்கின்ற செந்தமிழ் வான்மின்னல்
பவளம் வைகறையிற்
புலர்கின்ற செங்கதிர் பூரிக்கும் வைரம்
புண்ணியம் கோடி
மிளிர்கின்ற மரகதம் மீனாட்சி
அம்பிகை, மென்மலரே.

Koviloor Digital Library

திருமணத் தோத்திரம்

காப்பு

கணபதியே உன்னைக் கைகூப்பித் தொழுகின்றோம்
மணம் தந்து வாழ்விப்பாய் மக்களையே - கனிவாக
வள்ளிக்கு மணம் தந்து வாழ்வித்த கற்பகமே
பிள்ளையார் அப்பச்சியே.

திருக்கல்யாணம்

சீராட்டிப் பாலூட்டித் தேனூட்டிக் கொஞ்சிவரு
மாறாத காதல் மருவுகாஞ் சனமாலை
பாராட்டி முத்தமிடப் பதுமை என மூவாண்டு
சீராட்டும் சிறுமியாய் ஓடிவரும் தேன்கிளியாள்

நீரோட்ட மரகதமாய் நெளிந்துவரும் தோகைமயில்
பார்போற்ற முடிதரித்த பாண்டியநாட் டிளவரசி
தேரோட்டித் தென்மதுரைத் திருவீதி வலம்வந்த
காரார் குழலி கண்மணியாம் மீனாட்சி

தேரேறித் திசைபரவும் பாண்டியன் திருப்பாவை
போரிட்டாள் சிங்கமெனப் பூங்கைலைப் போர்க்களத்தில்
நீராரும் வார்சடையான் காதலால் நெஞ்சுருகி
ஆர்வமுடன் நோக்கினார் அம்பிகையும் நோக்கினாள்

மாறாத நாணமுடன் மாப்பிள்ளையைப் பார்த்திட்டாள்
சீராரும் நாட்குறித்துத் திருப்பூட்ட மதுரைக்கு
வாரேன்என்று ஆதரவாய் வாக்களித்த மணவாளன்
சீராளன் வந்தார் திருமணமும் காண்கின்றோம்

சொக்கலிங்கம்புத்தூர் சுந்தரப்பொன் ஆலயத்தில்
தக்கசுப முகூர்த்தத்தில் ததிகணதோம் இசைமுழங்க
மக்களெல்லாம் மலர்தூவ மாப்பிள்ளையும் பெண்ணுக்குத்
திக்கெல்லாம் போற்றத் திருப்பூட்டி மாலையிட்டார்.

Koviloor Digital Library

மிக்கபுகழ் சுந்தரனார் மீனாட்சி கரம் சேர்த்துப்
பொற்கரக நீர் பொழிந்தார் பூந்தளவ மணிமார்பன்
எக்காலும் எவ்வுலகும் எவ்வுயிரும் இனிதோங்க
முக்காலும் பல்லாண்டு முழங்கிவர வாழியவே.

திருப்பதி வெங்டேசன் சீனிவா சப்பெருமான்
சிரித்த முகத்தோடு திருமாலும் கூடவர
திருத்தமிகு மீனாட்சி சிந்தூரச் சுந்தரர்க்குப்
பொருத்தமாய்ச் சீரிட்டார் பொன்மணிகள் ஆபரணம்

பெரிய கெண்டைக் கண்டாங்கி பிரானுக்குக் கோடிமடி
டெருகிட்ட தாம்பாளம் மேவுநவ ரத்தினங்கள்
திருப்பதி லட்டுக்கள் தேனொழுகும் பிரசாதம்
விருப்பமுடன் பரிமாறி விருந்திட்டார் இனிதாக.

திட்டி சுற்றிப்போடுவோம்

சொக்கலிங்கம் புத்தூர் தூய திருக்கோயில்
மிக்க சிறப்பாக மேவிவரு மீனாட்சி
தக்க திருவிளக்குச் சரஞ்சரமாய் ஒளிதிகழ
மொக்கவிழும் பூமாலை மூவுலகும் மணம்கமழ

மிக்கசந் தனக்காப்பில் மேதினியெல் லாமயங்க
இத்தரணி விலைபேசும் ஒத்தைக்கல் மூக்குத்தி
சொக்கத் தங்கமதில் சொலிக்கும் வயிரநகைப்
பொற்கொடிக்குத் திட்டி சுற்றிப் போடுவோம் வாருங்கள்.

தென்மதுரைப் பாண்டியனின் செல்வத் திருமகளே
அன்புருவத் தாயே அருள் விளக்கே - இன்பமயச்
சொக்கலிங்கம் புத்தூர்ச் சுந்தரியே மீனாளே
தக்கபெரு நல்வாழ்வு தா.

பூமியிலே முதல்ஆட்சி புரிந்திட்ட மீனாட்சி
நேமியான் தங்கை நிமிலன் திருத்தேவி
மாமதுரைச் சுந்தரனை மாப்பிள்ளையாய்த் தந்தமகள்
தேமதுர மீனாட்சி தென்னாட்டின் சொந்தமகள்

Koviloor Digital Library

கைலை மலை இருக்கும் கட்டழகுச் சுந்தரனை
வைகை நதிக்கு வரவழைத்த சுந்தரியே
தெய்வ விழிஅசைத்தால் திருமணங்கள் கோடிவரும்
கைவிழியார் தம்மை மணம்தந்து காப்பாற்று.

இல்லறமே நல்லறமென்(று) இயம்பினார் ஔவையார்
இல்லறத்தை ஏற்க இனிய மணம் தருவாய்
பல்லறங்கள் புரிகின்ற பார்வதியே மீனாளே
செல்வ மணிக்கிளியே சிவனாரின் தேன்மொழியே

பிறந்த மனை புகுந்தமனை பெருமையுற மணமக்கள்
அருந் ததிபோல் இராமன்போல் அவர்இருவர் கற்பினிலே
சிறந்திருந்து பணியாற்றிச் செகம்புகழ வாழ்ந்திடவே
அருள்புரியவாய் சொக்கலிங்கம் புத்தூர் அம்பிகையே

பொன்மலரைத் தேடிஒரு பூவண்டு வருவதுபோல்
கண்மணியை நாடிஒரு கணவன் வரவேண்டும்
உன்னுடைய சக்தியினால் உரிமை பெறவேண்டும்
சந்தனம்போல் மணமாகிச் சகலநலம் பெறவேண்டும்.

கங்கையிலே தண்ணீருக்குக் காத்திருக்கத் தேவையில்லை
மங்கையுமே இனிதாக மணம்பெறவே தடையில்லை
இங்கிதமாய் வேளைவரும் என்பார் பெரியோர்கள்
நங்கையே உனைப்பணிந்த வேளையே நல்வேளை.

இந்த வருடம் எழில்த்தாலி பெற்றவர்கள்
வந்து கணவருடன் அடுத்த வருடத்தில்
கும்பிடுவோர் உன்னைக் குடம்குடமாய்ப் பால்சொரிந்து
அம்பிகையே மீனாளே அருள்வாய் திருமணங்கள்

சொக்கலிங்கம் புத்தூர்ச் சுந்தரியை மறவாமல்
எக்காலும் சிந்திக்க இனிதே மணம்தருவாய்
செக்கச் சிவந்த சிவபெருமான் மனம்குளிரப்
பக்கம் இருக்கின்ற பச்சைக் கிளிமொழியே

Koviloor Digital Library

கன்னியர்க்குத் திருமணங்கள் கனிவாகச் செய்தருளி
அன்பு மகப்பேறும் அழகான நல்வாழ்வும்
பொன்னும் பொருளும் பூமணமும் தந்தருள்வாய்
அன்னை மீனாட்சி அங்கையற்கண் அம்பிகையே

சீர்காழிச் செல்வனுக்குப் பால் சுரந்த தேன்கிளியே
காரார் குழகுலார்க்குக் கலியாணம் செய்தருள்வாய்
ஏராரும் சிங்கமென இளஞ்சிறுவர் பாலருந்த
ஆராரோ பாடிவர அருள்வாய் திருமகளே

பெற்றதாய் தந்தைக்குப் பெண்ணின் மணம்புரிய
வற்றாத செல்வம் வழங்கியருள் மீனாட்சி
பெற்றதாய் நீஎனவே பேசுவதும் பொய்யாமா
சுற்றார்போல் சுற்றிவந்து கலியாணம் செய்தருள்வாய்

சக்தியார் சிவத்தைத் தண்பாண்டி நாடழைத்தாய்
சத்தியில்ஓர் துளிஉதவிச் சரிமணமும் தந்தருள்வாய்
நித்தியகல் யாணியே நீநினைத்தால் திருமணங்கள்
பத்தாயிரம் நடக்கும் பரிமளப் மாலையுடன்

கண்ணுக்(கு) இமைகாப்பு கனிஉடலுக்கு(கு) உயிர்காப்பு
பெண்ணுக்(கு) மணம்காப்புப் பெண்ணரசி மணம்தருவாய்
பண்ணுக்(கு) இசையாகப் பரம்பரையாய்ச் சொந்தம்நீ
கண்ணால் உயிர்வளர்க்கும் கற்பகமே கயற்கண்ணே

வங்கி மாப்பிள்ளைக்கு வயிரநகை கேட்கிறார்
வங்கிப் பெண்ணுக்கும் குறையாமல் வாங்குகிறார்
சிங்கக் கொடிஉடையார் சீண்டுவதிற் பயனில்லை
எங்கள் குலவழக்கம் எல்லோர்க்கு(ம்) மணம்தருவாய்

சரிபாதி இருந்தருளும் தங்கமணித் தாமரையே
ஒருமகளும் இங்கிருக்க மருமகனும் எங்குள்ளான்
திருவருளாற் கூட்டிவைத்துத் திருமணமும் செய்தருள்வாய்
உரிமையுடன் வேண்டுகிறோம் உலகாளும் உத்தமியே

Koviloor Digital Library

வரும்படியும் சொத்தாக வரும்பெண்ணும் முத்தாகக்
கரும்பு தின்பதற்கும் கைக்கூலி கேட்கின்றார்
அருள் குணமே சொத்தாக அன்பதுவே முத்தாக
இருந்து பணிபுரிந்தால் இருகோடி சேர்த்திடலாம்

திருத் தாலியின் சிறப்பு

பூமலரு முன்பாகப் பொன்னரும்பு தெரிவதுபோல்
பூமணத்தின் முன்பாகப் பொற்றாலி இருக்கிறது
பூ வும் மலர்ந்துவரும் பொற்றாலி கழுத்தேறும்
தாயின் கருணையினாற் சகலநலம் உண்டாகும்.

ஆவலுடன் சுமங்கலி என்(று) அழைக்கவரும் பொற்றாலி
பூமதுரை மீனாட்சி புகழ்மணக்கும் பொற்றாலி
மாதரார் மங்களமாய் அணிகின்ற பொற்றாலி
வேதமந்திர(ம்) முழங்க வீற்றிருக்கும் பொற்றாலி

அன்பின் அறிகுறியாய் அணிகின்ற பொற்றாலி
பொன்னின் புகழ்கூட்டிப் பொலிகின்ற பொற்றாலி
கண்ணொற்றிக் கும்பிட்டுக் கழுத்தணியும் திருத்தாலி
பெண்ணுக்குப் பூச்சூட்டிப் பெருமைதரும் திருத்தாலி

அங்கயற்கண் அம்பிகையாம் அழகு மீனாள்
செம்பதுமத் திருமணமும் சீக்கிரத்திற் செய்திடுவாள்
தங்கமணி நாற்காலி தனிலியிருந்து தாலாட்டத்
தங்கப் பதுமைஎனத் தருவாள் மகப்பேறு.

சொக்கலிங்க மீனாட்சி துணையால் மணம்புரிந்து
தக்கநவ ரத்தினங்கள் சரஞ்சரமாய் ஒளிதிகழக்
கற்கண்டும் தேனும் கலந்து மொழிபேசும்
மக்களையும் பெற்று மகிழ்வாக வாழியவே,

Koviloor Digital Library

கன்னியர் வேண்டுகிறார்

பூத்திருக்கும் புட்பங்கள் பூமாலை ஆவதற்கும்
காத்திருக்கும் திருமணங்கள் கனிவாய் நிகழ்வதற்கும்
வாய்ப்புவரும் படியாக வளமான தாலிதரக்
காத்திருக்கும் நித்திய கல்யாணி வாழியவே,

அன்பிற் குரியவராய் அறிவிற் சிறந்தவராய்
கண்ணுக் கினியவராய்க் கருத்திற் கிசைந்தவராய்
பண்பு மிகுந்தவராய்ப் பழக நல்லவராய்க்
கண்ணுக்கு அழகான மாப்பிள்ளையாய்ப் பாரம்மா,

காதற் கணவனைக் கைபிடித்துக் கனிவாகப்
பூவும் மணமும்போற் பொன்னாக வாழ்ந்திடுவோம்
ஆதரவு தருகின்றாள் அன்னைமீனாட்சிஎனப்
பூமதுரக் கன்னியர்கள் பொற்றாலி பெறுகின்றார்

கல்லைக் கனிஆக்கும் கருணைமிகு மீனாட்சி
தொல்லை தனைநீக்கிச் சூழ்நிலையை நன்றாக்கி
நல்ல வழிகாட்டி நலம்மிகுந்த பொன்கூட்டிக்
கல்யாணப் பரிசுதரக் கன்னியர்கள் வேண்டுகின்றார்

காலை அரும்பிக் கடும்பகலிற் கனிவாகி
மாலை மலரும் மல்லிகைப்பூ மாலையினைக்
காளை ஒருவன் கையினாற் சூட்டுகின்ற
வேளை வருகிறது மீனாட்சி புன்னகையால்

திருவருளும் சொக்கலிங்க மீனாள் திருவருளால்
குருபார்வை வருகிறது கொருமேளம் கேட்கிறது
வருமானம் வருகிறது வாழ்த்தொலியும் கேட்கிறது
திரு மணச் செய்திஎல்லாம் தேன்போல் இனிக்கிறது.

சொக்கத் தெங்கமதிற் சொலிக்கின்ற தாலியினை
மிக்க மகிழ்ச்சியுடன் மீனாட்சி தருகின்றாள்

Koviloor Digital Library

அக்கரையாய் முன்வந்(து) அழகான மாப்பிள்ளையும்
திக்கெல்லாம் புகழத் திருப்பூட்டி வாழியவே,

கைராசி மீனாள் கவின்தாலி தருகின்றாள்
அரசாணிக் கால்நாட்டி அழகான மணவறையில்
திருக்கோலம் பூமணக்கத் திருவிளக் கேற்றிவைத்துத்
திருப்பூட்டி மகிழ்வதுபோல் தெரிகிறது சிந்தையிலே.

பொன்னாரும் கன்னியர்க்குப் பொற்றாலி தருகின்றாள்
அன்னையாய் அன்பாய் அருள்புரியும் மீனாட்சி
கண்ணுக் கினிய கணவனுக்கு மாலையிட்டு
எந்நாளும் சேமமாய் இனிதாக வாழியவே.

சொக்கலிங்கம் புதூர் மீனாட்சி சுந்தரியே
மக்களெல்லாம் மலர்தூவி வாழ்த்துகிறோம் உன்னடியில்
திக்கெல்லாம் நீ அருளும் திருத்தாலி மகிமையினால்
மக்க ளெல்லாம் மணமேவி மகிழ்வாக வாழியவே.

வாழ்த்து

திருத்தாலி மஞ்சள் திருநீறு குங்குமமும்
திருமேவு மீனாட்சி திருமணத் தோத்திரமும்
திருவருளும் மீனாட்சி திருப்பெயரால் வழங்குகிறோம்
கருத்தாகப் பூசித்துக் கலியாண நலம் பெறுக.

பொன்மணியும் செல்வமும் பூமணமும், மகப்பேறும்
அன்னை மீனாட்சி அருள் புரிய வேண்டுகிறோம்.

அருள்மிகு மீனாட்சி சுந்தரர் துணை.

அன்புடன்

மு. அழ. முத்தையா கோமதி

Koviloor Digital Library

மக்களிடையே வாசிக்கும் பழக்கம் அதிகரித்துள்ளது

▲ நீதியரசர் வெ. ராமசுப்பிரமணியன் ▲

மக்களிடையே வாசிக்கும் பழக்கம் அதிகரித்துள்ளது என நீதியரசர் வெ.ராமசுப்பிரமணியன் தெரிவித்தார். தேவகோட்டை பதிப்பாளர்கள் சங்கம் சார்பில் நவ.9 ஆம் தேதி வரை நடைபெறும் புத்தகத் திருவிழாவை சனிக்கிழமை (நவ.1) துவக்கிவைத்துப் பேசியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் பேசியதாவது: இந்த ஊர் வெறும் தேவகோட்டை அல்ல, பதிப்பாளர்களின் கோட்டை. இந்தியாவிலேயே அதிக பதிப்பாளர்கள் உள்ள கோட்டை. பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தேவகோட்டை பதிப்பாளர்கள் புத்தகங்களைப் பதிப்பித்து வந்தனர். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரின் ஆசியுடனும், நல்லி குப்புசாமி செட்டியாரின் ராசியினாலும் இந்தப் புத்தகத் திருவிழா தொடங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் நாளேடுகள் வந்தபோது ஆங்கிலேயர்கள் 1867ஆம் ஆண்டு அச்சகம் மற்றும் புத்தகங்கள் பதிப்புக்கான சட்டம் கொண்டு வந்தனர். ஏனென்றால், பத்திரிகை சுதந்திரம் என்பது அரசாங்கத்தின் கட்டுக்குள் இருக்க வேண்டும் என்பதற்காக. இல்லையென்றால், இந்த மக்களிடையே படிக்கும் பழக்கம் அதிகமாகிவிடும், அதன் காரணமாக மக்களிடையே சுதந்திரம் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டு விடும் என எண்ணி, அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தனர். ஆனால், துரதிருஷ்டவசமாக இப்போதும் அந்தச் சட்டம் நடைமுறையில் உள்ளது.

Koviloor Digital Library

நாட்டு மக்களிடையே வாசிக்கும் பழக்கம் அதிகரித்துள்ளது. நாட்டில் பதிவு செய்யப்பட்ட புத்தகங்கள் 94,067, அதில் நாளேடுகள் 12,511, வார, மாத ஏடுகள் 81,556 என இணையதளத் தகவல் தெரிவிக்கிறது. நாட்டில் பத்திரிகைகள் வாங்குபவர்களின் எண்ணிக்கை 40 கோடிக்கும் அதிகமாக உள்ளது. மக்களிடையே புத்தகங்கள் வாசிப்புத் திறன் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 8.4 சதவீதம் அதிகரித்துள்ளது. மேலும், புத்தகத்தை வாசிக்க நேரம் இல்லை எனக் கூறக் கூடாது. புத்தகத் திருவிழா ஒன்றில் 777 அரங்குகள் அமைக்க முடியும் என்றால், மக்களின் வாசிப்புத் திறன் அதிகரித்துள்ளதாகவே அர்த்தம் என்றார்.

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசியதாவது: ஏப்ரல் 23ஆம் தேதி உலக புத்தக தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் மட்டுமல்லாமல், தினந்தோறும் நாம் புத்தகத் திருவிழாவைக் கொண்டாட வேண்டும். மோகன்தாஸ் காந்தி சிறந்த எழுத்தாளர்களின் புத்தகங்களைப் படித்தே 'மகாத்மா' என்ற உன்னத நிலையை அடைந்தார். கல்வியின் மூலமே தாழ்ந்த நிலையில் உள்ள மக்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வர முடியும் என்று விவேகானந்தர் கூறினார். தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகளின்போது நாம் புதிய புத்தகங்களை வாங்கிப் படிக்கவேண்டும். மற்றவர்களுக்கு பரிசளிக்கும் போது சிறந்த நூல்களையே பரிசாக அளிக்க வேண்டும் என்றும் பொன்னம்பல அடிகளார் தெரிவித்தார்.

நல்லி குப்புசாமி செட்டியார் பேசியதாவது: இந்த ஊருக்கு வருவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எனது பழைய நண்பர்களைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது. நீதியரசர் வெ.ராமசுப்பிரமணியன்

Koviloor Digital Library

நன்றாக பல மேற்கோள்களைக் காட்டி பேசக் கூடியவர்.

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் சிறந்த தமிழறிஞர் என்றார். தமக்கு பதிப்பாளர்களுடன் உள்ள நட்பு குறித்தும் அவர் விளக்கினார்.

தேவகோட்டை பதிப்பாளர்சங்கத் தலைவர் சேது சொக்கலிங்கம் தமது வரவேற்புரையில், இந்தப் பகுதி மக்களின் பெருமையைப் போற்றும் வகையிலும், இளைய சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் வகையிலும், அவர்களின் வாசிப்புத் திறனை வளர்க்கும் வகையிலும் தேவகோட்டை பதிப்பாளர் சங்கம் இந்த புத்தகத் திருவிழாவை நடத்துவதாகத் தெரிவித்தார்.

நகரத்தார் பள்ளிகளின் செயலர் ராமநாதன் தமது தலைமையுரையில், ஒரு ஊரின் வளர்ச்சியானது அங்கு உள்ள கல்வி நிறுவனங்கள் வளர்ச்சியடைவதைப் பொருத்தே இருக்கிறது. நாங்கள் நடத்தியிருந்தால்கூட இவ்வளவு பிரம்மாண்டமாக இந்தப் புத்தகத் திருவிழாவை நடத்தியிருக்க முடியாது என்றார்.

தேவகோட்டை பதிப்பாளர் சங்க செயலாளர்கள் உமா பதிப்பகம் **இராம.லெட்சுமணன்,** குமரன் பதிப்பகம் **எஸ். வயிரவன்** ஆகியோர் புத்தகக் கண்காட்சி ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தனர்.

வானதி பதிப்பகம் ராமநாதன் நன்றி கூறினார்.

முதன்முதலாக புத்தகப் பதிப்புத்துறைக்கு வந்த தேவகோட்டை பதிப்பாளர்களின் குடும்பத்தினர் சிந்நயச் செட்டியார் பேரன் இராகவேந்திரர், முல்லை முத்தையா செட்டியார் மகன் முல்லை மு. பழநியப்பன், சின்ன அண்ணாமலை பேரன் கரு.மீனாட்சி சுந்தரம் (திலக்) ஆகியோர் விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

- *தினமணி 2.11.2014*

Koviloor Digital Library

ஓம் சரவண பவ

14.8.2019

சிறுவாபுரி முருகன் ஆடிக்கிருத்திகை விழா மலர் 2019 குறித்து முருகபக்தனின் வாசகர் கடிதம்

முல்லை பதிப்பகம் மு. பழநியப்பன், மு. இராமநாதன், மு. கருப்பையா அவர்களுக்கு மஞ்சக்கொல்லை முருகபக்தர் **சந்திரசேகரன்** எழுதிக் கொண்டது.

வணக்கம். வணங்கி மகிழ்கிறேன்.

சிவசெந்திமாலை 1 to 52 பாடல் வெளியிட்டுள்ளீர்கள். இந்த பாடல் யார் இயற்றியது? விவரம் குடுத்து இருந்தால் மிகவும் சந்தோசம் அடைவேன். ஆதலால் யார் இயற்றியது என்று அடியேனுக்கு தெரிவிக்குமாறு வேண்டி விரும்பி மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இதற்கு முன் மாலைவகையில் அதாவது முருகனை பற்றி பாடியவர் 15 பேர் ஆவார்கள். அதன் விவரம் குறிப்பிட்டு உள்ளேன்.

அருளாளர் அருளிச் செய்த மாலை வகைகள்

1. அண்ணாமலை முதலியார்
   - இரத்தினகிரி பாலமுருகன் மணிமாலை
2. குமாரசுவாமி புலவர் - இரட்டை மணிமாலை
3. பொன்னம்பலம்பிள்ளை
   - மாலை சித்திரகவி திருவிரட்டை மணிமாலை

Koviloor Digital Library

4. இரத்தினம்
   - இரத்தினகிரி பாலமுருகன் மணிமாலை
5. வேதநாயகன்
   - தொண்டை மானாற்று செல்வச் சந்நிதி முருகன் பாமாலை
6. கந்தப்ப அய்யர் - தயாநிதி மாலை
7. வைத்தியலிங்கம் பிள்ளை
   - திரு சந்நிதி தோத்திர மாலை
8. சிதம்பர சுவாமிகள்
   - திருப்போரூர் முருகன் மாலை
9. சொக்கன் நல்லூர் - நான்மணிமாலை
10. கந்தப்ப தேசிகர் - தணிகை தயாநிதிமாலை
11. உருத்திரசாமி - சண்முகப் பாமாலை
12. அண்ணாமலை முதலியார்
    - பாலமுருகன் பாமாலை
13. கடுக்கன் தியாகராஜ தேசிகர்
    - திருஏரக நவரத்தின மாலை
14. இராமலிங்க அடிகளார் - தெய்வமணிமாலை
15. செந்தமிழ்வாணி ச. மல்லிகா
    - முருகன் மும்மணி மாலை

சிறுவாபுரிக்கு வரும் பக்தர்கள் வேண்டியபடி வீடு, வாகனம், தொழில், திருமணம் என குடும்பம் சிறக்க சிங்காரவேலன் அருள்பாலிக்கிறார். 6 வாரங்களுக்கு செவ்வாய் தோறும் சிறுவாபுரி முருகனை வணங்கினால் நினைத்த காரியம் ஈடேறுமென பக்தர்கள் கூறுகின்றனர்.

Koviloor Digital Library

மழைநீர் சேமிப்பின் முன்னோடி செட்டிநாடு

▲ கலைமாமணி ஆறு.அழகப்பன்
நமது செட்டிநாடு இதழில் வெளிவந்த கட்டுரை ▲

உலக வரைபடத்தில், 'செட்டிநாடு' - பண்பாடு, கட்டடக் கலை, திருக்கோயில்கள், உணவு வகைகள், வாணிபம் முதலிய பன்முகப் பெருமைகள் கொண்டதாக விளங்குகிறது. இவ் வரலாற்றுடன் மழைநீர் சேமிப்புத் திட்டத்திலும் முதலிடம் பெறுகிறது. மறைந்த முதல்வர் ஜெயலலிதா மழை நீர் சேமிப்புத் திட்டத்தை தொடங்கிய பொழுது சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், செட்டிநாட்டுப் பகுதியில் உள்ள மழைநீர் சேமிப்புத் திட்டத்தைப் பற்றி கூறியபொழுது வியந்தாராம். இது வரலாற்றுச் செய்தி. மழையின் பெருமைகள் பற்றி புலவர் நா பாடாத பெருமைகள் இல்லை.

மழையின் பெருமையை தாய் தன் குழந்தைக்கு பாடிக் காட்டி பாடச் சொல்லுகிறார். சப்பாணி கொட்டி அந்தக் குழந்தை சிரித்துக் கொண்டு வானத்தைப் பார்த்து,

மழையே மழையே வருவாயே
மண்ணைச் சேராய் தருவாயே
குடிக்கத் தண்ணீர் தருவாயே
மழையே! மழையே! வருவாயே!

எனத் திரும்பப் பாடுகிறது.

Koviloor Digital Library

வள்ளுவப் பெருந்தகை வான் சிறப்புக்கு என்று ஓர் அதிகாரமே வைத்துள்ளார்.

பாரதிதாசன் அமுது எது? என்று வினா எழுப்பி பல வகையான பொருள்களைக் கூறி, மழைதான் அமுது என்று முடிக்கிறார்.

இப்படிப் பலரும் பாடிய வேளையில், வள்ளுவர் பெண்ணின் பெருமையைக் கூறும் பொழுது 'கணவனைத் தெய்வமாக நினைத்து வாழ்பவள், மழை வேண்டும் என்று நினைக்கும் பொழுது பெய்யும் மழைக்குச் சமம்' என்று கற்புடைய பெண்ணை மழையோடு ஒப்பிடுகிறார்.

மழை, ஐம்பெரும் பூதங்களாக கூறப்படும் நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று என்ற வரிசையில் இரண்டாவதாக இடம் பெறுகிறது.

இவ்வாண்டு மழை பொய்த்ததால் நாடு தழுவிய பிரச்சனையாகிவிட்டது. தமிழக சட்டசபையில் மட்டுமன்றி பாராளுமன்றத்திலும் மழை பெய்யாததால் விவசாயமும், வாழ்வாதாரமும் அடியோடு பாதிக்கப்பட்டுள்ளதை உறுப்பினர்கள், அமைச்சர்கள் எதிரொலிக்கிறார்கள்.

நகரத்தார்கள் 76 ஊர்களில் வாழத் தொடங்கியதும் முதலில் தெய்வத்திற்கு ஒரு கவின்மிகு கோயிலையும், அக்கோயிலுக்கு எதிரே ஓர் ஊருணியையும் உருவாக்கினர். மக்கள் குளிப்பதற்குத் தனியாக குளிக்கும் ஊருணியை உருவாக்கி சுற்றிலும் கம்பிகள் போட்டு பாதுகாத்து வந்தனர், வருகின்றனர். இந்த நீர்நிலைகளை அந்தந்த ஊர்களில் வாழும் பல இன மக்களும் பயன்படுத்த அனுமதித்தார்கள். பருவ மழை, கோடை மழை பெய்யும் பொழுது காட்டிலிருந்து தண்ணீர் ஊருணிக்கு வர ஒரு ஆள் நுழையும் அளவிற்கு மடவாய் கட்டினார்கள். வீடுகளில் உள்ள முற்றத்தில் நான்கு பக்கமும் மேற்கூரையிலிருந்து தண்ணீர் வர பாதுகாப்பான கூடல்வாய் வைத்தார்கள்.

Koviloor Digital Library



கொட்டும் மழையில் வரும் மழைத் தண்ணீரை பிடிப்பதற்கு அண்டா, கடாரம் என்ற பெரிய கொள்கலத்தை வைத்து வடிகட்டி தண்ணீர் பிடித்து சமையல், குடிநீருக்கு ஒரு வருடம் வரை பயன்படுத்தினர். கடாரம், அண்டா இவற்றில் பிடிக்கப்படும் தண்ணீர் இரண்டாண்டுகள் கூட கெடாமல் இருக்கும் என்று மூத்த நகரத்தார்கள் தங்கள் அனுபவத்தைக் கூறுகின்றனர். கடாரத்தின் கொள்ளளவு இரண்டாயிரம் லிட்டர் வரை கூட இருக்கும். 76 ஊர்களில் சில ஊர்களில் 'போரிங் பைப்' போடும் பொழுது 30 அடிக்குள் கூட தண்ணீர் கிடைத்து விடுகின்றது என்று கூறுகின்றனர். ஊருணித் தண்ணீரும் பல மாதங்கள் வரை துளி கூட கெட்டுப் போகாமல் பயன்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு வீட்டிலும் கிணறு உண்டு. தண்ணீர் வற்றி தரை காண முடியாது. இன்று எல்லா வீடுகளிலும் மின்சார சாதனம் (போரிங்) உள்ளது. பெரும்பாலும் ஐநூறு அடிக்குள் தண்ணீர் கண்ணாடி போல கிடைத்து விடும் இன்று பெரிய நகரங்களில் இரண்டாயிரம் அடி தோண்டினாலும் தண்ணீர் கிடைக்கவில்லை என்று பாதிக்கப்பட்டவர்கள் கூறுகிறார்கள்.

இளையாற்றங்குடி என்ற தலத்தில் நகரத்தார்கள் ஏழு பிரிவினர் உண்டு. அந்த ஒவ்வொரு கோயிலுக்கும் ஓர் ஊரணி தனித்தனியே உண்டு. ஒக்கூரார் ஊருணி மிகப்பெரிய வியக்கும் ஊரணியாகும். அந்த கிராமத்தில் மட்டும் ஏழு ஊருணிகள் உள்ளன. மேலும் ஓரிரு ஊருணிகளும் கட்டியுள்ளார்கள். தவத்திரு

Koviloor Digital Library

சங்கராச்சாரியார். இளையாற்றங்குடியில் தங்கிய பொழுது பெரிதும் பாராட்டியுள்ளார்.

ஓர் ஊரில் இரண்டு ஊருணிகள் இருந்தால் ஒன்றை பழைய ஊருணி என்றும் மற்றொன்றை புது ஊருணி என்றும் அழைத்தனர்.

இப்படிப்பட்ட தொலைநோக்குப் பார்வையுடன் உருவாக்கப்பட்ட நீர் நிலை ஆதாரங்களை விட விவசாயத்திற்கு என்று ஊரில் 'கண்மாய்' என்று சொல்லக்கூடிய ஏரியைப் போன்ற நீர் தேக்கங்களும் உண்டு. ஓர் ஊருக்கு இரண்டு கண்மாய்கள் கூட இருக்கும். ஒவ்வொரு கண்மாயும் வரலாற்று அடிப்படையில் அல்லது ஊர்ப்பெயரால் அந்தக் கண்மாய் அழைக்கப்படும். அந்தக் கண்மாயை வைத்து விவசாயம் நடக்கும்.

இத்தகைய கண்மாய் உள்ள இடத்தை பிற இடங்களில் ஏரி என்கின்றனர். அந்த ஏரிகள் தூர் வாராமலும், வீடு மற்றும் கல்லூரிகளைக் கட்டி வீணடித்து விட்டு இன்று தண்ணீருக்கு ஏங்கி நிற்கிறோம். செட்டிநாடு வானம் பார்த்த பூமி. காவிரி, கங்கை, யமுனா, சரயு, வைகை, கொள்ளிடம் இப்பகுதியில் ஓடவில்லை. அரசு, 'செட்டிநாடும் நீர்நிலை ஆதாரங்களும்' என்ற பெரும் ஆய்வை நடத்துவது கடமையாகும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் பயன்படுத்திய ஊருணி என்ற சொல்லுடைய குறள்,

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு

என்பதற்கு ஏற்ப, நூற்றுக்கணக்கான ஊருணிகளும், பேரறிவாளர்களும் நிறைந்தது நமது செட்டிநாடு.

- நமது செட்டிநாடு, ஜூலை 2020

▲

Koviloor Digital Library

19ஆம் நூற்றாண்டில் நகரத்தார்களின் தர்ம சிந்தனை

- V.L. இராமநாதன்

திருவள்ளுவர் காலத்தில் உணவுக்கூடங்கள் வியாபார ரீதியாக இல்லை. ஆகவே விருந்து உபசாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

அது போல தங்கும் விடுதிகளும் அப்போது இருந்து இருக்க வாய்ப்பில்லை. ஆகவே நகரத்தார் தொலை நோக்கு பார்வையில் விடுதிகளை அமைத்து உள்ளனர்.

ஓயா மடம் ஆகட்டும் கோட்டையூர் 200 புள்ளிகளின் ஒரு சாரரின் மெ.க.மடம் ஆகட்டும் கட்டுமானங்கள் இராஜாக்களை பின்பற்றி எழுப்பிய கோவில் மாதிரி கல் கட்டடமாக உள்ளன.

நாங்களும் கோட்டையூர் அன்பர் திரு மு.சொ.அழ. அவர்களின் சிபார்சில் மெ.க. அன்ன சத்திரக் கட்டடத்தில் தங்கினோம். மகிழ்ந்தோம்.

அங்கே தங்கியதால் மேற்படி அழ. அவர்களின் ஏற்பாட்டில் சத்திரத்தில் உள்ள திரு. கோவிந்தன் என்ற பெரியவர் அழைத்து சென்று அருள்மிகு அண்ணாமலை உண்ணாமலை யை தரிசிக்க வைத்தார்.

அட்டாச் பாத் ரூம்புடன் கோவிலூர் மடத்தின் தங்கும் விடுதி பஸ்ஸ்டாண்டு அருகில் இருப்பதாக

Koviloor Digital Library

தேவகோட்டை திரு மீனாட்சி சுந்தரம் தகவல் அளித்தார்கள்.

காரைக்குடி கொரட்டியார் வீடு சாதுக்கள் மடம் மற்றும் காரைக்குடி நகரத்தார் குடும்பத்திற்கு சொந்தமான முத்து. அரு. வேதபாட சாலை, ஓயா மடம் மற்றும் மெ.க.அன்ன சத்திரம் எல்லாம் கோவில் வாசலில் இருந்து நடந்து போகும் தூரம் தான்.

நகரத்தார் சமூகம் உயர்ந்தது என்பதை நகரத்தார் இளைஞர்கள் சிந்திக்க வேண்டும். அதன் அருமையை உணர வேண்டும். ஆகவே சிறு குறிப்பு சேகரித்து பாலதண்டாயுதபாணி மலர் இன்று வெளியிட்டுள்ளதற்கு காரணம் உண்டு...

இன்று பலரும் பட்டதாரிகள் ஆகி பெரிய பதவியில் இருந்தாலும் நம் முன்னோர்களின் வாழ்வின் சிறப்போடு ஒப்பிட முடியாது. அக் காலம் முதல் உள்ள நம் சமூகத்தின் அருமை பெருமைகளை உணர்ந்து இளைய சமுதாயம் விலகிச் செல்லக்கூடாது. தலைமுறை தலை முறையாக நம் பாரம்பரியத்தை கட்டிக்காக்க வேண்டியது ஒட்டு மொத்த நகரத்தார்களின் இளம் பருவத்தினரின் கையில்.

அன்புடன்

State Express **V.L. Ramanathan**

ஆசிரியர், பாலதண்டாயுதபாணி மலர்.

21, 22.02.2020.

Koviloor Digital Library

நமசிவாய

காளஹஸ்தி கோவிலில் செட்டியார் சிலை

இந்த சிலை காளஹஸ்தி கோவிலின் வளாகத்தில் (முன்பக்கம்) கோவில் நிர்வாகத்தாரால் வைக்கப் பட்டுள்ளது.

இந்த சிலை வடிவத்தில் இருப்பவர் ஒரு புண்ணிய சீலர். சிவனடியார். பெயர் ராமநாதன் செட்டியார் தேவகோட்டை பெரியமைனர் வீட்டை சேர்ந்த புண்ணியவான். இலுப்பக்குடி

Koviloor Digital Library

கோவிலை சேர்ந்தவர். எங்கள் பங்காளி. இந்த புண்ணியவான் அந்தக்காலத்திலேயே பல லட்சரூபாய்கள் செலவு செய்து இந்த கோவிலுக்கு திருப்பணிகள் செய்துள்ளார். ஓதுவாமூர்த்திகளை ஆதரித்துள்ளார்.

இந்த புண்ணியவான் இக்கோவிலில் ஒரு சிவராத்திரி அன்று அம்பாள் (ஞானப்பூங்கோதை) சன்னதியில் தன் மனைவியுடன் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும்போது தன் மனைவியின் தாலியை வாங்கி (மனைவியும் எந்தவித ஆட்சேபனையும் இன்றி தனது தாலியை கழற்றி செட்டியாரிடம் கொடுத்துவிட்டாராம்) அர்ச்சகரிடம் கொடுத்து அம்பாள் கழுத்தில் அணியைச் சொல்லி சொன்னாராம். அர்ச்சகரும் செட்டியாரின் கட்டளைப்படி ஆச்சியின் தாலியை அம்பாள் கழுத்தில் அணிவித்தாராம்.

சிவன் ராத்திரி முடிந்து செட்டியார் தனது மனைவியுடன் விடுதிக்கு சென்று ஓய்வு எடுக்கும்போது இயற்கை எய்திவிட்டதாக சொல்வார்கள்.

அப்பேற்பட்ட புண்ணியவானுக்கு கோவில் வளாகத்தில் ஞாபகார்த்தமாக கோவில் நிர்வாகம் சிலை வைத்திருப்பது பெருமைக்குரிய விஷயமாகும். எங்கள் ஊர் தேவகோட்டைக்கும் பெருமை.

திருச்சிற்றம்பலம்.

தகவல்: முல்லை மு.கருப்பையா

▲

Koviloor Digital Library

திருமணத் திருமுகம்

வருஷாபிக அழைப்பு

பார் புகழும் சொக்கேசர்
பாண்டி மகள் மீனாட்சியின்
ஊர் மெச்சும் திருமணச்செய்தி
உரைக்க வரும் பத்திரிகை.

இனியன படைத்துக்காக்கும் ஈசனாம் இறைவன் வாசப்
புனுகணி சொக்கலிங்கன் பொற்பதம் போற்றி செய்வாம்
கனிஇதழ் அமுதச் செவ்வாய் கயற்கணாள்
மணங்கொள்காட்சிப்
புனிதமார் சொக்கனேந்தல் புகழ்க் கொடிபறக்கவென்றே

- க.தேசிகன்.

அரு. முரு, சொக்கலிங்கம்புதூர்

அன்புடையீர்!

எங்கள் சொக்கலிங்கம்புதூர் சிவாலயத்தின் கண், அம்மையப்பனாய் எழுந்தருளியிருந்து ஆண்டருள் பாலிக்கும் எம் பெருமான், புனுகணி இறைவராம் புகழ் மிகு சொக்கலிங்கப் பெருமானுக்கும் பொற்றாலி வழங்கிப் புகழ்மணம் கூட்டி

Koviloor Digital Library

வைக்கும் பொன்மலை வல்லியாம் அன்னை அருள்மிகு மீனாட்சி அம்மைக்கும் வருஷாபிஷேக விழா காலை ஜெபம், அபிஷேகம், அலங்காரம், திருமணக்காட்சி, இரவு அலங்கார தெரிசனம், அர்ச்சனை, அம்மையப்பன் திருவீதி உலா, நாதஸ்வர இசை, வாண வேடிக்கையுடன் இனிது நிகழ இருப்பதால் தாங்கள் சுற்றம் சூழ வருகை தந்து விழாவில் கலந்து கொண்டு அம்மையப்பன் அருள்பெற்று நலமெய்த ஆர்வமுடன் அழைக்கும்.

அன்பன்

அரு. முருகப்பன்

வேணும்

ஸ்ரீ மீனாட்சி சுந்தரரேசுவரர் துணை

சிவாலயத்தின் சார்பாக "திருப்பொற்றாலி" பெற விரும்புவோர் கவனத்திற்கு

திருமணம் ஆகவேண்டிய பிள்ளைகள் நேரில் வந்து அம்மையப்பன் திருமணக்காட்சியை தெரிசித்து வணங்கிப் பிரார்த்தித்து ஆசியுடன் பொற்றாலி பெறுவது தான் சிறப்பு. அவ்வாறு பெற்றவர்கள் விரைவிலேயே திருமணப்பேறு பெறுகிறார்கள். இது அன்னை அருள்வாக்கின் உறுதி. அவ்வாறு பெற விரும்புவோர் ரூ.800/- (ரூபாய் எண்ணூறு) செலுத்தி நட்சத்திரம் பெயருடன் பதிவு செய்து டோக்கன் பெற்றுக்கொள்ள வேண்டியது. மற்றவர்கள் மூலம் பதிவு செய்பவர்கள் அவர்களிடமிருந்து டோக்கனைப் பெற்றுக் கொண்டு நேரில் வரவேண்டியது மணியார்டர் மூலம் பணம் அனுப்புவோர்கள் மணியார்டர் கூப்பனில்

Koviloor Digital Library

தங்களது சரியான முகவரியையும், டோக்கன் பெற்றுக் கொள்ளுகிற விபரமும் நட்சத்திரம் பெயருடன் தெளிவுற எழுதி அனுப்ப வேண்டிய முகவரி.

நா. அழகப்பன்.
வீ.மு.வீதி. சொக்கலிங்கம்புதூர் - 630101
செல் : 9444444690

சொக்கலிங்கம்புதூர் வர டவுன் பஸ் நேரங்கள்

5ம் நம்பர் பஸ் காரைக்குடியிலிருந்து வர

காலை 7.15, 10.15 மாலை 12.40, 3.45, 6.50 இரவு 10.10,

திருமயத்திலிருந்து வர

காலை 8.15, 11.30, மாலை 2.25, 5.30, இரவு 8.00

6A பஸ் காரைக்குடியிலிருந்து வர

காலை 6.30, 11.00 மாலை 5.30 இரவு 8.00

பள்ளத்தூரிலிருந்து வர

காலை 8.00, 12.20, மாலை 6.15, இரவு 9.00

சென்னையிலிருந்து காரைக்குடி வரும் பேருந்தில் வருபவர்கள் சூரக்குடி நால்ரோட்டில் இறங்கி பள்ளத்தூரிலிருந்து வரும் காலை 8.00 மணி பேருந்திலும் வரலாம். அழகர்மலையான் நகரப் பேருந்து நிர்வாகத்தினரால் காரைக்குடியில் இருந்தும், திருமயத்தில் இருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும்.

தகவல்: முல்லை மு.இராமநாதன்

▲

Koviloor Digital Library

உ

சிவமயம்

அருள்மிகு ஸ்ரீகாமன்ராஜா துணை

பொற்றாலி வழங்குதல் விழா

பொற்றாலி வழங்கும் விழாவிற்கு வருகை புரிந்துள்ள அனைவரையும் வருக வருக என இருகரம் கூப்பி அன்புடன் வரவேற்கிறோம்.

பொற்றாலி வழங்குதல்

திருமணம் ஆகாத ஆண்/பெண் இருபாலருக்கும் இந்த ஊர் நகரச் சிவன்கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதம் சுவாதி நட்சத்திரத்தன்று சுவாமி அம்பாளுக்குத் திருக் கல்யாணம் முடிந்த பின் முன்பதிவு செய்தவர்களுக்குப் பொற்றாலி வழங்கப்படுகிறது. இதைப் பெற்றவர்களுக்கு விரைவில் திருமணம் கூடி வருவது கண்கூடாகக் கண்ட உண்மை. நகரத்தார்கள் மட்டுமின்றி எல்லா சமூகத்தினருக்கும் சுமார் 900 எண்ணிக்கையில் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

இராசிக் கயிறு

பொற்றாலி பெற்றபின் அந்தப் பொற்றாலியை காமன்ராஜா திருவடியில் வைத்து பூசாரியின்

Koviloor Digital Library

அருளாசியோடு, இராசிக் கயிறையும் பெற்றுச் செல்லவும்.

இராசிக்கயிறு திருமணம் கைகூட, குழந்தைப்பேறு உண்டாக, குடும்ப ஒற்றுமை மேலோங்க, தொழில்வளம் சிறக்க, செல்வம் பெருக, ஆரோக்கியமான நல்வாழ்வு வாழ காமன்ராஜா இராசிக் கயிறு அணிவது மிக மிக நன்று.

இவ்வூரில் ஜாதிமத பேதமின்றி மற்ற சமூகத் தினருடன் நகரத்தாரும் ஒற்றுமையாக இருந்து ஊர்ப் பெருமையைச் சிறக்கச் செய்வது போல் எல்லோரும் சிறப்புடன் வாழவேண்டுமென காமன்ராஜாவை வேண்டி, வழிபட்டு செல்லுங்கள். இந்தச் சிறப்புமிக்க காமன்ராஜா கோவில் நமது சிவன் கோவில் அருகே உள்ளது. இக்கோவிலில் மன்மதனும் ரதியும் தெய்வங்களாக உள்ளனர். தமிழகத்திலே காமனுக்குக் கோபுரத்துடன் கூடிய கோயில் இங்கு மட்டுமே இருப்பது ஒப்பற்ற தனிச்சிறப்பாகும். ஊர் தோன்றிய காலத்தில் முதன் முதலில் தோன்றிய தெய்வம் காமன்ராஜா. மேலும் இவ்வூரின் காவல் தெய்வமே காமன்ராஜாதான் என்று நாட்டார்களும், நகரத்தார்களும் ஒன்றுகூடி, குறிப்பாக பழ. முத்தையா குடும்பத்தாரும் காமன் திருவிழாவினை சிறப்பாக ஈடுபாட்டுடன் செய்து வருவதை அனைவரும் நன்கு அறிவர்.

நீங்கள் நினைத்து வந்த காரியம் விரைவில் கைகூடும் என்பது உண்மை! முற்றிலும் உண்மை!

காமன்ராஜா துணை இருப்பார்!
சொக்கலிங்கம் மீனாட்சி அருள்புரிவார்!

- தகவல் : **முல்லை மு. இராமநாதன்.**

Koviloor Digital Library

கேட்ட வரம் தரும் கோட்டை அம்மன்

▲ தேவகோட்டை கருப்பஞ்செட்டியார் ▲

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் கேட்ட வரம் தரும் கோட்டை அம்மன் திருவிழா பற்றி சில வரிகள்.

ஒவ்வொரு ஆண்டும் ஆடிமாதம் காப்புகட்டி 15 நாட்கள் வெகு சிறப்பாக நடைபெறும். இந்த 15 நாட்களும் கோட்டையம்மனுக்கு காலையிலும், மாலையிலும் அபிஷேகம் வெகு சிறப்பாகவும், அலங்காரமும் சிறப்பாக நடைபெறும்.

தேவகோட்டையில் வசிக்கும் நகரத்தார் பெரு மக்கள் தற்சமயம் எந்த ஊரில் வசித்து வந்தாலும் கோட்டையம்மன் திருவிழா ஆரம்பித்ததும் தங்களுடைய சொந்த ஊரான தேவகோட்டைக்கு குடும்பத்துடன் வந்திருந்து கோட்டையம்மனை தரிசித்து அம்மனின் அருளைப் பெற்று செல்வார்கள். ஆடிமாதம் செவ்வாய்கிழமை, வெள்ளிக்கிழமை, மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்



Koviloor Digital Library

அம்மனுக்கு பொங்கல் வைத்தும், மாவிளக்கேற்றியும் அம்மனை வழிபடுவார்கள். தேவகோட்டை நகரத்தார்கள் சில குடும்பங்களில் முதல் குழந்தை பிறந்தால் (ஆண் அல்லது பெண்ணாக இருந்தாலும்) அம்மனுக்கு முடி இறக்கி, தொட்டில் கட்டி வேண்டியதை நிறைவேற்றி கொள்வார்கள். கோட்டையம்மன் மிகவும் சக்தி வாய்ந்த அம்மன். கேட்ட வரத்தை கேட்டபடி நிறைவேற்றுவதில் அற்புத சக்தியுடையவள். அம்மனை வேண்டி பிரகாரம் வருவார்கள், அவரவர் விருப்பப்படி 108 பிரகாரம், 1008 பிரகாரம் என பிரகாரம் சுற்றி விடுவார்கள்.

இந்த 108 பிராகரத்தையும் 1008 பிரகாரத்தையும் முதல் நாள் ஆரம்பித்து 15 தினங்களில் முடித்து விடுவார்கள். தினமான 15வது நாளில் அம்மனை நீரில் வைக்கும் நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெறும். இத்துடன் கோட்டையம்மனின் ஆடித் திருவிழா நிறைவு பெறுகிறது. நகரத்தார் பெருமக்களும், மற்ற இனத்து பெருமக்களும் கோட்டையம்மனின் பரிபூரண அருளால் எல்லா நலன்களையும் பெற்று வாழ்க வளமுடன்.

தொடர்புக்கு: 99520 41676,
044-2223 6985.

Koviloor Digital Library

தாலாட்டுப் பாடலில் செட்டிநாட்டு ஊர் பெயர்கள்

திருப்புகழ்மணி அழ. தையல் நாயகி B.Sc., M.Phil.
ஆத்தங்குடி,
இணைச்செயலாளர், திருவொற்றியூர் நகரத்தார் சங்கம்

நகரத்தார் ஊர் பெயர்களை முதன் முதலில் தாலாட்டுப் பாடலில் பாடி வெளியிட்டவர்.

ஆராரோ ஆரிராரோ
ஆராரோ ஆரிராரோ
கண்ணான கண்ணுமணி - நீ
கை நிறைந்த பொன்னுமணி
எண்ணாத சின்னமணி - நீ
ஏனழுதாய் சொல்லுமணி
யார் யாரோ நிற்கையிலே - நீ
எனைப் பார்த்து ஏனழுதாய்
பேர் கேட்டு நிற்கையிலே - கண்ணே
பேசாமல் ஏனழுதாய் - திரு
ஒற்றியூரில் அழுகின்றாய் - நீ
ஓயாமல் அழுகின்றாய்
துயர் துடைக்க நானிருக்கேன்
நீயும் தூங்கி விட நானிருக்கேன்
எந்த ஊரு சொல்லிவிடு - கண்ணே
உன்னை எப்படியும் சேர்த்திடுவேன்
அந்த ஊரைச் சொல்லிவிடு
அழுகை கொஞ்சம் நிறுத்திவிடு
ஊரெல்லாம் சொல்லுகிறேன் - அதை
உந்தன் காதில் போட்டுக்கிட்டு

Koviloor Digital Library

யாரெல்லாம் அங்கு சொந்தமென்று - அவர்
பேரையெல்லாம் சொல்லிக் காட்டு
நகரத்தார் ஊர் நமக்கு - கண்ணே
தொண்ணூறு வட்டகையாம்
நகரத்தார் நாமிருக்க - அவை
நல்லதொரு கொட்டகையாம்
எழுப்பத்தாறு ஊரிருக்கு - கண்ணே
ஏனோ சில மறஞ்சிருச்சு
எல்லா ஊருக்கும் ஊட்டிப்போறேன் - கண்ணே
எல்லையெல்லாம் காட்டுகிறேன் (ஆராராரோ)

கோட்டை என்றா ஊரிருக்கும்? கண்ணே
கோட்டை என்றால் மூன்றிருக்கே
நாட்டரசன் கோட்டையுண்டு - நல்ல
கண்ணாத்தா சாமியுண்டு
அலவாக் கோட்டை தேவ கோட்டை
அதில் எந்தக் கோட்டை உந்தன் கோட்டை
கோட்டைக்குள்ளே ஊரிருக்கா?
குழந்தைக்கங்கு யாரிருக்க
பாட்டுக்குள்ளே ஊரிருக்கே - கண்ணே
பாட்டிலிலே பாலிருக்கே
குடி என்றா ஊரிருக்கும் - கண்ணே
குடியதுவும் ஆறிருக்கே
அரியக்குடி, ஆத்தங்குடி - கண்ணே
ஆள வந்த காரைக்குடி
பனங்குடி, பலவாங்குடி - கண்ணே
கீழ ஒருப் பூங்குடியாம்
எந்தக்குடி உந்தன் குடி - என் கண்ணே
நீயும் கொஞ்சம் பாலைக்குடி
மாமம் குடி எந்தக்குடி - மயிலே
அம்மா குடி எந்தக்குடி - மயிலே
அம்மா மாறியதும் எந்தக்குடி

Koviloor Digital Library

மண்ணின் குருவுக்கு ஆலங்குடி - அவர்
மகிமையை நீயும் தெரிஞ்சுக்கடி

ஊர் என்றா ஊரிருக்கும்? கண்ணே
ஊருக்குள்ளே பத்திருக்கே!
கண்டனூரா, பள்ளத்தூரா - கண்ணே
கான்வென்ட்டுக் கோட்டையூரா?
ஆணாத் தெக்கூர், செவ்வூரா - கண்ணே
அது இல்ல வெற்றியூரா?
அமராவதிப் புதூரா - கண்ணே
அதற்கடுத்த ஒக்கூரா?
சொக்கலிங்கம் புதூரா - கண்ணே
சொல்லு சொல்லு செம்பனூரா
எந்த ஊரு உன் ஊரு - உனக்கு
என்ன பேரு நீ யாரு?
ஐயா யாரு? ஆயா யாரு? - கண்ணே
அவர்களுக்கும் சொந்தம் யாரு
அத்தை ஊரு எந்த ஊரு - அன்பு
அண்ணன் தம்பி அவராரு
மாமாவுக்கு என்ன தொழில் - அவர்
மலயாவூக்கும் போனவரா?
ஐயாவுக்கும் என்ன தொழில் - அவர்
வட்டிக் கடை வைத்தவரா?

புரம் என்றா ஊரிருக்கும்? கண்ணே
புரம் கூட ஆறிருக்கே
நாச்சியா புரமதுவா? - நல்ல
நடராச புரமதுவா
நாச்சியம்மா அங்கிருக்க - நமக்கு
நல்லதெல்லாம் செஞ்சிருக்கா
சொக்க நாத புரமதுவா? இரண்டும்
லெட்சுமி புரமதுவா?

Koviloor Digital Library

சோழ புரமதுவா? சோலைக்கிளி
உன் ஊரதுவா?

பட்டி என்றா ஊரிருக்கும் - கண்ணே
பட்டி என்றால் முவ்வேழிருக்கே
வேகுபட்டி, கல்லுப்பட்டி - நெய்நந்தி
வேந்தம்பட்டி, நற்சாந்து பட்டி
வலையபட்டி, கடியாபட்டி - கம்மா
கண்டவராயன் பட்டி
உலகப் புகழ் பிள்ளையார் பட்டி
உருகி பக்தர் பாடும் பட்டி
மகிபாலன் பட்டி, பனையபட்டி
மதகுபட்டி, மிதுமலை பட்டி
மறுகா ஒருபட்டி சின்னக் குட்டி
குருவிக் கொண்டாம் பட்டி, ஒருபட்டி
சிறுகூடற் பட்டி கூடக் கண்ணே
கிழச்சீவற் பட்டியுண்டு
சிறு பூவே அழுகாதே - ஊருக்கு
நாம் சிங்காரித்துச் செல்லலாமே
தேனிபட்டி, ஆவணிப்பட்டி
தேடிடுவோம் நேமத்தான்பட்டி
பொன்னாம் புதுப்பட்டி - பொறு
பொறு கொப்பனாபட்டி
ஊருக்கெல்லாம் கடைசியிலே
உலகம்பட்டி தானிருக்கும் - இதில்
எந்தப் பட்டி உந்தன் பட்டி
எடுத்துச் சொல்லு செல்லக்குட்டி

அப்பச்சியும் என்ன பேரு? அன்பு
ஆத்தாவும் என்ன பேரு?
இப்படியே யழுதா
எப்படி நான் என்ன செய்வேன்?

Koviloor Digital Library

சிரி என்றால் சிரிப்பாயோ? - நீ
சரி என்று இருப்பாயோ?
புரி என்றா என் ஊரிருக்கும் - கண்ணே
புரி கூட நாலிருக்கே!
அழகாபுரி மூனிருக்கே - மேலச்
சீவல்புரி ஒன்றிருக்கே
எந்தப்புரி உந்தன் புரி - கண்ணே
எடுத்துச் சொல்லி கொஞ்சம் சிரி
கடைத் தெருவும் கூட்டிப் போறேன்
கண்டதெல்லாம் வாங்கித் தாரேன்
ஊரைமட்டும் நியுஞ் சொல்லு
உலகமெல்லாம் வாங்கித் தாரேன்

வயலென்றா ஊரிருக்கும்? சின்ன
வண்ணக்கிளி குறி சொல்லு
வயலென்றால் ஐந்திருக்கே - அதில்
வரப்பெல்லாம் நெல்லிருக்கே
சிறு வயலும் ரெண்டிருக்கே
கண்ணே சிறாவயலும் ஒன்றிருக்கே
புது வயல், ஆறாவயல் - இதில்
எந்த வயல் உந்தன் வயல்

மங்கலமா உந்தன் ஊரும்
மயக்கம் விட்டு நீயுஞ்சொல்லு
மங்கலத்தின் மூனிருக்கே - எந்தன்
மங்கலமே என்ன சொல்ல?
கொத்த மங்கலமாம் அதுஒன்று
பட்ட மங்கலமாம் அது ஒன்று
கடைசியிலே வந்ததாம் - கண்ணே
காளையார் மங்கலமாம்
விடையென்ன விடையென்ன? கண்ணே
விடுகதையைப் போலாச்சே

Koviloor Digital Library

இடையென்ன கடையென்ன - கண்ணே
முதலென்ன உன் ஊராச்சே
கண்ணுமணி சிவந்திருச்சே - சின்ன
கருத்தமணி சோந்திருச்சே
இன்னும் சில ஊரிருக்கே - அவை
எல்லாம் ஒன்று தானிருக்கே
வரம் என்றால் இராயவரம் - நீயும்
வாங்கி வந்த நல்ல வரம்
ஏரி என்றால் பாகனேரி - என்றும்
நீ உயர வேண்டும் படி ஏறி
சிலையென்றால் விரயாச்சிலை - சின்ன
கண்ணே நீயும் ஒரு தங்கச் சிலை
குளம் என்றால் கருங்குளமே - நீயும்
விட்ட கண்ணீர் பெருங்குளமே

தாணிச்சா வூரணியாம் - தனியே
ஒரு விரா மதியாம்
பூலாங்குறிச்சி ஒன்றாம்
பூப்பூக்கம் குளிப்பிறையாம்
அரிமழமாம், ராங்கியமாம்
ஆனா முத்துப் பட்டினமாம்
கண்டரமாணிக்கமாம் - கல்லல்
கானாடு காத்தனாம்
கோனபட்டு, நெற்குப்பை - அடுத்த
மானகிரி சக்கந்தி
காஞ்சிப் பட்டு கண்ணுமணி - நீயும்
கை நிறைந்த செவ்வந்தி
நகரத்தார் ஊர் நமக்கு
நல்ல தொரு வட்டகையாம்
நகரத்தார் நாம் வாழ - அலை
நல்ல தொரு கொட்டகையாம்

Koviloor Digital Library

கோயில் பல இங்கிருக்கு - கண்ணே
கோபுரங்கள் உயர்ந்திருக்கு
கோமகனே ஊருனக்குக்
கோட்டைக் குள்ளா ஒளிந்திருக்கு

நகரத்தார் ஊர் நமக்கு
எழுபத்தாறு தானிருக்கு
உலகத்தார் போற்றும்படி
நமக்கு நல்ல பேரிருக்கு
மொத்தம் ஊரு எழுபத்தாறு
அதில் உந்தன் ஊரை நினைத்துக் கூறு
மோகனமே சொல்லி விடு - உன்னை
மொதல்ல கொண்டு சேர்த்திடுவேன்
வாகனமே சொல்லி விடு - உன்னை
வாடாமல் சேர்த்திடுவேன்
சின்னக்காரு ஒன்றிருக்கு - அதில்
சீக்கிரமே சென்றிடலாம்
வண்ணக்காரு ரெண்டிருக்கு - ஒன்றை
வாடகைக்கு எடுத்திறலாம்
உரித்துப் பழம் தின்ன வேண்டும்
உனக்கு உறிஞ்சிடவே ஜீஸிருக்கு
சிரித்தபடி கண்ணுறங்கு - என்
சின்னக் கண்ணே கண்ணுறங்கு
ஸ்ரீ ராமர் துணையிருப்பார் - கண்ணே
சீதையரும் துணையிருப்பார்
சின்ன முத்தே கண்ணுறங்கு - எந்தன்
சிப்பி முத்தே கண்ணுறங்கு
சொக்கநாதர் துணையிருப்பார் - மதுரை
மீனாட்சி துணையிருப்பார்
படப்புச் சாமி துணையிருப்பார் - நம்ம
பட்டினத்தார் துணையிருப்பார்.

Koviloor Digital Library

சிவமயம்

சிறுவாபுரி அமர்ந்த சிவமைந்தன் தாள்பணிந்தால்
பெருவாழ்வும் வளமும் பெருகி நிற்கும் உண்மையே

அருள்மிகு அன்னை தையல்நாயகியம்மன் துணை வரவேணும்

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

ஆரோக்கியமே ஆனந்தம்
தரமே எங்கள் தாரகமந்திரம்

M/s. ஓம் சக்தி ஆயில் இண்டஸ்ட்ரீஸ்

வரிச்சிக்குடி காரைக்கால் - 609 609
தொலைபேசி : 04368-265330

எங்களின்

இராஜேஸ்வரி பிராண்ட் நல்லெண்ணெய்,
இரோஜேஸ்வரி பிராண்ட் கடலெண்ணெய்,
ஆரோக்யா நல்லெண்ணெய்,
ஆரோக்யா கடலெண்ணெய்,
K.S. பிராண்ட் சன் பிளவர் ஆயில்
சக்தி கோல்டு பாமாயில்

ஆகியவற்றை வாங்கிப்
பயனடைய வேண்டுகிறோம்.

Koviloor Digital Library

சிறுவாபுரி அமர்ந்த சிவமைந்தன் தாள்பணிந்தால்
பெருவாழ்வும் வளமும் பெருகி நிற்கும் உண்மையே

முருகன் துணை

With best complements from

லேனா டிரேடர்ஸ்

LENA TRADERS

RADHA KRISHNA TIMBERS,
24/1&2 Plot, Madurai Main Road,
Karaikudi - 630 001
Phone: 04565 239810
Mobile: 098424 89925